

ஐரோப்பியப் பதிப்பு

நிழமுரசு

முரசு 03 | 22 ஒகஸ்ட் - 4 செப்டெம்பர் 2017 | முழக்கம் 054

பிரான்ஸ் வாழ் வர்த்தகர்களே

உங்கள் வர்த்தக விளம்பரங்களை எமது தளத்தில் விளம்பரம் செய்து அதிக பயன் பெறுங்கள்

பரிஸ்தமிழ் www.ParisTamil.Com .கொம்

பரிஸ்தமிழ்.கொம்மில் விளம்பரம் செய்ய தொடர்பு:

செல்பேசி: 06 64 96 80 79

தொலைபேசி: 09 70 40 50 71

www.paristamil.com

கிழக்கை மட்டுமல்ல வடக்கையும் இழந்துவிடப் போகிறது தமிழினம்!

பிரபாகரம்

தமிழ்மத்தில் அத்துமீறும் சாவக-ஹம்பேயர்கள்



சிங்கள மயமாகும் கிழக்குப் பல்கலைக்கழகம்

தேசியத் தலைவரை இழிவுபடுத்துமோ ஒக்கு மிகிலடு?

ஓயாமல் தொடரும் விபத்து மரணங்கள்!

நாடு கடந்த அரசின் மீது ஏன் சிலருக்கு இத்தினை வெறுப்பு??

BHARATH

51,67 Rue Louis Blanc
75010 Paris - France
01 42 09 35 84
01 58 20 06 20

Spécialitées Indienne et Srilankaise
www.restaurantbharath.com
www.cafe-bharath.com

V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92
E-mail: vtsuperstore@organge.fr

Gopal and co Supermarche
72 rue Louis Blanc, 75010 Paris
M°: La chapelle ou Gare du Nord
Tél.: 01 46 07 11 10 | Fax: 01 46 07 13 03

Boulangerie - Pâtisserie
208 Rue du Faubourg Saint Denis - 75010 Paris
Tél: 01 42 05 00 00 / e-mail : hotbreads@hotmail.fr
Hot Breads
திருமணம், பிறந்தநாள் மற்றும் அனைத்து சுபகாரியங்களுக்கும் தேவையான கேக்குகள், சிற்றுண்டி வகைகள், பாண், பிஸ்கட்டுகள் சிறந்த முறையில் செய்து தரப்படும்
Eggless கேக்குகள் எமது சிறப்புத் தயாரிப்புக்கள்

எங்கேயும்... எப்போதும்...
Kingstravels
A Better way to fly!
நியாயமான கட்டணம்....
நம்பிக்கையான பயணத்திற்கான உத்தரவாதம்...
30, rue Philippe de Girard - 75010 Paris
Tél: 01 42 09 19 09 - 01 40 38 18 27
M°: La Chapelle / Gare du Nord email: kingstravels@orange.fr

IMPORT EXPORT
லாச்சப்பல்
நிஷான்
சுப்பர் மார்கெட்
பல்பொருள் வாணிபம்
64, rue louis blanc, 75010 Paris
Tél./Fax: 01 44 72 06 03
M°: La Chapelle Gare du nord

Express station service
• எரிபொருள் நிரப்பு நிலையம்
• பணம் அனுப்பும் சேவை
• புத்தம் புதிய கைத்தொலைபேசிகள்
• தொலைபேசி உதிரிப்பாகங்கள்
MoneyGram. money transfer
Ria Money Transfer
WU WESTERN UNION
Sigue MONEY TRANSFER
நம்பிக்கை,
நாணயம்,
உத்தரவாதம்...
25 boulevard de la Chapelle Tél.: 01 40 18 07 44
75010 Paris M°: La chapelle E-mail: express-station@hotmail.com

AACHI BOUCHERIE
பொண்டியில் ஆச்சி இறைச்சிக்கடை – உங்களிற்காக மிகவும் மலிவு விலையில் தரமான இறைச்சி வகைகள்
HALAL
ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, உயிர்க்கோழி, கோழிக்கால், பங்கிறைச்சிகள்
120 Rue Roger Salengro 93140 Bondy Tél : 07 51 08 14 83 / 07 51 27 72 38

VS CO Cash & Carry
www.vsco.com
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04

ASCES

26 ஆண்டுகளாக நடைபெறும் பதிவு செய்யப்பட்ட பாடசாலை

BAC, BREVET பரீட்சைகளில் 100 வீத சித்தி எமது மாணவர்களுக்கு வாழ்த்துக்கள்

விபரங்கள் அறிய எமது இணையத்தளம் www.asces.fr Tél : 07 82 88 59 16 E-mail : asces@free.fr

சிறந்த முறையில் பெண்களுக்கான சிகை, ஆடை- புடவை, முக அலங்கார மற்றும் கேக் அலங்கார வகுப்பு ஆரம்பம். வகுப்பு முடிவில் வேலை உடனே!

Grande Section, CP, CE,CM, Collège, Lycée வகுப்புகள்
Maths, Français, Physique, Chimie, SVT, Histoire

பெரியவர்களுக்கான புதிய பிரஞ்சு வகுப்புகள்

05-09--2017 செவ்வாய் வியாழன் மாலை 5 மணி
09-09-2017 சனி ஞாயிறு மாலை 4 மணி
10-09-2017 ஞாயிறு காலை 11 மணி (நாள்வகுப்பு)
04-09-2017 திங்கள் செவ்வாய் காலை 9 மணி
10-09-2017 ஞாயிறு காலை 10 மணி (Nationality வகுப்பு)

LA COURNEUVE இல்
35, rue Maurice Lachâtre - 93120 La Courneuve

BOBIGNY
38, rue Gaston Crépin 93000 Bobigny

PARIS
3, place de Joinville 75019 Paris M° Crimée

Epinay sur seine 42, rue Félix Merlin 93800 Epinay sur Seine

திறமையான ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன
BAC , BREVET பரீட்சைகளில் 100வீத சித்தி
Cambridge University ஆல் நடாத்தப்படும்
Starters, Movers, Flyers, Ket, Pet பரீட்சைக்கான வகுப்புகள்

எமது வெளியீடுகள்
நடைமுறை பிரஞ்சு – பிரஞ்சு இலக்கணம் பயில சிறந்தநூல்
பிரஞ்சு – தமிழ், தமிழ் – பிரஞ்சு அகராதி
பிரஞ்சு பேசுவோம் பகுதி 1 & 2 CD உடன்

Bridal makeup & cake icing

மணப்பெண் அலங்காரம்.
கேக் அலங்காரம் சனி காலை 9.30 மணி ஆரம்பம்
பதிவுகள் இப்போதே செய்யுங்கள்

புதன், சனி, ஞாயிறுகளில்
தமிழ், நடனம், சங்கீதம், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், ஓர்கன், கிட்டார் வகுப்புகள்
தையல் வகுப்புகள் ஆரம்பம்

உங்கள் உணவகங்கள் சமையல் அறைகளிற்குத் தேவையான
றைஸ் குக்கர் முதல் அனைத்து விதமான பைகள் வரை லாச்சப்பல் அருகில் ஒரே இடத்தில்

EURO RESTO SERVICE

உணவு விடுதிகளிற்கான உபகரணங்கள் மற்றும் உடைகள்

பாதுகாப்பான எலி மற்றும் பூச்சி கொல்லி மருந்துகள்

இல்ல லைபலங்களிற்கான பொருட்கள்

அங்கீகரிக்கப்பட்ட சொப்பிங் பாக்குகள்

மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

48, RUE DU CHÂTEAU LANDON - 75010 PARIS

TÉL.: 01 40 36 00 09 / 06 68 67 15 55 M°: STALINGRAD / LA CHAPELLE

ஈழமுரசு®
mediacentre
முரசு 03 22 ஓகஸ்ட் – 04 செப்டெம்பர் 2017 முழக்கம் 054

“ எத்தனையோ கனவுகளோடு
எத்தனையோ கற்பனைகளோடு
நீதி கிடைக்குமெனக் காத்திருந்த
தமிழருக்குச் சாவும் அழிவுமே
பரிசாகக் கிடைத்திருக்கிறன.”

- தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்

கிழக்கை மட்டுமல்ல வடக்கையும் இழந்துவிடப் போகிறது தமிழினம்!

இன்னும் சில வருடங்களில் எல்லாமே இல்லையாகி விடக்கூடிய அபாய நிலை?



‘தாயகத்தில் இருந்து’ காந்தரூபன்

ஈழத்தில் முதற்குடி தமிழ்க்குடி என்ற பெருமை பெற்ற தமிழினம் தற்போது அந்தப் பெருமையை இழந்து சிறுமைப் படுத்தப்பட்டிருக்கின்றது. தமிழ் மக்களில் அக்கறையான நிர்வாகம் ஒன்று தற்போது சிறீலங்காவிலோ, தமிழர் தாயகத் திலோ இல்லை. இதனால், இதுவரை இலங்கைத்தீவில் இரண்டாந்தரக் குடிமக்களாக மட்டந்தட்டப்பட்டிருந்த தமிழ் மக்கள் விரைவில் மூன்றாம்தரக் குடிமக்களாக மாறவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்று வரையறுக் கப்பட்டிருந்தது. பிற்பட்ட காலத்தில், குறிப்பாக யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் தனித் தமிழ்ப் பிரதேசமாக யாழ்ப் பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் அடையாளப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால், இன்று இந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டிருப்பது கவலையளிக்கின்றது. யாழ்ப்பாணம் உட்பட தமிழர் தாயகத்தின் குடிப்பரம்பல் முற்றாக மாற்றப்பட்டு வருகின்றது. இது தொடர்பாக யாருமே அலட்டிக்கொள்பவர்களாக இல்லை.

தமிழீழம் என்ற இலட்சியக் கோட்பாட்டுடன் விடுத லைப் போராட்டத்தை தொடக்கிய தமிழீழ தேசியத் தலை வர் வே.பிரபாகரன், தமிழீழத் தாயகத்தின் எல்லைகளை வரையறுத்திருந்தார். கிழக்கே திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களையும் வடக்கே யாழ்ப் பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களையும் ஒருங்கிணைத்து எட்டு மாவட் டங்கள் தமிழீழமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்த மாவட்டங்கள் தனித் தமிழர்கள் வாழ்ந்த பிர தேசங்களாக இருந்தன. இங்கு சிங்களவர்களோ முஸ்லிம் களோ அதிக எண்ணிக்கையாக வாழவில்லை. பின்னர் வர்த்தக நோக்கத்துடன் முஸ்லிம்கள் வந்து குடியேறினர். அவர்கள் இனத்தால் வேறுபட்டாலும் தமிழ் மொழி பேசு பவர்கள் என்ற அடிப்படையில் தமிழர்களுடன் இணைந்து வாழ்ந்தனர்.

பின்னாளில், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு பெரும் தடங்கலை ஏற்படுத்திய காரணத்தால் யாழ்ப்பாணத் தில் வசித்த முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர். அது அப்போதைய காலத்தின் தேவையாகவும் இருந்தது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடங்கிய பின்னர் கூட, 2009 வரை வடக்கு - கிழக்கு பிரதேசம் உண்மையான தமிழர் தாயகமாகவே இருந்தது. வேற்று இனக் கலப்புக்கு இடம் இருக்கவில்லை. தமிழர்களின் தனித்துவமான இன, மத, மொழி அடையாளங்களே இங்கு முழுவதுமாக முதன் மைப்படுத்தப்பட்டிருந்தன.

ஆனால், யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் இந்தக் குடிப் பரம்பல் மாற்றம் காணத் தொடங்கியுள்ளது. தமிழீழத்தின் தலைநகராக பிரகடனப்படுத்தப்பட்டிருந்த திருகோண மலை 75 வீதம் சிங்களவர்களிடம் பறிபோய்விட்டது. இராவணன், குளக்கோட்டன் போன்ற தமிழ் மன்னர்களால் வணங்கப்பட்டதும் புனரமைக்கப்பட்டதுமான திருக் கோணேஸ்வரம் இப்போது படை முகாம் போன்று தோற்றமளிக்கின்றது. கோணேஸ்வரப் பெருமானைத் தரிசிக்கச் செல்லும்போது படை முகாமுக்குள் செல்வது போன்ற உணர்வே ஏற்படுகின்றது.

தொடர்ச்சி 04ம் பக்கம்

கமிலன் மொழிபெயர்ப்பு
உங்கள் வேலையிடத்தில் பிரச்சனையா?
உங்களுக்கு அலுவலகப் பிரச்சனையா?
வர்த்தகர்களுக்கான ஆலோசனைகள்
(conseil en entreprise)
விருமான வரி தொடர்பான ஆலோசனைகள்
(conseil impots)
ஞாயிற்றுக்கிழமை மூடப்பட்டிருக்கும்
திங்கள் முதல் வெள்ளி வரை
காலை 10:30 முதல் 13:00 வரை
பிற்பகல் 14:00 முதல் 18:00
சனிக்கிழமை பிற்பகல் 13:00 முதல் 18:00 வரை
இடம் பெயர்ந்த
சட்டரீதியான
மொழிபெயர்ப்புச்
சேவைகளும் உண்டு
260 rue Faubourg St Martin - 75010 Paris
Metro: Stalingrad/Louis Blanc தொடர்புகளிற்கு : 06 51 91 08 85

ஆலோசனைகள் தேவையா
நாங்கள் உள்ளோம்
• சட்ட ஆலோசனைகள்
• முதல் விண்ணப்பம் (Coalia)
• அகதித்தஞ்சக் கோரிக்கை (Ofpra)
• மீள்பரிசோதனைக் கோரிக்கைகள் (Commision _ Ofii)
போன்றவற்றிற்கான ஆலோசனைகள்
07 68 44 43 47 aalosanaitamil@gmail.com

வீடு வாங்குவதற்கும் அனைத்து விதமான கடன் தேவைகளிற்கும்
நம்பிக்கையுடன் நாடுங்கள்
Crédits - Solutions
திரு.சிவா
2-4 rue de l'Orillon - 75011 Paris
0973255923 - 0665660305
email: creditssolutions@gmail.com

மக்கள் கடை
NEW CASTEL

உங்கள் தேவைகளே
எங்கள் சேவை
61, rue Louis Blanc,75010 Paris.
Tel: 01 42 05 13 67 Fax: 01 42 05 99 02

ஈழமுரசு
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"
"MEDIACENTRE"
JOURNAL TAMOUL
bimensuel Gratuit

MEDIACENTRE
BP 40
93141 BONDY PDC,
France
Port: 00 33 781 808 116

இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீடத் தொடர்புகட்கு:
@: eelamurazu@gmail.com
விளம்பர விநியோகத் தொடர்புகட்கு:
@: eelamurazuadm@gmail.com

Le Président: S.Pulenthiran
தலைவர்: க.புலேந்திரன்
Redacteur: K.Jeisanthar
பொறுப்பாசிரியர்: கி.ஜெய்சந்தர்

ஆசிரியர் பீடம்
எழுவான் (தென்தமிழீழம்)
வீரமணி (வடதமிழீழம்)
மதிமாறன் (தமிழகம்)
கந்தரதன் (பிரான்ஸ்)
சோழகரிகாலன் (பிரான்ஸ்)
விவேகன் (பிரான்ஸ்)
கமந்திரன் (பிரான்ஸ்)
அருணன் (பிரான்ஸ்)
ச.ச.முத்து (பிரித்தானியா)
சேயோன் (பிரித்தானியா)
சேரமான் (ஐரோப்பா)
ஈசன் (கனடா)

விளம்பரம் / விநியோகம்
கஜி (பிரான்ஸ்)
அருளப்பு (பிரான்ஸ்)
கஜி (பிரான்ஸ்)
கஜன் (பிரான்ஸ்)
மோகன் (பிரித்தானியா)

Impression:
IPS,
ZI de Iscles, 30 av. des Alpines,
13160 Châteaurenard

பிரித்தானியா
Mohan: 00 44 790 4631 883
@: eelamurazu.uk@gmail.com

சந்தா விபரம்
வருட சந்தா
பிரான்ஸ் 75€
ஐரோப்பா 85€
ஏனைய நாடுகள் 99€

குறிப்பு:
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.
ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

லாச்சப்பலில்
ஈழமுரசுடனான விளம்பரத் தொடர்புகளுக்கு
பாலன்:
29, rue Philippe de Girard,
75010 Paris
Port: 06 63 01 75 80

ஸ்பெயினில் பயங்கரவாதத் தாக்குதல்! 13 பேர் பலி, 50 பேர் காயம்!

ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரில் கடந்தவாரம் மக்கள் கூட்டத்திற்குள் சிற்றுந்தால் மோதித் தாக்குதல் மேற்கொண்டதில் 13 பேர் உயிரிழந்துள்ளதுடன் 50 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரின் முக்கிய சுற்றுலாத் தலமான லாஸ் ராம்பலாஸ் பகுதியில் ஏராளமான சுற்றுலாப் பயணிகளும், அந்நாட்டு மக்களும் குவிந்திருப்பது வழக்கம்.

மாலை நேரம் என்பதால் மக்கள் கூட்டம் அதிகமாகவே காணப்பட்ட நிலையில், திடீரென கூட்டத்திற்குள் சிற்றுந்து ஒன்று புகுந்தது.

கண்மூடித்தனமாக மக்கள் கூட்டத்திற்குள் நுழைந்த சிற்றுந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே 13 பேர் உயிரிழந்தனர். மேலும் 50 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். தாக்குதலை மேற்கொண்ட சிற்றுந்தின் சாரதியை காவல்துறையினர் மடக்கிப் பிடித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர் 1989 ஆண்டு மொரோக்கோவில் பிறந்துள்ளதாகவும் குறித்த நபர் தனது முகநூல் பக்கத்தில் கடற்கரையில் அமர்ந்திருக்கும் புகைப்படமொன்றை கடந்த

செவ்வாய்க்கிழமை தரவேற்றியுள்ளதாகவும் காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

இதனையடுத்து, லாஸ் ராம்பலாஸ் பகுதிக்கு யாரும் செல்ல முடியாத வண்ணம் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பொதுமக்கள் எவரும் குறித்த பகுதிக்கு செல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

முன்னதாக பயங்கரவாதத் தாக்குதல் ஒன்றுத் திட்டமிட்ட ஐந்து பேர் கம்பிரில்ஸ் நகரில் கூட்டுக் கொல்லப்பட்டனர் என்று அந்த நாட்டுக் காவல்துறை தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாக்குதல் நடத்தப்பட்ட சில மணிநேரங்களில் இது தம்மால் நடத்தப்பட்ட தாக்குதல் என்று ஐ.எஸ்.ஐ.எஸ். (சுராக் சிரிய இஸ்லாமிக் ஸ்ரோட்) அமைப்பு அறிவித்தது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு இதுபோன்ற பாணியில் பலமுறை தாக்குதல் நடத்தியுள்ளதால் அந்த அமைப்பின் அறிவிப்பு ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தாலும், ஸ்பெய்ன் காவல்துறையினர் ஐ.எஸ்.ஐ.எஸ்ஸால் தான் இது நடத்தப்பட்டது என உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. எனினும் இது ஒரு தீவிரவாதத் தாக்குதல் என்று அறிவித்தனர். இதனையடுத்து, நாடு முழுவதும் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், பாரிசு ஈபிள் கோபுரத்தின் விளக்குகள் அணைக்கப்பட்டு அஞ்சலி செய்யப்பட்டது.

கிழக்கை மட்டுமல்ல....

படையினரின் பயிற்சித் தளங்கள், நிர்வாகக் கட்டளைப் பீடம் உள்ளடங்கிய பெரும் படைத் தளமாக திருக்கோணேஸ்வரர் ஆலயச் சூழல் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றது.

அதைவிட, உலகிலேயே அதிசயிக்கத்தக்க வெந்நீர் ஊற்றுக்கள் உள்ள கன்னியாய் வெந்நீரூற்று சிங்கள - பௌத்தர்களின் பூர்வீக நிலம் என்று கூறி ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றது.

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் கன்னியாய் வெந்நீரூற்றைச் சுற்றிலும் விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு பௌத்த பிக்குகளும் பிக்குணிகளும் தங்கியிருக்கக்கூடிய விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவர்கள் அங்கு நிரந்தரமாகவே தங்கியிருந்து அதைப் பௌத்த பிரதேசமாக மாற்றி வருகின்றனர்.

கன்னியாய் வெந்நீரூற்றைப் பார்வையிடச் செல்லும்போது ஒரு சிங்கள சுற்றுலாத் தலத்திற்குள் செல்வது போல உணர்வே ஏற்படுகின்றது. இவைகளைப் போலவே திருகோணமலையின் ஏனைய இடங்களும் பறிபோய்க்கொண்டிருக்கின்றன.

அடுத்த தேர்தலில் அங்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவுசெய்யப்படுவாரோ என்ற அச்சநிலை ஏற்பட்டுள்ளது. அந்தளவிற்கு சிங்கள, முஸ்லிம் இனப்பரம்பலும் ஆக்கிரமிப்பும் அங்கு இடம்பெற்று வருகின்றன.

மட்டக்களப்பு, அம்பாறையிலும் இதே நிலைதான். இங்கு சிங்களவர்களும் முஸ்லிம்களும் இணைந்து தமிழர்களின் பூர்வீக நிலங்களை ஆக்கிரமிக்கின்றனர். அண்மையில் மட்டக்களப்பு வாழைச்சேனையில் பாடசாலை விளையாட்டு மைதானக் காணி ஒன்றை முஸ்லிம்களின் ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிக்க மக்கள் பெரும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டமை எல்லோரும் அறிந்த விடயம்.

கிழக்கைப் போலவே வடக்கிலும் மன்னார், வவுனியா மாவட்டங்களில் ஏற்கனவே சிங்கள முஸ்லிம் குடும்பங்களின் ஆக்கிரமிப்புக்கள் இருந்தன. ஆனால், அது தற்போது வேகமாக விரிவுபடுத்தப்படுகின்றது.

இதுவரை தனித் தமிழ் மாவட்டங்கள் எனப் பெருமை பறைசாற்றிய முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் திட்டமிட்ட ரீதியில் சிங்கள - முஸ்லிம் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் குடிப்பரம்பலை மாற்றும் நடவடிக்கை மிக வேமாக இடம்பெற்று வருகின்றது. இங்கு தமிழீழ விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட் காடுகளை அழித்து முஸ்லிம் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அமைச்சர் ரிசாத் பதியுதீனின் ஏற்பாட்டில் இந்த வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

யாரும் கேள்வி கேட்க முடியாத அளவிற்கு அங்கு சிங்களக் குடும்பங்களும் வேகமாகக் குடியேற்றப்பட்டு வருகின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளது கோட்டையாக விளங்கிய சாலைக் கடற்கரை இன்று சிங்களக் கடற்படையினதும் சிங்கள மீனவர்களினதும் ஆதிக்கம் நிறைந்த இடமாக மாறியுள்ளது.

அதேபோன்று, முல்லைத்தீவில் தமிழ் மீனவர்களின் பாரம்பரிய கடற்றொழில் கரை வலைப் பாடுகளும் வாடிகளும், துறைகளும் சிங்கள மீனவர்களால் அபகரிக்கப்பட்டுள்ளன. தென்னிலங்கையில் இருந்து வந்து முல்லைத்தீவில் தங்கியிருக்கும் இவர்கள் கடற்படை, இராணுவத்தின் துணையுடன் தமிழ் மீனவர்களை மிரட்டி, தமிழ்க் கடலன்னையின் வளங்களைச் சுரண்டிச் செல்கின்றனர்.

முல்லைத்தீவில் சிங்களக் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டு, அங்குள்ள சிங்களவர்களின் வழிபாட்டுக்காக என்ற பெயரில் பல விகாரைகளும் அமைக்கப்பட்டுள்ளன. சிங்களக் குடும்பங்கள் இல்லாத இடங்களிலும் விகாரைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி, யாழ்ப்பாணத்திலும் இதே நிலைதான். கிளிநொச்சியில் முன்னர் இருந்த தாகக் கூறப்படும் பௌத்த விகாரை தற்போது மிகப் பெருமெடுப்பில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. அதைவிட, அங்கு வேறும் பல விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கும் சிங்கள - முஸ்லிம் குடும்பங்கள் ஆங்காங்கே குடியேற்றப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்தின் இனப்பரம்பலையும் மாற்றியமைக்க வேண்டும் என்ற ரீதியில் நாவற்குழியில் முதலாவது சிங்களக் குடியேற்றம் அமைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து கரையோரப் பிரதேசங்களில் சிங்கள, பௌத்த கட்டுமானங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

நாவற்குழி தவிர வேறு சில பிரதேசங்களில் ஆங்காங்கே சில சிங்களக் குடும்பங்கள் குடியேறியுள்ளன. அடுத்துவரும் சில வருடங்களில் பெரும் சிங்களக் குடும்பங்கள் குடியேற்றம் செய்யப்படுவார்கள் என்பதற்கு கட்டியம் கூறுபவையாக இக்குடியேற்றங்கள் அமைந்துள்ளன.

மேற்படி சிங்களக் குடியேற்றங்கள், பௌத்த விகாரைகளைத் தவிர, வடக்கிலும் கிழக்கிலும் ஆங்காங்கே இராணுவ நினைவுச் சின்னங்களும் படை முகாம்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. கிளிநொச்சி, முல்லைத்தீவு, ஆனையிறவு மற்றும் பல இடங்களில் முப்படைக்கும் அதிகமான இராணுவ நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

படையினர் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை ஆக்கிரமித்து வைத்திருக்கின்றனர். இராணுவத் தேவைக்கு என்ற பெயரிலும் படை முகாம்கள் என்ற பெயரிலும் இந்தக் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. பல நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன. படையினர் தற்போது ஆக்கிரமித்திருக்கும் காணிகளும் விரைவில் சுவீகரிக்கப்படும் அபாயம் காணப்படுகின்றது.

ஆக, தமிழர் தாயகம் என்ற சொற்பதம் விரைவில் வலுவிழக்கும் அல்லது செயலிழக்கும் நிலையை எட்டியிருக்கின்றது. அப்படி ஒரு தாயகம் முன்னர் இருந்ததுதான், ஆனால் தற்போது அது இல்லை என்ற நிலை எதிர்காலத்தில் ஏற்படப்போகின்றது.

இவ்வாறு தமிழர் தாயகம் திதைக்கப்பட்டு வருகின்றமை தொடர்பாக வடக்கு மாகாண சபையோ தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களோ எந்தக் கவலையும் அற்றவர்களாக இருக்கின்றனர்.

திருகோணமலை பறிபோய்க்கொண்டிருக்கின்ற நிலையில், அதைத் தடுத்து நிறுத்தவேண்டிய அந்த மாவட்ட எம்.பி இரா.சம்பந்தன், எந்தவித அக்கறையோ கவலையோ இன்றி அரசின் சலுகைகளை அனுபவித்தவாறு கொழும்பில் ஆடம்பர வீட்டில் தங்கியிருக்கின்றார்.

தமிழர்களின் தலைவிதியை யார் மாற்றுவது என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது. இன்னும் சில வருடங்களில் எல்லாமே இல்லையாகிவிடக்கூடிய அபாயம் நிலவுகின்றது. இந்த நிலை தொடர்பாக புலம்பெயர் தேசத்தில் உள்ளவர்களாவது அக்கறை எடுப்பார்கள் என்ற எதிர்பார்ப்பும் ஏமாற்றத்தையே தருகின்றது.

ஆக, பெரும் அதிசயம் ஒன்று நிகழ்ந்து அதன் மூலம் தமிழர்களுக்கு விடிவு ஏற்பட்டால் அன்றி, இனி எந்தச் சந்தர்ப்பத்திலும் விடிவு கிடைக்காது என்ற நம்பிக்கையீனமே தொற்றிக்கொள்கிறது.

தமிழர்கள் என்ற தனித்துவம் வாய்ந்த இனம் இப்பூமியில் வாழ்ந்து மடிந்தது என்று மட்டுமே வரலாறு எழுதப்படப்போகின்றதோ என்ற பெரும் ஐயம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் இருக்கும் தமிழர்கள், தமிழர்களின் பிரதிநிதிகள் இனியாவது சிந்திப்பார்களா?

ஈழமுரசு

பதவி பருத்தும் பாடு

உலகில் பெரும்பாலான மனிதர்கள் இன்று பதவியை நோக்கியே ஓடுகின்றார்கள். ஏதாவது ஒரு பதவியைப் பிடித்து பணம், புகழ், கௌரவத்தோடு வாழ்ந்துவிட வேண்டும் என்பதே இந்த ஓட்டத்திற்கான மூலகாரணம். அதனையும் விட மேலாக, கிடைக்கும் பதவியைக்கொண்டு, வருமானத்திற்கு அதிகமான செல்வத்தை சேர்த்துவிடலாம் என்று இன்னும் வேகமாக ஓடுபவர்களும் இந்தப் பூமிப் பந்தெங்கும் அதிகமாக இருக்கின்றார்கள்.

இந்த ஓட்டங்களுக்கு எல்லாம் மாறுபட்டவர்களாக, வேறுபட்டவர்களாக தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்தார்கள். போர்க் களத்திலும் சரி, அரசியல் நிர்வாகக் களத்திலும் சரி எத்தனையோ பதவிகள் அவர்கள் வசம் இருந்தன. ஆனால், அவற்றை அவர்கள் பதவிகளாகப் பார்க்காமல், பொறுப்புக்களாகப் பார்த்தார்கள். அதனால்தான் உலகமே வியக்கும் வண்ணம் மிகச்சிறந்த நிர்வாகத்தை நேர்மையோடும் அர்ப்பணிப்போடும் அவர்களால் செய்யமுடிந்தது. பதவி என்பது ஓர் அதிகாரம் அல்ல. அது அங்கீகாரத்துடனான ஒரு பொறுப்பு என்பதை தமிழீழத் தேசியத் தலைவர், போராளிகளுக்கு கற்றுக்கொடுத்ததால்தான் அவர்களால் அவ்வாறு செயற்பட முடிந்தது. மக்களும் விடுதலைப் புலிகளின் அந்த நிர்வாகங்களை மதித்தார்கள்.

'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.'

என்றார் திருவள்ளுவர். ஒரு காரியத்தை ஒருவர் எப்படி செய்து முடிப்பார் என்பதை ஆராய்ந்து பார்த்து, அதற்குப் பிறகு அந்தக் காரியத்தை அவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்கிறது வள்ளுவரின் குறள். அந்த வள்ளுவரின் குறளுக்கேற்ப வயது, அனுபவம் என்பவற்றைவிட செயற்பாட்டு ரீதியில் சிறந்து விளங்குபவர்களை அடையாளம்கண்டு, தேர்ந்தெடுத்து ஒவ்வொரு பொறுப்புக்களுக்கும் நியமித்ததால்தான் போர்க் களத்தில் வெற்றிகளைக் குவிப்பதற்கும், நிர்வாகச் செயற்பாடுகளில் மக்களின் அபிமானத்தைப் பெறுவதற்கும் விடுதலைப் புலிகளால் முடிந்தது. பதவி என்பதை அவர்கள் தங்களுக்கு கிடைத்த அதிகாரமாகப் பார்க்காமல் தங்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களாகப் பார்த்தமையால் வந்த வெற்றிகள் மட்டுமே இவை.

ஆனால், இப்போது பதவிகளை பொறுப்புக்களாகப் பார்க்காமல், பதவிகளைத் தங்களுக்கான அதிகாரமாகப் பார்க்கும் அரசியல் தலைமுறை ஒன்று தமிழர்களிடம் தோற்றம்பெற்று வருகின்றது. இதனால் அந்தப் பதவிகளைப் பெறுவதற்காக தமிழர்கள் கடும் போட்டியிடுகின்றார்கள். தமிழ் மக்களின் உணர்வுகளைவிட சம்பந்தனுக்கு கூடசாகும் வயதில் பதவியே பெரிதாகத் தேவைப்படுகின்றது. அதனால்தான் தமிழர்களின் உரிமைகளைப் பற்றிக்கூட சற்றும் கவலைப்படாமல், அவரால் சிறீலங்காவின் எதிர்க்கட்சி அரியாசனத்தில் ஏறி அமரமுடிந்தது.

இப்போது வடமாகாண சபையில்நடக்கும் பதவிப் போட்டிகளைப் பார்க்கும்போது தலைகிறுக்கின்றது. மக்களுக்கு பணியாற்றுவதைவிட தங்கள் பதவிகளை தக்கவைப்பதற்கு அவர்கள் படும்பாடு இருக்கின்றதே இதனை வெளியில் சொன்னால் வெட்கக்கேடு. தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தையே அது கொச்சைப்படுத்துவதாக அமைந்துவிடும்.

உண்மையில் மக்களுக்காக பணியாற்ற நினைப்பவர்கள் பதவிகளுக்காக காத்துக்கொண்டிருக்க மாட்டார்கள். அதுவும் வாக்களித்து தங்களைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கு எதாவது வழியில் தங்கள் பணிகளை ஆற்றவே முன்வருவார்கள். ஆனால், மக்கள் பணியைவிட தங்கள் பதவியைத் தக்கவைப்பதுதான் இப்போது அங்குள்ளவர்களின் ஒற்றைச் சிந்தனையாக இருக்கின்றது.நிர்க்நாட்டாமை கிடைத்தால்தானே, கிடைக்கு இரண்டு வெள்ளாடு கேட்கமுடியும் என்பதுபோல்தான் அவர்களின் பதவி ஆசை இருக்கின்றது.

ஏற்கனவே பதவிக் காலத்தில் ஊழலில் திளைத்து பதவிகள் பறிக்கப்பட்டவர்கள் போக எஞ்சியவர்கள், பதவியில் இருக்கும்போது தங்களுக்கு கிடைக்கவேண்டிய சலுகைகளுக்காக இப்போதும் மல்லுக்கட்டுகின்றனர்.

தாயகநிலம் மெல்ல மெல்ல தமிழர்களின் கையைவிட்டுப் பறிபோய்க்கொண்டிருக்கின்றது. தமிழன் வாழ்ந்ததற்கான அடையாளங்களை புதைகுழிகளில் தேடவேண்டிய கட்டத்திற்கு நகர்ந்துகொண்டிருக்கின்றது. அந்த இழப்பைத் தடுத்து நிறுத்துவதற்கான வழிகளைக் காணமுடியவில்லை. ஆனால், சேடம் இழுத்துக்கொண்டிருக்கும் வடமாகாண சபையின் இறுதி ஆயுட் காலத்திற்குள் என்றாலும் பதவியில் இருந்து, பிடுங்க முடிந்ததைப் பிடிங்கிவிடுவோம் என்ற வெறி தலைக்கேறி, பதவிக் காய்ச்சலில் தவிக்கின்றனர்.

இதற்குள் வடமாகாணசபையின் அமைச்சரவை விரைவில் மாற்றியமைக்கப்படும் என்றும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அறிவித்தது கட்சியிலுள்ள பலருக்கும் வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சியிருக்கின்றது. இருக்கும் பதவியும் பறிபோய்விடுமோ என்ற எரிச்சலை ஏற்படுத்தியிருக்கின்றது.

தமது கட்சியினரின் பதவிகள் மாற்றியமைக்கப்பட்டதால் வட மாகாண அமைச்சரவையில் பங்கேற்பதில்லை என்ற முடிவை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி எடுத்துள்ளது. மாற்றியமைக்கப்படும் வடக்கு அமைச்சரவையில் தங்கள் அமைப்புக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டால், அதனை தங்கள் அமைப்பில் யாருக்கு வழங்குவது என்பதில் புளொட்டில் உள்ளவர்களும், தமது கட்சிக்குக் கிடைக்கும் அமைச்சுப் பதவியை யாருக்கு வழங்குவது என்பது தொடர்பில் ரெலோவிற்குள்ளும் பிடுங்குப்பாடுகள் தொடங்கிவிட்டன. இதற்குள் பதவியில் இருந்து விலகுவதை ஏதோ பெரும் அர்ப்பணிப்பொன்றை தமிழ் மக்களுக்கு செய்வதுபோன்று பிரச்சாரப்படுத்தி, அடுத்த தேர்தல் வெற்றிக்கான காய்நகர்த்தும் கைங்கரியங்களும் வடமாகாணத்தில்நடந்தேறுகின்றன.

நாடாளுமன்றங்களும், மாகாண சபைகளும் தமிழ் மக்களுக்கு எந்தவொரு விமோசனத்தையும் பெற்றுத்தராது என்பதைப் புரிந்துகொண்டதால்தான் தங்கத் தட்டில் வைத்துக் கொடுத்தும் தமிழீழத் தேசியத் தலைவர் பதவிகளைத் தட்டிவிட்டார்.

ஆனால், அந்த வரலாற்றைக் கடந்துவந்த இனம், இப்போது அற்பத்தனமாக பதவிகளுக்காகக் மல்லுக்கட்டுவது மக்களுக்கு பணியாற்றுவதற்காக அல்ல, தங்கள் மடியைநிரப்புவதற்காகவே என்பது வெளிப்படை.

பதவி உங்களுக்குப் பெருமை தருவதைவிட, உங்களால் அந்தப் பதவி பெருமையடையவேண்டும் என்றார் ஒரு பேரறிஞர். விடுதலைப் புலிகளின் காலத்திற்குப் பின்னர் அப்படியொரு பெருமையைக் காண்பது தமிழர்களுக்கு இவி அரிதுதான்.

பிரபாகரம்

- ச.ச.முத்து -

அவரது மிகவும் பிரபலமான ஒரு மேற்கோள் 'வரலாறு எனது வழிகாட்டி' என்பதே.

அவரது வரலாறும் அதன் மையமாக ஒடிக்கொண்டிருக்கும் தத்துவமும் என்றென்றும் அதே உயிர்ப்புடன் பயணப்பட்டுக் கொண்டே இருக்கும். எங்கெங்கு மக்கள் அடக்குமுறைக்கும் ஒடுக்குதலுக்கும் உட்படுகிறார்களோ அங்கெல்லாம் பிரபாகரம் அவர்களுடன் கை கோர்த்தபடி பயணம் செய்யும். மிக குறிப்பாக தமிழினத்தின் அடக்கு முறைக்கு எதிரான போர்க் குரலாக, அடிமைத்தனத்துள் சோர்ந்து முடங்கி கிடப்பதற்கு எதிரான போர்ப்பறையாக, மிகவும் குழப்பமான பொழுதில் தூரத்து மலையில் தெரியும்

முதன் முதலில் இந்த பிரபாதரம் என்ற சொல்லை நான் கேட்டது ஒரு ஜீரோப்பியரின் வாயில் இருந்தே. அவர் தேசியத் தலைவரை பல தடவைகள் சந்தித்தது அவர் பற்றிய நிறைய ஆச்சர்யங்களுடன் இருந்தார்.

தீபமாக, திசை அறியாத கடல் மீது இருக்கும்போது தெரியும் வெளிச்சவீடாக அதன் பிரகாசமாக என்றென்றும் பிரபாகரம் எம்முடன் கூட வரும்.

ஒரு துளிகூட தன்னலம் இல்லாத அவரது தலைமைப் பண்பும் தனது இலட்சியத்துக்கு அவர் காட்டிய நேர்மையும், தான் உயிரினிய நேசித்த தனது இன மக்களின் விடுதலைக்காக எந்த தருணத்திலும் தன்னுடைய தற் நியாகத்துக்கு தனது ஈகத்துக்கு தயாராக 30 வருடத்துக்கும் மேலாக நின்றிருக்கும் அந்த அற உணர்வு என்பன மட்டுமே பிரபாகரம் இல்லை.

பிரபாகரம் என்பது இவை எல்லாவற்றையும்விட மிக வலுவானது, மிகமிக உயர்ந்தது. இந்த 30 வருடத்துக்கும் மேலான போராட்ட வாழ்வினுள் முதல் பயணியாக அவரே தொடர்கிறார். அவரது ஒவ்வொரு பாத அடியும் பற்றி நீண்ட கதையாடல்களுக்கும் கருத்து பரிமாற்றங்களுக்கும் உட்படுத்தப்பட்டு அவை ஒரு தத்துவமாக மாற்றப்பட்டு இந்தப் பிரபஞ்சத்தின் ஊழிக்காலம் வரைக்கும் தமிழினத்தின் மிகப்பெரும் தத்துவமாக இருக்க வைக்க வேண்டியது எமது கடமையாகிறது.

போர் வெற்றிகளுக்கும் பதில் தாக்குதல் வியூகங்களுக்கும் அப்பால் பிரபாகரம் கொண்டு செல்லப்பட வேண்டும். பிரபாகரத்தின் ஒரு அம்சம் அதனது போர் வெற்றிகளும் படைக்கட்டுமானங்களும் வீரதீரமும் என்பது உண்மைதான். ஆனால் பிரபாகரம் என்பதின் முழுமை அதுவல்ல.

தொடர்ச்சி 22ம் பக்கம்

மைத்திரியின் 3வது வெளிவிவகார அமைச்சர்

சிறீலங்கா ஜனாதிபதியாக மைத்திரிபால சிறீசேன பதவியேற்ற கடந்த இரண்டரை ஆண்டுகளுக்குள் மூன்று வெளிவிவகார அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மைத்திரிபால சிறீசேன தனது முதல் அமைச்சரவையை அமைத்தபோது வெளிவிவகார அமைச்சராக ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த மங்கள சமரவீர நியமிக்கப்பட்டார். கடந்த மே 22ம் திகதி அவரது இடத்திற்கு இன்னொரு ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான ரவி கருணாநாயக்க நியமிக்கப்பட்டார். ஊழல் குற்றச்சாட்டுக் காரணமாக அவர் கடந்த

வாரம் பதவியில் இருந்து விலகிய நிலையில், தற்போது கடந்த 15ம் திகதி முதல் திலக் மாரப்பன வெளியுறவுத்துறை அமைச்சராக சத்திய பிரமாணம் செய்து கொண்டுள்ளார். மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் அவர் இந்த நியமனத்தை பெற்றுக் கொண்டார்.

கட்டுநாயக்கவில் தரையிறங்கும் ஏ-380!

உலகின் மிகப் பெரிய பயணிகள் விமானமாக கருதப்படும் ஏ-380 விமானம் டுபாயிலிருந்து உத்தியோகபூர்வமாக கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடந்த 14ம் திகதி மாலை தரை இறங்கியது. இவ்வருட முற்பகுதியில் கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஓடுதளம் புனரமைக்கப்பட்டதன் பின்னர், நவீன விமானங்கள் தரையிறக்கப்படுவது அதிகரிக்கப்பட்

டுள்ளதாக சிறீலங்காவின் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் அசோக் அபேசிங்க தெரிவித்தார். அந்த வகையில் 540 பயணிகளைக் பயணிக்கூடிய எமிரேட்ஸ் எயார் லைன்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான ஏ-380 விமானம் தினந்தோறும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கப்படும் எனவும் போக்குவரத்து பிரதி அமைச்சர் கூறியுள்ளார். இந்த விமான சேவை டுபாயிலிருந்து முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாரிய கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றிவளைப்பு

மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட வட்டவான் பகுதியில் வைத்து சட்டவிரோதமாக இயங்கிவந்த பாரிய கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டு 4 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் கசிப்புகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. குறித்த சுற்றிவளைப்பின் போது கசிப்பு இஸ்பிரிட் 16 லீற்றர், மற்றுமொரு இடத்தில் வைத்து 16 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண மது வரித் திணைக்கள அத்தியட்சர் என்.சுசாதரன் தெரிவித்தார்.

வடமராட்சி நில ஆக்கிரமிப்பில் புத்தர்!

புத்தரின் பிறப்பிடத்தை பாதுகாக்க சிறீலங்கா 15 கோடி ரூபா நிதி உதவி

யாழ். பருத்தித்துறை துறைமுகம் அருகாமையில் உள்ள வைரவ கோவிலிற்கு பக்கத்தில் உள்ள ஆலமரத்தின் கீழ் சிறிதாக புத்தர் சிலை ஒன்று 2010ம் ஆண்டளவில் சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தினரால் வைக்கப்பட்டிருந்தது. இந்த சிலை சிறிய இடத்தில் வைக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த ஒரு மாதத்திற்கு முன்னதாக இராணுவத்தினரால் குறித்த புத்தர் சிலை இருந்த இடம் விஸ்தரிக்கப்பட்டு தற்போது புதிதாக புத்த கோவில் போன்ற அமைப்பில் புத்தர் சிலையுடனான கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இதற்கு அருகில் முன்னாற்கம் ஒன்று அமைக்கப்பட்டு, இராணுவத்தினர் கண்காணிப்பிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் யுத்தத்திற்கு முன்பிருந்தே அப்பகுதியில் நிரந்தரமாக உள்ள இந்து கோவிலுக்கு நடத்தப்பட்டு வந்த பூஜை வழிபாடுகள் மற்றும் பொங்கல் நிகழ்வுகளை நடத்துவதற்கு தேவையான இடவசதி போதாமையாக உள்ளதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு இந்த கோவிலுக்கு அருகாமையில் பாரிய படை முகாம் ஒன்று காணப்படுவதோடு, படையினரால் உணவகம் ஒன்றும் நடத்தப்பட்டு வருகின்றது. இதேவேளை பருத்தித்துறை முனை பகுதியிலும் தனியார் காணி ஒன்றில் புத்தர் சிலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த புத்தர் சிலை அமைக்கப்பட்டு நீண்டகாலமான நிலையில், அதுவும் படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஆலமரங்கள் காணப்படும் இடங்களில் இந்து கோவில்கள் காணப்பட்டாலும் அதனை மறைத்து புத்த கோவில்களை அமைக்கும் முயற்சிகளில் சிறீலங்காவின் இனப்படுகொலைஇராணுவத்தினர் இறங்கியுள்ளமை அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது.

இதுஇவ்வாறிருக்க, கௌதம புத்தர் பிறப்பிடமான நேபாளத்தில் உள்ள லும்பினியை பாதுகாப்பதற்கு ஜப்பானுக்கு அடுத்து படியாக முதற்தடவையாக நேபாளத்திற்கு சிறீலங்கா 15 கோடி ரூபா நிதி உதவி செய்யவுள்ளதாக அந்நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். நாடளாவிய ரீதியில் உள்ள 150 விகாரைகளை புனர்நிர்மாணம் செய்வதற்கான நிதி உதவி வழங்கும் நிகழ்வு அலரி மாளிகையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் உரையாற்றுகையில், அரசாங்கம் என்ற வகையில் நாட்டில் உள்ள தொல்பொருளியல் சார்ந்த இடங்களையும் விகாரைகளையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது அரசாங்கத்தின் பாரிய பொறுப்பும் கடமையுமாகும். இதன் அடிப்படையிலேயே 150 விகாரைகளை புனர் நிர்மாணம் செய்வதற்கான பணிகளை ஆரம்பித்துள்ளோம். இந்த நடவடிக்கைகள் தொடரும். அரசாங்கள போன்று பௌத்த விகாரைகளை புனர்நிர்மாணம் செய்யவுள்ளோம். நான் பிரதமராகும் வரைக்கும் விகாரைகளின் புனர்நிர்மாண விவகாரத்தில் எந்தவொரு நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

இந்நிலையில் உலகில் தற்போது பௌத்த தர்மத்தை பாதுகாக்கும் முக்கிய நாடு சிறீலங்காவாகும். பௌத்த தர்மத்தை பாதுகாத்து கொடுத்ததும் சிறீலங்காவாகும். இல்லையேல் மியன்மார் உள்ளிட்ட நாடுகளின் நிலைமை என்னவாகும். ஆகவே பௌத்த தர்மத்தை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் பல இடங்களுக்கு பயணம் செய்த போது விகாரைகளின் உண்மையான நிலைமையை அறிந்து கொண்டேன். புனரமைப்பதற்கு உரிய நிதி இல்லாமல் பல விகாரைகளின் நிர்வாகங்கள் கஷ்டப்படுகின்றன.இதனைகருத்திற்கொண்டே இந்த நடவடிக்கையை எடுத்தோம்.

எவ்வாறாயினும் பௌத்த மதத்திற்கான முன்னுரிமையை நாம் தொடர்ந்து பாதுகாப்போம். அதேபோன்று நாட்டில் உள்ள ஏனைய மதங்களில் உரிமைகளை பாதுகாப்போம். இந்த நிகழ்வில் கிறிஸ்தவ மத விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்கவும் இந்து மத விவகார அமைச்சர் டீ.எம் சுவாமிநாதனும் இங்கு வந்தமையையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன். பௌத்த மத முன்னுரிமையை பாதுகாப்போம். அதற்கு மாறாக இனவாதம் எமிடம் இல்லை. பௌத்த மத முன்னுரிமையை பாதுகாக்கும் அதேநேரம் மறுபுறத்தில் இன நல்லிணக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் செற்படுவோம். அத்துடன் விகாரைகளின் புனர் நிர்மாணத்தின் போது தலதா மாளிகையின் தங்கத்தினான கூரையை ஆர்.பிரேமதாச நிர்மாணித்தார். எனவே தற்போது அதனை புனர்நிர்மாணம் செய்ய திட்டமிட்டுள்ளோம். மேலும் நேபாளத்தில் அமைந்துள்ள புத்த பெருமானின் பிறப்பிடமான லும்பினிக்கு ஜப்பான் நிதி உதவி செய்தது. இந்நிலையில் ஜப்பானுக்கு பதிலாக முதற்தடவையாக நாம் 15 கோடி ரூபாவை அடுத்த வருடம் வழங்கவுள்ளோம். அதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளோம் என்றார்.

அவலச் சாவுகளும் அகால மரணங்களும்

இளம் குடும்பஸ்தரை பலியெடுத்த மின்னல்

யாழ். குருநகர் முகத்துவார கடற்பரப்பில் இறால் பிடிக்க சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் மின்னல் தாக்கத்துக்குள்ளாகி பரிதாபமாக உயிரிழந்துள்ளார். குருநகர் புதிய கடற்கரை வீதியை சேர்ந்த இரண்டு பெண் பிள்ளைகளின் தந்தையான பிறான்சிஸ் றொபொன்சன் (வயது 28) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார். இவர் குருநகர் முகத்துவார கடற்கரைக்கு இறால் பிடிப்பதற்காக மேலும் இரண்டு நபர்களுடன் கடந்த 15ம் திகதி அதிகாலை சென்றுள்ளார். கடலிலே 2 கிலோ மீற்றர் தூரம் சென்ற போது காலை 5.30 மணியளவில் பெரிய சத்தத்துடன் மின்னல் ஒன்று அவர்களுக்கு அருகில் விழுந்துள்ளது. மூன்று பேரும் கடலுக்குள் குப்புற விழுந்துள்ளனர். சிறிது நேரம் கழித்து ஏனைய இரண்டு பேரும் எழுந்து பார்த்த போது மேற்குறித்த நபர் தண்ணீருக்குள்ளேயே கிடந்துள்ளார். இதனை அவதானித்த ஏனைய மீனவர்கள் இருவரும் அவரை தூக்கிய போது கால்களில் எரிகாயங்கள் இருந்ததை அவதானித்துள்ளனர். உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

மின்னல் தாக்கி மடுவில் தாய் மரணம்

மன்னார் மாவட்டத்தில் மடு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குற்பட்ட மடு தேவாலயப் பகுதியில் கடந்த 9ம் திகதி மாலை ஏற்பட்ட இடி மின்னல் தாக்கத்தின் காரணமாக இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் சிலாபம் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இரு பிள்ளைகளின் தாயாரான திலினி மதுசன் என தெரிய வந்துள்ளது.

பேருந்தின் அடியில் உறங்கிய இருவர் மரணம்

கிளிநொச்சியிலிருந்து கதிர்காம யாத்திரைக்காக வந்த பேருந்தில் சிக்கி இருவர் மரணமடைந்துள்ளனர். கடந்த 7ம் திகதி இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில், கிளிநொச்சியைச் சேர்ந்த யோவான் (35) மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நிதர்ன் (18) ஆகிய இருவரே மணமடைந்துள்ளனர். குறித்த இருவரும் கதிர்காம எசல பெரஹராவை பார்வையிட சென்றிருந்த நிலையில் கடந்த 8ம் திகதி இரவு, கதிர்காமம் ரஞ்சித் மத்தும பண்டார மைதானத்தில் தரித்து நின்ற தாங்கள் வந்த பேருந்தின் பின்புறமாக அதன் அடியில் தூங்கியுள்ளனர். இரவு 11.00 மணியளவில் பேருந்திற்குள் வந்த சாரதி, குறித்த பேருந்தை பின்புறமாக செலுத்த முற்பட்ட வேளையில் அதற்கடியிலிருந்த இருவரும் சில்லுக்குள் சிக்கிய நிலையில் அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளனர். அவர்களுடன் உறங்கிய மேலும் இருவர் உயிருக்காக போராடியுள்ளனர். இதனையடுத்து குறித்த இருவரும் மீட்கப்பட்டு, ஒருவர் கதிர்காமம் மாவட்ட வைத்தியசாலைக்கும் மற்றையவர் அங்கிருந்து ஹம்பாந்தோட்டை மாவட்ட வைத்தியசாலைக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்களாவர்.

உருக்குலைந்த நிலையில் இளைஞனின் சடலம் மீட்பு

திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தில் மணியரசன் குளத்தில் உருக்குலைந்த நிலையில் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது. மணியரசன் குளம் பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான சபூள்ளா சதாம் (21-வயது) என்பவரே சடமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த நபர் கடந்த 6 நாட்களுக்கு முன்னர் கிண்ணியா குரங்குபாஞ்சான் பகுதிக்கு மாடு மேய்க்கச் சென்ற நிலையில் வீடு திரும்பவில்லையென குடும்பத்தினர் காவல் நிலையத்தில் முறைப்பாடொன்றை மேற்கொண்டிருந்த நிலையில் சடமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா விபத்தில் ஒருவர் பலி: மூவர் படுகாயம்

வவுனியாவில் கடந்த 8ம் திகதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் மூவர் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். வவுனியா, மூன்றுமுறிப்பு இ.போ.ச. சாலைக்கு முன்பாக விமான நிலையத்திலிருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த ஹயஸ் வான் வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பாரவூர்தியுடன் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றது. விபத்தில், வாகன சாரதியான சுவிஸ் நாட்டில் வாழும் காந்தன் (வயது 56) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மேலும் தர்சன் (26 வயது) அற்றகின் (23 வயது) கிரிதரன் (25 வயது) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

கிணற்றில் மூழ்கி சிறுவர்கள் இருவர் உயிரிழப்பு

திருகோணமலை ஆனந்தபுரி பகுதியில், கிணற்றில் மூழ்கி சிறுவர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர். தீர்வைநகரைச் சேர்ந்த எம்.ஹேமதரன் (வயது-16) மற்றும் ஆனந்தபுரியைச் சேர்ந்த கே.புவிராஜ் (வயது-15) ஆகிய இருவருமே இவ்வாறு கிணற்றில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். குறித்த இருவரும் ஆனந்தபுரியிலுள்ள பொதுக் கிணற்றில் குளிப்பதற்காகச் சென்றபோதே, நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சொகுசுப் பேருந்து சேவை / LOCATION D'AUTOCARS
LOURDES, ESPAGNE, PORTUGAL & PARTOUT EN EUROPE
எங்களிடம் 16 முதல் 77 இருக்கைகள் கொண்ட
சொகுசுப் பேருந்துகள் தமிழ் சாரதிகளுடன் வாடகைக்கு உண்டு
Tél: 0 651 651 729 - 06 95 95 63 73
CITY EXPRESS We Move the Businessclass
www.cityexpress.fr / contact@cityexpress.fr / facebook: CityExpressParis

கலாநிதி சேரமான்

தமிழீழத்தில் அத்துமீறும் சாவக-ஹம்பேயர்கள்

முத்தமிழர்களின் வரலாற்றுத் தாயகமாகிய வடக்குக் கிழக்கின் குடிசனப் பரம்பலை மாற்றியமைக்கும் நோக்கத்துடன் கடந்த அறுபத்தொன்பது ஆண்டுகளாக சிங்கள அரசு முன்னெடுத்து வரும் சிங்களக் குடியேற்றங்களுக்கு நிகராக அண்மைக் காலங்களில் முஸ்லிம் அரசியல்வாதிகளால் முஸ்லிம் குடியேற்றங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

தமிழீழம் என்று 1922 ஆம் ஆண்டு முதல் தமிழர்களால் அழைக்கப்படும் ஈழத்தீவின் இன்றைய வடக்குக் கிழக்கு மாநிலங்களும், புத்தளம் மாவட்டமும் ஐரோப்பிய ஏகாதிபத்திய படையெடுப்புக்களுக்கு முன்னர் தமிழ் அரசுகளினதும், சிற்றரசுகளினதும் ஆளுகைக்கு உட்பட்ட நிலப்பகுதிகளாகத் திகழ்ந்தவையாகும். 1640 ஆம் ஆண்டு ஈழத்தீவில் பணிபுரிந்த போர்த்துக்கேயத் தளபதியான கப்டன் ஜோவாவோ ரிபெய்ரோ அவர்களால் எழுதப்பட்ட வரலாற்று நூலில், ஈழத்தீவில் 1505 ஆம் ஆண்டு முதன் முதலாகப் போர்த்துக்கேயர்கள் கால்

இந்துக்கள், கிறித்துவர்கள், முஸ்லிம்கள் என்று மூன்று மதங்களை பின்பற்றும் தமிழர்களிடமிருந்து இலங்கையைத் தமிழர்களைப் பிரித்தெடுத்து, அவர்களை ஒன்றை (இந்து-கிறித்துவ) தமிழர்களுக்கு எதிராக இவர்கள் திருப்பி விட முற்படுகிறார்கள்.

பதித்த பொழுது தென்புலத்தில் இயங்கிய சிங்கள இராச்சியமாகிய கோட்டை இராச்சியத்திற்கு நிகராக வடபுலத்தில் யாழ்ப்பாண இராச்சியமும், மாந்தோட்டைச் சிற்றரசும், வன்னிமைகளும், கிழக்கில் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய சிற்றரசுகளும் இயங்கியமை பதிவாகியுள்ளது.

இதற்கு முன்னர் 1344 ஆம் ஆண்டு ஈழத்தீவிற்குப் பயணம் செய்த ஈபன் பற்றூற்றா என்ற மொறக்கோ தேசத்து வணிகர் ஒருவரின் வரலாற்றுக் குறிப்பில், ஈழத்தீவில் வலிமை வாய்ந்த அரசாக யாழ்ப்பாண இராச்சியம் விளங்கியதாகவும், சிலாபம் வரை வியாபித்திருந்த இவ் இராச்சியத்தில் தமிழர்களே வாழ்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் யாழ்ப்பாண இராச்சியத்திற்கு உட்பட்ட முந்தல் பகுதியில் (இன்றைய புத்தளம் மாவட்டத்தின் ஒரு பகுதி) அரபு தேசத்தைச் சேர்ந்த ஒரேயொரு இஸ்லாமியரை மட்டும் தான் கண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ் வரலாற்றுக் குறிப்புக்கள், புத்தளத்தையும், வடக்குக் கிழக்கு மாநிலங்களையும் உள்ளடக்கிய இன்றைய தமிழீழ தாயகத்தின் பூர்வீகக் குடிகள் தமிழர்கள் மட்டுமே என்பதை உறுதி செய்கின்றன. ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஈழத்தீவிற்கு அரபு வணிகர்கள் வந்து சென்றமையும், அவர்களில் சிலர் தமிழ்ப் பெண்களைத் திருமணம் முடித்தமையும் வரலாற்று ஆவணங்கள் சிலவற்றின் மூலம் தெரிய வருகின்ற பொழுதும், யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்தியின் இராச்சியத்தில் ஒரேயொரு அரபு முஸ்லிமைத் தவிர வேறு எந்த இஸ்லாமியரையும் தான் காணவில்லை என்று மொறக்கோ வணிகர் ஈபன் பற்றூற்றா எழுதியிருப்பதைப் பார்க்கும் பொழுது, தமிழீழத்தில் முஸ்லிம்கள் வாழ்ந்தமைக்கான வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளன எனலாம். அதிலும் தன்னை மிகவும் அன்புடன் யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்தி உபசரித்தார் என்று ஈபன் பற்றூற்றா எழுதியிருப்பதானது, தமிழீழத்திற்கு வணிகர்களாக மட்டுமே முஸ்லிம்கள் வந்து சென்றார்கள் என்பதும், அப்படி வந்தோரும் விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள் என்பதும் தெளிவாகின்றது.

ஆனால் 1734 ஆம் ஆண்டில், ஒல்லாந்தரின் ஆட்சியில், யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மாதகல் மயில்வாகனப் புலவர் என்ற தமிழ்ப் புலவரால் எழுதப்பட்ட 'யாழ்ப்பாண வைபவமாலை' என்ற நூலில் மட்டும் ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணம் தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள தென்மிருசுவில், சாவகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டுவாள், முகாவில் ஆகிய பகுதிகளிலும், பின்னர் வலிகாமம் நல்லூரிலும் முஸ்லிம்கள் வாழ்ந்தமைக்கான குறிப்புக்கள் உள்ளன. அதுவும் இப்பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்கள் இனரீதியில் தமிழர்கள் என்றும், இவர்கள் சந்தச்சாய்பு என்ற ஒருவரால் முஸ்லிம்களாக மதம் மாற்றம் செய்யப்பட்ட வைவர்கள் என்றும் யாழ்ப்பாண வைபவமாலையில் மயில்வாகனப் புலவர் எழுதியிருக்கின்றார்.

இன்று தமிழீழ தாயகத்திலும், மலையகத்திலும், தென்னிலங்கையிலும் முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் பேசும் மொழி தமிழ். ஆனால் இவர்கள் தோற்றத்தில் வெவ்வேறு வகையானவர்கள். சிலர் தமிழர்கள் போன்று இருப்பார்கள். இன்னும் சிலர் சீனர்கள் போன்று இருப்பார்கள். ஏனையவர்கள் அரபு இனத்தவர்கள் போன்றும், ஆப்கானிஸ்தானியர் மற்றும் பாகிஸ்தானியர்கள் போன்றும் இருப்பார்கள். இதில் தமிழர்கள் போன்று இருப்பவர்களைத் தவிர ஏனைய தோற்றத்தைக் கொண்ட முஸ்லிம்கள் தம்மைத் தமிழர்களாக அடையாளம் காட்டிக் கொள்வதற்கு விரும்புவதில்லை. இதற்குக் காரணங்கள் உள்ளன.

முதலாவதாக சீனர்கள் போன்ற தோற்றத்தைக் கொண்ட முஸ்லிம்கள் இந்தோனேசியாவின் ஜாவா (சாவகம்) பிராந்தியத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள். யாழ்ப்பாண வைபமாலை எழுதப்பட்டதற்குப் பின்னரான காலப்பகுதியில், அதாவது பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப் பின்னர், ஒல்லாந்தர்களால் ஈழத்தீவிற்குக் கொண்டு வரப்பட்ட இந்தோனேசியாவைச் சேர்ந்த மலாய் வம்சா வழி முஸ்லிம்கள் இவர்கள்.

இரண்டாவதாக அரபு இனத்தவர்கள் போன்றும், ஆப்கானிஸ்தானியர், பாகிஸ்தானியர் போன்றும் தோற்றத்தைக் கொண்ட முஸ்லிம்கள். பிரித்தானியர்களின் ஆட்சியில் வணிகத் தேவைகளுக்காக ஈழத்தீவிற்கு வருகை தந்த அரபு, பாகிஸ்தான், ஆப்கான் வம்சா-

தமிழீழத்தின் குடிசனப் பரம்பலை மாற்றியமைத்து, அதன் மூலம் தமிழீழத் தாயகக் கோட்பாட்டைச் சிதைப்பதற்கு சிங்களவர்களைப், பின்னால் முஸ்லிம்கள் என்ற பெயரில் சாவக-ஹம்பேயர்களை மூர்க்கமாக ஒரு கலவத்திலும் தமிழர்கள் அணுகுதிக்க வேண்டும்.

வழியினர் இவர்கள். பிரித்தானியர்களின் ஆட்சியில் இவர்கள் அதிக அளவில் வந்திறங்கிப் புழங்கிய துறைமுகம், பின்னாளில் ஹம்பாந் தோட்டை எனப் பெயர்பெற்றது.

இந்த சாவக-ஹம்பேய முஸ்லிம்கள் பற்றி ஏற்கனவே 2014 ஆம் ஆண்டு ஈழமுரசில் வெளி வந்த தொடர் பத்தியொன்றில் நான் எழுதியிருக்கின்றேன்.

இப்படியான சாவக-ஹம்பேயர்களின் வழித் தோன்றல்களே இன்று தமிழீழ தாயகத்திலும், ஈழத்தீவின் ஏனைய இடங்களிலும் வாழும் அனைத்து முஸ்லிம்களினதும், அதாவது தமிழ் வம்சாவழி முஸ்லிம்களினதும் அரசியல் தலைவர்களாகத் திகழ்கின்றார்கள்.

தொடர்ச்சி 10ம் பக்கம்

சிரிய அகதிகள் இலங்கையில் புகலிடம்!

சிரியாவை சேர்ந்த குழு ஒன்று சிறீலங்காவிடம் புகலிடம் கோரியுள்ளதாக ஐக்கிய நாடுகளுக்கான அகதிகள் உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. அகதி அந்தஸ்து கோரிய இவர்களில் ஆறு சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர். இதே

வேளை, இலங்கையில் இதுவரை அகதி அந்தஸ்து கோரியுள்ளவர்களின் எண்ணிக்கை 312 ஆக உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவர்களில் பெரும்பாலானவர்கள் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானை சேர்ந்தவர்கள் எனவும் அகதி அந்தஸ்து கோரியுள்ள சிரிய மக்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட மாட்டாதெனவும் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் எம் ரணசிங்க தெரிவித்துள்ளதாவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அஸ்கிரிய மகாநாயக்க தேரர் யாழ் விஜயம்!

வடக்கின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராய்வதற்கு அஸ்கிரிய மகாநாயக்க தேரர் இரண்டு நாள் பயணமாக யாழ்ப்பாணத்திற்கு பயணம் செய்யவுள்ளார். எதிர்வரும் 28ம் நாள் தொடக்கம் 29ம் நாள்வரை வடக்கிற்கு பயணம் செய்யவுள்ள அஸ்கிரியபீட மகாநாயக்க தேரர் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக நேரில் ஆராய்வார் என இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார். லெப் ஜெனரல் இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்ற பின்னர் முதல் தடவையாக அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இதன்போது வடக்கின் நிலைமைகள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன், அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரரை வடக்கின் நிலைமைகளை ஆராய நேரில் வருமாறு லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்க அழைப்பு விடுத்திருந்தார். இவ் வழைப்பை ஏற்றுக்கொண்ட மகாநாயக்க தேரர் வடக்கிற்குப் பயணம் செய்யவுள்ளார்.

சாவகச்சேரி கண்காணிப்பு வளயத்தில்!

சாவகச்சேரி நகர வர்த்தக நிலையங்களைப் பாதுகாப்பதற்கும், அங்கு நடக்கும் குற்றச் செயல்களைக் கண்காணிப்பதற்கும் நகரப் பகுதியில் கண்காணிப்புக் கமெராக்கள் பொருத்தப்படும் என்று சாவகச்சேரி வணிகர் மன்றத் தலைவர் ந.சிவபாலன் தெரிவித்துள்ளார். நாட்டில் அதிகரித்து வரும் திருட்டுக்கள் மற்றும் சாலை விபத்துக்களைத் தவிர்க்கும் வழிமுறைகள் தொடர்பாக சாவகச்சேரி நகரப் பகுதி வணிகர்களுக்கான நடமாடும் சேவை நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பரிஸ்தமிழ் www.ParisTamil.Com .கொம்
பிரான்ஸ் செய்திகள்
பிரான்ஸ் நிர்வாக தகவல்கள் — தமிழில்
WWW.PARISTAMIL.COM

மகிந்தவுடன் சேர்ந்து பணியாற்ற சம்பந்தன் விருப்பம் தெரிவிப்பு

நாட்டில் வாழும் ஏனைய மக்களும் இந்த நாட்டுக்கு உரித்துடைய மக்கள். இந்த நாடு அவர்கள் அனைவருக்கும் சொந்தமானது என்று நினைத்து ஆட்சி நடத்தினால் நிலைமை வேறுவிதமாக அமையும். இந்தப் பணியை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும் நானும் இணைந்து நாட்டு மக்களுக்காக நிறைவேற்ற வேண்டும் என்று விரும்புகின்றேன். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ் வினைச்சொற்களை விவரித்தல் என்ற தலைப்பில் ஜலம்பிட்டியே மங்கள தேரரினால் எழுதப்பட்ட புத்தகம் மேல்மாகாண காலாசார சதுக்கத்தில் கடந்த வாரம் வெளியிடப்பட்டது. இந்த நிழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: வினைச்சொற்கள் விவரித்தல் என்ற பெயரில் தேரரினால் வெளியிடப்பட்டுள்ள புத்தகம் தமிழ், சிங்கள மக்களுக்கான உறவுப்பாலமாக அமையும். பெரும்பான்மை சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் இந்தப் புத்தகம் ஓர் உறவை ஏற்படுத்தும்.

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் யாழ்ப்பாணத்தில் பிக்குமார்கள் பாடசாலைகளுக்கு சென்று சிங்களம் கற்பித்தார்கள். தமிழ் மாணவர்களும் ஆர்வத்துடன் கற்றார்கள். ஆனால் அரசின் மொழிக்கொள்கை அரசியல் நோக்கத்தின் அடிப்படையில் மாற்றமடைந்த காரணத்தினால் துன்பியல் நிகழ்வாக சிங்கள மொழி கற்பிக்கும் செயற்பாடுகள் தடைப்பட்டு போயின. அந்த திடமான முயற்சி முன்னெடுக்கப்பட்டிருந்தால் தமிழர்கள் சிங்களத்தையும் சிங்களவர்கள் தமிழையும் கற்றிருப்பார்கள். அந்த நிலை தொடர்ந்திருந்தால் இந்த நாட்டில் ஏற்பட்ட பல பிரச்சினைகள் இடம்பெற்றிருக்காமல் போயிருக்கும். அது நடைபெறவில்லை என்றார்.

நிகழ்வில் உரையாற்றிய மகிந்த ராஜபக்ச தெரிவித்ததாவது, எமது பாடசாலைக் காலத்தில் சிங்கள – தமிழ் மாணவர்கள் ஒன்றாகக் கல்வி கற்கும் சூழல் இருந்தது. குறுகிய அரசியல் நோக்கத்தை கொண்டவர்கள், இந்த ஒற்றுமையை, அன்னியோன்யத்தை கெடுத்துவிட்டார்கள். போர் என்னால் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதால்தான், சம்பந்தன் இன்று என்னுடன் ஒரே மேடையில் இருக்கின்றார். போர் முடிவுக்கு வந்ததும் நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட்டது. போர் நடந்தபோது அதனை ஏற்படுத்த முடியாது. இன்று நல்லிணக்கம் என்ற பெயரில் நாட்டைப் பிரிக்க ஏற்பாடு நடக்கின்றது. நாட்டை இணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்றார்.

இதுஇவ்வாறிருக்க, படுகொலைக்கு துணை போன சம்பந்தன், படுகொலையை செய்த மகிந்தவுடன் சேர்ந்து பணியாற்ற விரும்புவதென்பது ஆச்சரியப்படக்கூடிய ஒன்றல்ல என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன் தெரிவித்தார். மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து செயற்பட விரும்புவதாக சம்பந்தன் தெரிவித்தது குறித்து கஜேந்திரன் மேலும் கருத்து தெரிவிக்கையில், சம்பந்தனைப் பொறுத்தவரையில், எப்போதுமே மகிந்தவின் நட்புறவை அவர் பேணி வந்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக அவர் இருந்தாலும் கூட அவர் ஒரு போதும் நேர்மையாக இருந்தது கிடையாது. பேச்சுவார்த்தையின் போது விடுதலைப் புலிகள், சுய நிர்ணய உரிமை, தமிழ்த் தேசியத்தின் இறைமை அடிப்படையில் இடைக்காலத் தீர்வொன்றைப் பெற முயற்சியை மேற்கொண்டனர். எனினும், அந்த நிலைப்பாடுகளை கைவிட்டு, சம்பந்தன், வெறும் அதிகாரப் பகிர்வுக்கு தான் தயார் என இராஜதந்திர மட்டத்தில் தெரிவித்தார்.

அதன் காரணமாக, தமிழ் மக்கள் விரும்பித் தெரிவு செய்த தலைமை ஏற்றுக்கொள்கின்ற தீர்வே தமிழ் மக்களுக்கு தேவையானது எனவும் ஆயுத பலத்துடன் உள்ள விடுதலைப் புலிகள் கேட்பது ஒரு பிரிவினைவாதத்துக்கானது என்ற நியாயப்படுத்தலே என ராஜபக்ச சர்வதேச ரீதியில் தெரிவித்தார்.

இதனால், விடுதலைப் புலிகளை பயங்கரவாதமாகச் சித்தரித்து அவர்களை அழிப்பதற்கான போரை முன்னெடுக்கின்றபோது, அதற்கான இராணுவ, நிதி உதவிகளை சர்வதேசம் வழங்கியது. இதற்கு சம்பந்தன் முழு அளவில் ஒத்துழைத்தார். இதனால், விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டது மட்டுமல்ல பொதுமக்களும் கொல்லப்பட்டனர். இதற்கான நடவடிக்கைகளுக்கு சம்பந்தன் பரிபூரண ஒத்துழைப்பை வழங்கியவர்.

பொதுமக்கள் அழிக்கப்பட்டமைக்கு சம்பந்தனுக்கும் பங்கு உண்டு. மகிந்த ராஜபக்சவின் போர் வெற்றியில் சம்பந்தனுக்கும் பங்கு உண்டு. 2010ம் ஆண்டு தேர்தல் முடிவடைந்து அவர் நாடாளுமன்றத்துக்குச் சென்ற போது அவர் போரை முடிவுக்கு கொண்டு வந்தமைக்கு ராஜபக்சவை பாராட்டியிருந்தார்.

மக்களைக் கொலை செய்து, விடுதலைப் புலிகளை அழித்துப் போரை முடிவுக்கு கொண்டு வந்திருக்கின்றீர்கள் என்ற ரீதியில், இராஜதந்திர ரீதியாக பாராட்டியிருந்தார். பல மக்கள் கொல்லப்பட்டு சிறுவர்கள் கொல்லப்பட்டு, நாம் கையாலாகாத நிலையில் இருந்த போது அவர் அவ்வாறு தான் பேசியிருந்தார். அப்போது மக்கள் அனுபவிக்கும் துன்பங்களையோ மக்கள் கடத்தப்பட்ட சம்பவங்கள் தொடர்பிலோ அவர் பேசவில்லை.

விடுதலைப் புலிகளால் பாவமன்னிப்புக் கொடுக்கப்பட்டு, 2001 தேர்தலில், புலிகளால் வெற்றிபெற்று நாடாளுமன்றப் பதவியை பெற்றுக் கொண்ட சம்பந்தன், புலிகளுக்கே துரோகம் செய்து, வாக்களித்த மக்களுக்கு துரோகம் செய்து, மக்கள் கொல்லப்பட்டமைக்கு துணை நின்ற ஒருவர், படுகொலைக்கு துணை போன ஒருவர், மகிந்தவுடன் சேர்ந்து பணியாற்ற விரும்புவதென்பது ஆச்சரியப்படக்கூடிய ஒன்றல்ல எனத் தெரிவித்தார்.

நோர்வேத் தூதுவருடன் சம்பந்தன் சந்திப்பு

இலங்கைக்கான நோர்வே தூதுவர் தோர்ப்ஜோன் கெஸ்ராட்செதர்க்கும் சிறீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இடையே கடந்த 11ம் திகதி சந்திப்பு நடந்துள்ளது. இந்தச் சந்திப்பு நாடாளுமன்றிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடந்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் சந்திப்பில் கலந்துகொண்டார்.

சிறீலங்கா - பிலிப்பைன்ஸ் பாதுகாப்பு உடன்பாடு!

சிறீலங்காவிற்கும் பிலிப்பைன்சுக்கு மிடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கு இணக்கப்பாடுகாணப்பட்டுள்ளது. பயிற்சி, கல்வி, பாதுகாப்புத் துறையில் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல் மற்றும் கடல்சார் பாதுகாப்பு போன்ற துறைகளை உள்ளடக்கியதாக இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு பலப்படுத்தப்படவுள்ளது. சிறீலங்காவின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்கவுக்கும், பிலிப்பைன்ஸின் பிரதி தேசிய பாதுகாப்பு அமைச்சர் கார்டோசோ லூனாவுக்கும் இடையில் நடத்தப்பட்ட பேச்சுக்களிலேயே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. இந்தப் பேச்சுக்களில் பிலிப்பைன்ஸின் பாதுகாப்பு உயர் அதிகாரிகளும் வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர். 50 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் பங்கேற்கும் கூட்டத்தில் பங்கேற்பதற்காக, வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்க பிலிப்பைன்ஸ் சென்றிருந்த நிலையில் இந்த உடக்பாடு எட்டப்பட்டிருந்தது.

வாகன விபத்தில் 1270 பேர் பலி!

2017ம் ஆண்டின் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மே மாதம் 31ம் திகதி வரையான முதல் ஐந்து மாத காலப்பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் சிக்கி 1270 பேர் பலியாகியுள்ளதாக சிறீலங்காவின் போக்குவரத்து காவல் துறைப் பிரிவி தெரிவித்துள்ளது. குறித்த காலப்பகுதியில் உந்துருளி விபத்துகள் 528 இடம்பெற்றுள்ளதுடன் அதில் சிக்கி 548 பேர் பலியாகியுள்ளனர். இதேவேளை கடந்த வருடத்தின் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் இடம்பெற்ற உந்துருளி விபத்துகளில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கையை விட இவ்வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் 34 மரணங்கள் அதிகரித்துள்ளதாகவும் அப்பிரிவு தெரிவித்துள்ளது.

மனைவியைக் கொன்ற முன்னாள் சிப்பாய்க்கு மரண தண்டனை

தனது மனைவியைக் கொலை செய்த விவகாரம் தொடர்பில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தின் முன்னாள் கோப்ரல் ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அனுராதபுரம் மேல் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. 2007ம் ஆண்டு செப்டம்பர் 22ம் திகதி நொச்சியாகம பகுதியில் தனது மனைவியை கொன்று மண்னுக்குள் புதைத்தாக, இவர் மீது குற்றம்சுமத்தப்பட்டது. மன்னார் பகுதியில் இருந்த இராணுவ முகாமில் கடமையாற்றிய காலத்திலேயே அவர் இந்த குற்றத்தை இழைத்துள்ளதாக கூறப்பட்டது. இதனடிப்படையில் அனுராத புரம் மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த வழக்கில், குறித்த முன்னாள் இராணுவ கோப்ரளுக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கூவில்குமுவின் மிரட்டலால் உன்னிகிருஸ்ணனின் இசை நிகழ்ச்சி நிறுத்தம்!

இனப்படுகொலையில் ஈடுபட்ட சிறீலங்கா இராணுவத்துடன் இணைந்து தமிழினப் படுகொலைகளில் ஈடுபட்ட ஈ.பி.டி.பி. கூவில்குமுவின் எதிர்ப்பு மற்றும் மிரட்டல் காரணமாக யாழ்ப்பாணத்தில் தான் நடத்த இருந்த இசை நிகழ்ச்சி யைத் நிறுத்தினார் தென்னிந்தியப் பாடகர் உன்னிகிருஸ்ணன். அவர் உயிருக்கும் அவரது மகளின் உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தால் யாழ்ப்பாண இசை நிகழ்சி கடைசி நேரத்தில் நிறுத்தப்பட்டதாக ஏற்பட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்தியாவின் சுதந்திரதினத்தை முன்னிட்டு இந்தியத் தூதரகம் ஏற்பாடு செய்த இசைநிகழ்ச்சி யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை நகரில் நடைபெற திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் யாழ்ப்பாண நிகழ்சியை நடத்த முடிய வில்லை.

ஐந்து வருடங்களுக்கு முன்னரும் யாழ்ப்பாணம் வந்திருந்தார் உன்னிகிருஸ்ணன். அப்போது மேடையில் ஏறி தனது இரத்தக்கறை படிந்த கரத்தால் மதிப்பளித்தார் கூவில்குழுவின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா. நாடு திரும்பிய உன்னிக்கிருஸ்ணன், டக்ளஸ் போன்ற ஒருவரால் தனக்குமதிப்பளிக்கப்பட்டமைக்காகவருந்துவதாக ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார்.

இந்தப் பின்னணியில், உன்னிக் கிருஸ்ணனின் இசை நிகழ்ச்சி யாழ். நகரப் பகுதியில் கடந்த வாரம் நடைபெற ஏற்பாடாகி இருந்த நிலையில் முதல்நாள் இரவோடு இரவாக அவருக்கு எதிரான சுவரொட்டிகள் நகரில் ஒட்டப்பட்டிருந்தன. யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலும், 'யாழ் மக்கள்' என்ற பெயருடன் அநாமதேயச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. எங்கள் தலைவர் டக்ளஸ் தேவானந்தா மீது அவதூறு சுமத்தும் பொய்யான குற்றச்சாட்டைக் கூறிய உன்னி எங்கள் மண்ணில் இன்னிசை பாட முடியாது. பகிரங்க மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று சுவரொட்டியில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதையடுத்து இசை நிகழ்ச்சி நிறுத்தப்பட்டது. யாழ்ப்பாண இசை நிகழ்சியில் பங்கேற்றால் தனது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று உன்னிக்கிருஸ்ணன் அச்சமடைந்த காரணத்தால் இசை நிகழ்வை இரத்துச் செய்யக் கோரியதாக, நிகழ்சி ஏற்பட்டாளர்கள் தெரிவித்தனர். யாழ். நகரின் மையத்தில் மணிக்கூட்டு கோபுர வீதி மற்றும் ஸ்ரான்லி வீதி ஆகிய சந்திக்கும் இடத்தில் உள்ள வெற்றுக் காணியில் பாடகர் உன்னிக் கிருஸ்ணனதும் அவரது மகள் உத்தராவினதும் திரைப் பாடல்கள் இசை நிகழ்ச்சி நடப்தாக இருந்தது. இந்த நிகழ்ச்சி நிறுத்தப்பட்டாலும் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை நிகழ்வுகள் திட்டமிட்டபடி நடைபெற்றன.

இன்னொரு மொழிப் படுகொலை!

சிறீலங்காவின் பதுளை மாகாண வைத்தியசாலை பல் சிகிச்சைப் பிரிவில் பல் நோயாளிகளின் வழி காட்டலுக்காக மும் மொழி களிலும் தொங்க விடப்பட்டுள்ள பலகையில் தமிழ் மொழி படுகொலை செய்யப்பட்டுள்ளதைப் பாருங்கள். இங்கு மட்டுமல்ல சிறீலங்கா அரசாங்கத்தின் பல்வேறு அறிவுறுத்தல் பலகைகளில் தமிழ் மொழியானது படுகொலை செய்யப்பட்டுள்ளது. இதனை கடந்த காலங்களில் வெளிப்படுத்தியிருந்தோம். தற்போது இது. இந்த விடயத்தை எடுத்துக்கூறியும் அவர்கள் அதனை மாற்ற முன்வரவில்லை. இந்த விடயத்தை ஊடகங்கள் அம்பலப்படுத்தியதால், தற்போது எழுத்துப்பிழைகளை சரி செய்து புதிய அறிவிப்புப் பலகையை வைத்துள்ளனர்.

உந்துருளி விபத்தில் இளம் யுவதி பலி!

யாழ். ஆனைக்கோட்டையில் உந்துருளியும் துவிச்சக்கரவண்டியும் விபத்துக்குள்ளானதில் இளம் யுவதி பரிதாபகரமாக உயிரிழந்தார். கடந்த 17ம் திகதி வியாழக்கிழமை காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஆனந்தவீதி மானிப்பாயைச் சேர்ந்த கமலகுகராசா சாலினி (வயது 22) என்ற யுவதியே உயிரிழந்தவராவார். இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, உந்துருளியில் தனது சகோதரனுடன் குறித்த யுவதி பயணம் செய்துள்ளார். காரைநகரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற பேருந்தை ஆனைக்கோட்டை 3 ஆம் கட்டைப் பகுதியில் உந்துருளி முந்திச்செல்ல முற்பட்டபோது எதிரே வந்த துவிச்சக்கரவண்டியுடன் விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன்போது யுவதி உந்துருளியில் இருந்து தூக்கி வீசப்பட்டு எலும்புகள் உடைந்து படுகாயமடைந்த நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு, சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் உந்துருளியை செலுத்திச்சென்ற யுவதியின் சகோதரன் கமலகுகராசா அனுசன் (வயது 20) யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வீடு திரும்பினார்.

வடிவேலுவும் நம்ம அரசியல் தலைகளும்

செய்திகளும் எழும் கேள்விகளும்

தெரிவாகள்

செய்தி:- நல்லாட்சி செல்கின்ற போக்கை பார்க்கின்ற போது இலங்கை நாட்டின் முழுச் செல்வங்களையும் விற்றுவிடுவார்களோ என்ற அச்சம் எழுவதாக சிறீலங்கா நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

எழும் கேள்வி:- விற்பதற்கு எதனை விட்டுவைத்துள்ளீர்கள்..?

★★★★ ★★★★

செய்தி:- ஆண்களைக் காட்டிலும் பெண்களின் மூளை அதிக சுறுசுறுப்புடன் செயல்படுவது அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

எழும் கேள்வி:- இதனை ஆய்வு செய்தா கண்டுபிடிக்கவேண்டும்..?

★★★★ ★★★★

செய்தி:- முல்லைத்தீவு கேப்பாபிலவு காணி விடுவிப்பு தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.சம்பந்தன் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோருக்கு மீண்டும் கடிதங்களை அனுப்பியுள்ளார்.

எழும் கேள்வி:- கடிதம் எழுதும் பழக்கத்தை யாரிடம் கற்றுக் கொண்டிருப்பார்..? ஆனந்தசங்கரியிடமா...? தமிழ்நாட்டுத் தலைவர்களிடமா..?

★★★★ ★★★★

செய்தி:- சிறீலங்காவின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுடன் இணைந்து செயற்பட விரும்புவதாக, அந்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

எழும் கேள்வி:- தமிழினப் படுகொலையில் வெளிப் படையாகவே ஈடுபடப் போகின்றாரோ..?

★★★★ ★★★★

செய்தி:- தெற்கில் வாழும் மக்கள் வடக்கில் என்ன நடப்பதாக கேள்விப்படுகின்றார்களோ அதை அப்படியே நம்பிவிடுவதாக சிறீலங்கா இராணுவ தளபதி லெப்டினல் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

எழும் கேள்வி:- பகுத்தறிந்து, ஆராய்ந்து பார்க்கும் அறிவு அவர்களிடம் கொஞ்சம்கூட இல்லையா..?

★★★★ ★★★★

செய்தி:- வெளிநாட்டு முதலீடுகளின் போது நாட்டின் இறைமைக்கு பாதிப்பேற்படாதவாறு செயற்படுவது தற்போதைய அரசாங்கத்தின் கொள்கையாகுமென சிறீலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

எழும் கேள்வி:- நாட்டையே கடனுக்கு அடைவு வைத்தாகிவிட்டது, இதில் இறைமை எங்கிருக்கின்றது..?

★★★★ ★★★★

செய்தி:- வடக்கின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராய்வதற்கு அஸ்கிரிய மகாநாயக்க தேரர் இரண்டு நாள் பயணமாக யாழ்ப்பாணத்திற்கு பயணம் செய்யவுள்ளார்.

எழும் கேள்வி:- பாதுகாப்பு நிலையை ஆராய இவர் அரசில் எந்தப் பொறுப்பில் இருக்கின்றாராம்..?

★★★★ ★★★★

செய்தி:- சிரியாவை சேர்ந்த குழு ஒன்று சிறீலங்காவிடம் புகலிடம் கோரியுள்ளதாக ஐக்கிய நாடுகளுக்கான அகதிகள் உயர்ஸ்தானிக ராலயம் தெரிவித்துள்ளது.

எழும் கேள்வி:- கசாப்புக்கடைக்காரனிடம் கருணையை எதிர் பார்த்து வந்த ஆடுகளோ..?

★★★★ ★★★★

செய்தி:- சிரியா அதிபர் பசார் அல்-ஆசாத் மீது போர்க் குற்றம் சுமத்துவதற்குப் போதுமான ஆதாரம் உள்ளதாக ஐ.நா. சார்பில் அமைத்த விசாரணைக் குழுவில் இடம் பெற்ற உறுப்பினர் தெரிவித்திருக்கிறார்.

எழும் கேள்வி:- சிறீலங்கா மீது சுமத்த இன்னமும் ஓர் ஆதாரமும் உங்களுக்குக் கிடைக்கவில்லையா..?

★★★★ ★★★★

செய்தி:- சிறீலங்கா அரசின் அரசியல்போக்கு திசைமாறி வரும் நிலையில் இனியும் பார்த்துக்கொண்டிராமல் உலக நாடுகள் தலையிட வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் வெளிநாடுகளின் தூதுவர்களுக்குத் எழுதிய கடிதத்தில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளாராம்.

எழும் கேள்வி:- அப்ப இவ்வளவு காலமும் சரியான திசையில்தான் போனதாமோ..?

★★★★ ★★★★

கலாசார மண்டபம் 2018 டிசம்பரில் முடியும் துணைத் தூதுவர் தெரிவிப்பு

இந்திய அரசின் நிதி உதவியுடன் யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக் கப்பட்டு வரும் கலாசார மண்டபப் பணிகள் 2018 டிசம்பர் மாதத்தில் நிறைவு பெற்றுவிடு மென இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நட ராஜன் தெரிவித்துள்ளார்.

இந்திய சுதந்திரதின நிகழ்வு கடந்த 15ம் திகதி மாலை யாழ்ப்பாணம் கிரீன் கிராஸ் விடுதியில் நடைபெற்றது. அங்கு உரை யாற்றுகையிலேயே இதனை அவர் தெரி வித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரி வித்கையில், முல்லைத்தீவு கடற்றொழிலா ளர்களுக்கு 150 விசைப் படகுகள் விரை வில் வழங்கப்படவுள்ளதாகவும் குறிப் பிட்டுள்ளார்.

குளிக்கும் பெண்களே அவதானம்!

ட்ரோன் கமெராவைப் பயன்படுத்தி பொதுஇடங்களில் பெண்கள் குளிப்பதை காணொளி எடுப்பதாக பல முறைப்பாடு கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக சிறீலங்கா

வின் வென்னப்புவ காவல்துறையினர் தெரிவித்தனர். வென்னப்புவ பிரதேசத்தில் பெண்கள் குளிப்பதை ட்ரோன் கமெரா மூலம் காணொளி எடுப்பதை இளைஞன் ஒருவர் அவதானித்த நிலையில் வென் னப்புவ காவல்துறையிடம் முறைப்பாடு செய்துள்ளார். இவ்வாறு ட்ரோன் கமெ ராவைப் பயன்படுத்தி பெண்கள் குளிப் பதை காணொளி எடுத்து இணையத் தளங்களில் பகிரப்படுவதாக சந்தேகிக்கும் காவல்துறையினர், இச் சம்பவம் தொடர் பில் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

சிறுமி துஷ்பிரயோகம் உடந்தையாக இருந்த இரு பெண்கள் கைது

அம்பாறை, ஆலையடிவேம்பு பிர தேசத்தில் 14 வயதுச் சிறுமியைக் கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியவருக்கு உதவிய இரு பெண்களை அக்கரைப்பற்றிலுள்ள சிறீ லங்கா காவல்துறையினர் கைது செய்

துள்ளனர். 23 வயதுடைய நபரொருவர் கடந்த மாதம் 31ம் திகதி சிறுமியை ஆலை யடிவேம்பு பிரதேசத்தில் இருந்து பொத்து வில் பிரதேசத்துக்குக் கடத்திச் சென்று வீட்டில் தடுத்து வைத்துள்ளார். மறுநாள் சிறுமியை அவரது வீட்டுக்கு அருகில் விட்டுச் சென்றுள்ளார். சிறுமி கடத்தல் சம்பவம் தொடர்பாகச் சந்தேகநபரான இளைஞனும் அவருக்கு உதவிய சிறுமி யின் நெருங்கிய உறவுப் பெண்கள் இரு வரும் கைது செய்யப்பட்டு விளக்கமறிய லில் வைக்கப்பட்டுள்ளனர்.

யாழில் குற்றங்களில் ஈடுபடுகின்றவர்களுக்கு ஜேர்மனியில் இருந்து நிதியுதவி கிடைக்கிறது

சி.வி.விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டுக்கள் மற்றும் சமூக விரோத குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றவர்களுக்கு நிதியுதவி வழங்கி அவர்களோடு இக்குற்றச் செயல்களில் தொடர்புபட்ட நபரொருவர் ஜேர்மனியில் இருப்பது தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளதாக வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

செவ்வாய்கிழமை (15) வடக்கு மாகாண முதலமைச் சர் தனது அலுவலகத்தில் யாழ்.குடாநாட்டின் நிலைமைகள் தொடர்பாக ஆராய்வதற்காக காவல்துறையினருடன் சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தார். இச் சந்திப்பில் யாழ்.மாவட்டத்திற்கான சிறீலங்காவின் பிரதி காவல்மா அதிபர் பாலித்த பெர்னான்டோ, யாழ்.பிராந்திய சிரேஸ்ட காவல் அத்தியட்சகர் ஸ்ரேணிஸ்லஸ், காங்கேசன்துறை சிரேஸ்ட காவல் அத்தியட்சகர் மாசிங்க, உதவி காவல் அத்தியட்சகர்கள் மற்றும் யாழிலுள்ள காவல் நிலையங் களின் பொறுப்பதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

காவல்துறையினருடன் முதலமைச்சர் மேற்கொண்ட இந்த இரண்டாவது சந்திப்பின்போது பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் கடந்த மாதம் 14ம் திகதி இடம்பெற்ற

தொடர்ச்சி 22ம் பக்கம்

தமிழீழத்தில் அத்துமீறும்.....

இந்துக்கள், கிறித்துவர்கள், முஸ்லிம்கள் என்று மூன்று மதங்களை பின்பற்றும் தமிழர் களிடமிருந்து இஸ்லாமியத் தமிழர்களைப் பிரித்தெடுத்து, அவர்களை ஏனைய (இந்து-கிறித் துவ) தமிழர்களுக்கு எதிராக இவர்கள் திருப்பி விட முற்படுகிறார்கள்.

இதில் இன்னுமொரு சூட்சுமமும் இருக்கின் றது. உலகெங்கும் பரந்து வாழும் இஸ்லாமி யர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்: சுன்னா, சியா, சுபி ஆகிய பிரிவுகளே அவையாகும். இதில் சுன்னா, சியா ஆகிய பிரிவுகள் முறையே அரபு, பாரசீக வழிமுறையிலான மார்க்கங்களா கும். ஆனால் சுபி இஸ்லாமிய பிரிவு இதிலிருந்து வேறுபட்டது. இவர்கள் அல்லாஹ்வைத் தமது தெய்வமாக வழிபட்டாலும், தென்னிந்தியா வில் இந்துக்கள் பின்பற்றும் வழிபாட்டு முறை களை உள்வாங்கியே தமது வழிபாடுகளை

> தமிழீழத்தின் குடிசனப் பரம்பலை மாற்றியமைத்து, அதன் மூலம் தமிழீழத் தாயகக் கோட்பாட்டைச் சிதைப்பதற்கு சிங்களவர்களோ, அன்றில் முஸ்லிம்கள் என்ற பெயரில் சாவக-ஹம்பேயர்களோ முற்படுவதை ஒரு காலத்திலும் தமிழர்கள் அனுமதிக்க மாட்டார்கள்.

மேற்கொள்கின்றார்கள். அதாவது இவர்கள் தமிழ்ப் பண்பாடு உட்பட தென்னிந்தியாவின் பண்பாட்டு முறைகளை உள்ளடக்கியே தமது சமய வழிபாடுகளை மேற்கொள்கின்றார்கள். இதில் ஈழத்தீவில் வசிக்கும் தமிழ்பேசும் முஸ் லிம்களில் தமிழர்கள் போன்ற தோற்றப்பாட் டைக் கொண்ட முஸ்லிம்களில் குறிப்பிடத்தக்க வர்கள் சுபி இஸ்லாமிய மதத்தவர்களாவர்.

தமது பெயர்களோடு தமிழ்ப் பெயர்களை இணைத்து வாழும் இந்த சுபி இஸ்லாமியத் தமிழர்களை ஈழத்தீவின் முஸ்லிம்களில் பெரும் பான்மையினரான சுன்னா மார்க்கத்தைச் சேர்ந்த சாவக-ஹம்பேயர்களுக்கு அறவே பிடிக் காது. அடிக்கடி தென்தமிழீழத்தில் முஸ்லிம்களி டையே நடக்கும் மோதல்கள், தமிழர்களான சுபி இஸ்லாமியர்களுக்கு எதிரான சுன்னா இஸ் லாமியர்களின் காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பா டாகும். இவர்களின் நோக்கம் ஈழத்தீவின் முஸ் லிம்களின் வாழ்வில் இருந்து சுபி இஸ்லாமை இல்லாதொழிப்பதாகும்.

கடந்த காலங்களில் தென்தமிழீழத்தில் இந்து மற்றும் கிறித்துவ சமயங்களைச் சேர்ந்த தமிழர்களுக்கு எதிராக ஜிகாத் குழு என்ற பெயரில் இயங்கிய முஸ்லிம் ஊர்காவல் படை யினரால் இழைக்கப்பட்ட படுகொலைகள் கூட தமிழர்களான சுபி இஸ்லாமியர்களுக்கும், இந்து - கிறித்துவத் தமிழர்களுக்கும் இடையில் முரண் பாடுகளைத் தோற்றுவித்து, அதன் மூலம் சுபி இஸ்லாமியர்களைப் பலவீனப்படுத்தி, அதனூ டாக சுபி இஸ்லாமை இல்லாதொழித்து ஈழத் தீவின் அனைத்து முஸ்லிம்களையும் சுன்னா இஸ்லாமியர்களாக்கும் நோக்கத்தைக் கொண் டவையாகும்.

இப்பொழுது தமிழீழத்தில் நிகழும் முஸ்லிம் குடியேற்றங்களைப் பார்ப்போம்.

தமிழீழம் என்பது தமிழர்களின் வரலாற்றுத் தாயகம் ஆகும். தமிழர்கள் சைவ வழிவந்த இந்துத் தமிழர்களாக இருந்தாலும் சரி, போர்த் துக்கேயரின் வருகைக்குப் பின்னர் கிறித்துவத் தைத் தழுவிய கிறித்துவத் தமிழர்களாக இருந் தாலும் சரி, யாழ்ப்பாண வைபவமாலையில் குறிப்பிடப்படும் சந்தச்சாய்புவால் இஸ்லாமி யர்களாக மதம் மாற்றப்பட்ட இஸ்லாமியத் தமிழர்களாக இருந்தாலும் சரி, தமிழர்கள்

என்ற முறையில் இவர்கள் அனைவருக்கும் தமிழீழம் பொதுவான தாயகம். இதேநேரத்தில் பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியில் தமிழீழத் தைத் தமது தாயகமாக வரித்துக் கொண்ட சாவக-ஹம்பேயர்கள், சிங்களவர்கள், பறங்கி யர்கள் போன்ற தமிழீழத்தின் சிறுபான்மையின ரையும் தமிழீழத்தின் குடிமக்களாகத் தமிழீழ தேசம் ஏற்றுள்ளது. இதனை சோலிச தமிழீழம் என்ற கொள்கை விளக்க நூலில் தமிழீழ விடு தலைப் புலிகள் தெளிவாகக் குறிப்பிட்டிருக் கின்றார்கள்.

அதேநேரத்தில் தமிழீழத்தின் குடிசனப் பரம்பலை மாற்றியமைக்கும் நோக்கத்துடன் கடந்த அறுபத்தொன்பது ஆண்டுகளாகத் தமிழீழ தாயகத்தில் சிங்கள ஆட்சியாளர்களால் முன் னெடுக்கப்படும் திட்டமிட்ட சிங்களக் குடி யேற்றங்கள் ஊடாகக் குடியமர்த்தப்படும் சிங்களக் குடியேற்றவாசிகளையோ, அன்றி முஸ்லிம்கள் என்ற பெயரில் இப்பொழுது குடியமர்த்தப்பட்டு வரும் சாவக-ஹம்பேயர் களையோ தமிழீழத்தின் குடிமக்களாக எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழீழ தேசம் ஏற்றுக் கொள் ளாது.

வணிக, கல்வி மற்றும் தொழில் தேவைக ளின் நிமித்தமும், உயிர்த் தஞ்சம் கோரியும் தத்தமது பூர்வீக நிலங்களை விட்டு மக்கள் புலம்பெயர்வதும், தாம் புலம்பெயர்ந்த நிலங்க ளில் அவர்கள் நிரந்தரமாக வாழ்வதும் இன் றைய உலகமயமாக்கல் சூழலில் வழமையாகி விட்டது. அந்த வகையில் இவ்வாறான கார ணங்களுக்காகத் தமிழீழத்திற்கு வருகை தரும் அல்லது குடியேறும் ஏனைய இனத்தவர்களை வரவேற்காது விரட்டியடிப்பதற்குத் தமிழர்கள் ஒன்றும் இனவெறி கொண்டவர்கள் அல்ல.

ஆனால் அதேநேரத்தில் தமிழீழத்தின் குடி சனப் பரம்பலை மாற்றியமைத்து, அதன் மூலம் தமிழீழத் தாயகக் கோட்பாட்டைச் சிதைப் பதற்கு சிங்களவர்களோ, அன்றில் முஸ்லிம்கள் என்ற பெயரில் சாவக-ஹம்பேயர்களோ முற் படுவதை ஒரு காலத்திலும் தமிழர்கள் அனு மதிக்க மாட்டார்கள். இன்று தமிழீழத்தில் சாவக - ஹம்பேய வம்சாவழி முஸ்லிம் அரசியல்வாதி களால் நடைமுறைப்படுத்தப்படும் முஸ்லிம் குடியேற்றத் திட்டங்கள் இவ்வாறான நோக் கத்தைக் கொண்டிருப்பதன் காரணமாகவே இவற்றைத் தமிழர்கள் கடுமையாக எதிர்த்து வருகின்றார்கள். இதனை தமிழீழத்தின் தமிழ் வம்சாவழி முஸ்லிம்கள் புரிந்து கொண்டு இவ் வாறான குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்து வதற்கு முன்வர வேண்டும்.

அவ்வாறு அல்லாது கடந்த காலத்தில் தென் தமிழீழத்தில் தமிழர்களை ஜிகாத் குழு அடிப் படைவாதிகள் கொன்றுகுவித்த பொழுது மத அடிப்படையில் சாவக-ஹம்பேயர்களின் இஸ் லாமிய மத வெறியைக் கண்மூடி வேடிக்கை பார்த்தது போன்று இம்முறையும் தமிழ் வம்சாவழி முஸ்லிம்கள் நடந்து கொள்வார்க ளாயின், ஏனைய தமிழர்களிடம் இருந்து தமி ழீழத்தின் தமிழ் வம்சாவழி முஸ்லிம்கள் அந்நியப்பட்டுப் போகும் நிலையே ஏற்படும்.

முதல் முஸ்லிம் மாவீரன் லெப்.ஜூனைதீன் தொடக்கம் இறுதிப் போரில் மடிந்த லெப்கேணல் தரத்தேவன் வரையான ஒவ்வொரு முஸ்லிம் புலி வீரர்களும் தம்மைத் தமிழீழ தேசத்தின் அங்கமாகக் கருதியே தமிழீழ தாய்மண்ணின் விடுதலைக்காகப் போராடித் தமது உயிர்களை ஈகம் செய்திருக்கின்றார்கள். இதனைப் புரிந்து கொண்டு இனியாவது தமிழ் வம்சாவழி முஸ் லிம்கள் ஒவ்வொருவரும் நடந்து கொள்ள வேண்டும்.

சிங்கள மயமாகும் கிழக்குப் பல்கலைக்கழகம்

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நிலை கொண்டுள்ள சிங்கள காவல்துறை யினரின் அசமந்தப் போக்கினால் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும், சிங்கள மாணவர்களுக்குமிடையில் அடிக்கடி முறுகல் நிலை ஏற்படுவதை அவதானிக்கலாம். இதற்கு பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கொழும்பு அரசாங்கமும் ஒத்துழைத்து கலவரங்களில் ஈடுபடும் மாணவர்களை பாதுகாக் கின்றனர்.

கொழும்பு அரசாங்கத்தின் நீண்டகால கனவு கிழக்கு பல்கலைக்கழகத்தை எப்படியாவது சிங்கள மாணவர்களின் ஆதிக்கத்திற்குட்படுத்த வேண்டும் என்பது. ஆனால் சிங்களத்தின் கனவு விடுதலைப் புலிகளின் காலத்தில் பகல்கனவா கவே இருந்தது. ஆளுங்கட்சி மாத்திரமல்ல கொழும்பிலுள்ள இனவாத கட்சிகளான ஜே.வி.பி போன்ற கட்சிகள் சிங்கள மாணவர்களின் ஊடாக இனங்களிடையே ஒரு கொதிப்பான நிலையைப் பேணவேண்டும் என்பது அவர்க ளின் அடிப்படை கொள்கைகளில் ஒன்று.

இதனடிப்படையில் கடந்த 2007 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட் டிலிருந்து மட்டக்களப்பு மாவட்டம் இழக்

ளர் ஒருவர் சிங்கள மாணவர்களினால் படு கொலை செய்யப்பட்டார் அதனையும் பல் கலைக்கழக நிர்வாகமும், காவல்துறையும் இணைந்து மூடிமறைத்தனர்.

அதுமாத்திரமல்ல, ஒவ்வொரு ஆண்டும் நிர்வாகத்தினர் மற்றும் விரிவுரையாளர்களை முற்றுகையிடுவதுடன், அவர்களின் பணிக்கு

ஆர்ப்பாட்டம் முடியும் நேரத்தில் சிங்கள மாணவர்கள் அனைவரும் நிர்வாக கட்டிடத்துள் சென்று அதை முற்றுகையிட்டனர். இதனை தடுக்க முற்பட்ட பாதுகாப்பு ஊழியர் ஒருவரின் கை உடைக்கப்பட்டதுடன் ஏனைய இருவர் தாக்கப்பட்டனர். நிர்வாக கட்டிடத்தை தொடர்ந்து சுமார் 8 மணித்தியாலங்களாக சிங்கள மாணவர்களின் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். எனினும் பல்கலைக்கழக வளாகத்தில் நிலைகொண்டுள்ள சிறீலங்காக் காவல்துறையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கப்பட்ட பின்னர் சிங்கவர்களின் ஆதிக்கம் படிப் படியாக அதிகரிக்கத் தொடங்கி இன்று உச் சக்கட்டத்தைடைந்துள்ளது எனலாம். ஆயுதம் ஏந்திய படைத் தரப்பு, காவல்துறை என அனை வரும் சிங்கள மாணவர்களுக்கு பாதுகாப்பாக இருக்கின்றனர்.

சிங்கள மாணவர்கள் என்ன வகையான அடாவடித்தனங்களில் ஈடுபட்டாலும் கண்டு கொள்ளாத ஆயுதப்படையினர், தமிழ் மாண வர்கள் உயிர்நீத்த தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினால்போதும் ஆயுதப்படையினர் குவிக்கப்பட்டு தமிழர் மாணவர்கள் கைது செய்யப்படுவதும், தாக்கப்படுவது வழமையான விடயமாக அங்கு மாறியுள்ளது.

2008 ஆம் ஆண்டு விடுதி மேற்பார்வையா குந்தகம் விளைவிக்கும் வகையில் சிங்கள மாண வர்கள்நடந்துகொள்கின்றனர். ஆனால், இவற்றை கட்டுப்படுத்துவதற்கான பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுவும் கண்மூடிக் கொண்டு தான் இருக்கின்றனர். இது ஒருதலைப்பட்ச மான நடவடிக்கையாகவே கருதவேண்டும்.

சிங்களத்தின் ஆதிக்கத்தை நிலைநாட்டு வதற்காக கொழும்பு அரசாங்கம் ஐந்து சிங்கள உத்தியோகத்தர்களை நியமித்துள்ளனர். அதே போன்று கலை, வர்த்தகம் மற்றும் முகாமைத் துவம், விஞ்ஞான, பொறியியல் ஆகிய நான்கு பீடங்களையும் இணைத்து மூவினங்களையும் சேர்ந்து 5 ஆயிரம் மாணவர்களுக்கான வசதிகள் பல்கலைக்கழகத்தில் உள்ளன. எனினும், கிழக்கு மாகாணத்தில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவா கும் தமிழ் பேசும் மாணவர்கள் வலுக்கட்டா

'கிழக்கில் ஊருந்து' எழுவான்

யமாக வடகிழக்குத் தவிர்ந்த ஏனைய மாகா ணங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். ஆனால் தென்னிலங்கை மாணவர்களுக்கு தென்பகுதியில் இடம் இருந்தும் ஆதிக்கவெறி காரணமாக கிழக்கு மாகாணத்திற்கே அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

ஒவ்வொரு பீடத்திற்கு சுமாராக 1200 தொடக்கம் 1300 வரையிலான மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்களில் 1ம் மற்றும் நான்காம் வருட மாணவர்களுக்கு இனம், மதம் பார்க்காமல் விடுதி வசதி வழங்கப் படுகிறது. ஆனால், 2ம் மற்றும் 3ம் வருட மாணவர்களுக்கும் விடுதி வசதி ஏற்படுத்தித் தரவேண்டும் என்பது சிங்கள மாணவர்களின் கோரிக்கையாக முன்வைக்கப்படும் முதலாவது கோரிக்கையாக உள்ளது. எனினும் இதனை சமாளிக்கமுடியாமல் பல்கலைக்கழக நிர்வாகம் மாணவர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்த வேண்டும் என மானியங்கள் ஆணைக்குழு விடம் விண்ணப்பித்தனர். ஆனால் அவர்கள் செவிமடுத்ததாகத் தெரியவில்லை.

இதேபோன்று பல்கலைக்கழக வளாகத் தினுள் குழப்பங்களை ஏற்படுத்தும் மாணவர் களை அடையாளம் கண்டு வகுப்புத் தடை களை ஏற்படுத்தி அவர்களை கட்டாய விடு முறையில் வீட்டுக்கு அனுப்பப்படுகின்றனர். ஆனால் அம்மாணவர்களை மீண்டும் கல்வி செயற்பாட்டில் ஈடுபடுத்த வேண்டும் என்பது சிங்கள மாணவர்களின் இரண்டாவது கோரிக் கையாகும். ஆனால், பல்கலைக்கழகத்திற்கென்று சில ஒழுக்கவிதிமுறைகள் உள்ளதை யாவரும் அறிவார்கள். இந்நிலையில் மாணவர்கள் இவ் வாறு கோருவது கொழும்பு அரசியல் பின் புலத்திலா? என்ற சந்தேகம் எல்லோர் மட்டங் களிலும் எழுப்பப்படுகிறது.

கடந்த 08.08.2017 அன்று கிழக்குப் பல் கலைக்கழக சிங்கள மாணவர்களால் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

சுமார் ஒரு மாத காலத்திற்கு மேலாக நடந்து வரும் தங்களது போராட்டங்களை நிர்வாகம் கவனத்தில் கொள்ளவில்லை என்றும் விடுதி வசதியை வழங்க வேண்டும் என்றும் விதிக்கப் பட்டுள்ள வகுப்புத் தடையை நீக்கக் வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப் பாட்டம் முடியும் நேரத்தில் சிங்கள மாணவர் கள் அனைவரும் நிர்வாக கட்டிடத்தினுள் சென்று அதை முற்றுகையிட்டனர். இதனை தடுக்க முற்பட்ட பாதுகாப்பு ஊழியர் ஒருவரின் கை உடைக்கப்பட்டதுடன் ஏனைய இருவர் தாக்கப்பட்டனர்.

நிர்வாக கட்டடம் தொடர்ந்து சுமார் 8 மணித்தியாலங்களாக சிங்கள மாணவர்களின் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

தொடர்ச்சி 22ம் பக்கம்

சிறுமியை துஷ்பிரயோகம் விளக்கமறியல் நீடிப்பு

கிளிநொச்சி, முரசுமோட்டை பகுதி யில் சிறுமி ஒருவரை துஷ்பிரயோகம் செய்த குற்றத்திற்காக கைதுசெய்யப்பட் டுள்ள சந்தேக நபர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பாக கடந்த மாதம் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறி யலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நிறுத் திய போதே எதிர்வரும் 23ம் திகதி வரை விளக்கமறியல் வைக்குமாறு உத்தர விட்டுள்ளார்.

சிறீலங்காவின் பாதுகாப்பில் இந்தியா கடும் அக்கறை

சிறீலங்காவின் பாதுகாப்பின் மீது இந்தியா அக்கறை கொண்டிருப்பதாக சிறீலங்காவிற்கான இந்திய தூதுவர் தரன்ஜித் சிங் சந்து தெரிவித்துள்ளார். இந்தியாவின் 70வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் நடந்த நிகழ்வில் உரையாற் றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: சிறீலங்காவின் பாதுகாப்பின் மீது இந்தியா அக்கறை கொண்டிருக்கிறது. சிறீலங் காவின் ஒற்றுமை, இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்க இந்தியா கடமைப்பட்டுள்ளது.

பல மொழி, பல்லின, பல சமூகங்கள் வாழும் இலங்கையில், அனைத்து மக்க ளும், சமத்துவம், பாதுகாப்பு, நல்லிணக் கத்துடன், வாழ்வதற்கான முயற்சிகளுக்கு இந்தியா எப்போதும் ஆதரவளித்து வந் துள்ளது.

சிறீலங்காவுடன் தொடர்ந்து ஒத்து ழைப்பை வலுப்படுத்துவதில் இந்தியா ஈடுபடும். உட் கட்டமைப்பு, உற்பத்தி, சுகாதாரம், கல்வி, விஞ்ஞானம், தொழில் நுட்பம் போன்றதுறைகளின் முதலீடுகளுக் கும் இந்தியா ஒத்துழைப்பு வழங்கும். இந்தியாவின் பெறுமதிமிக்க பங்காளர் களில் சிறீலங்காவும் ஒன்று. கடல்வழிப் பாதையின் பாதுகாப்பு உள்ளிட்ட பொது வான பாதுகாப்புக் கரிசனைகள் மற்றும் பாதுகாப்பு விவகாரங்களில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் வலுவான ஒத் துழைப்பு பேணப்பட்டு வருகிறது என்றார்.

ரெலோவின் அழைப்பை டெனீஸ்வரன் நிராகரிப்பு

வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ் வரனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவ டிக்கை எடுப்பது தொடர்பில் ஆராய்வதற்கு ரெலோவின் உயர்மட்டக் குழுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை கூடவிருந்தது. அதில் கலந்துகொள்ளுமாறு அமைச்சர் பா.டெனீஸ் வரனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதும் அவர் கலந்து கொள்ளவில்லை. அமைச்சர் பதவியிலிருந்து விலகுமாறு பா.டெனீஸ் வரனிடம் கட்சியின் உயர்மட்டக் குழு கடந்த 12ம் திகதி கோரியிருந்தது. அதற்கு ஒரு நாள் அவகாசமும் வழங்கியிருந்தது. அமைச்சப் பதவியிலிருந்து விலக மாட் டேன் என்று டெனீஸ்வரன் தெரிவித் திருந்தார். இதனையடுத்து அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப் பதற்காக, ரெலோவின் உயர்மட்டக் குழுக் கூட்டம் வவுனியாவில் இடம்பெற்றது.

கேள்வி:– மறைக்காமல் சொல்லுங்கள், நாடு கடந்த அரசின் மீது ஏன் சிலருக்கு இத்தனை வெறுப்பு..?

ம.கருணாகரன் பாரிஸ் பிரான்ஸ்

பதில்:– நீங்கள் எந்த நாடு கடந்த அரசைப் பற்றிக் கேட்கின்றீர்கள் என்பது தெரியவில்லை. ஆனால் புரிகின்றது. உலகில் எத்தனையோ நாடு கடந்த அரசுகள் இருக்கின்றன. சோமாலியாவின் அரசு தமது நாட்டில் இயங்க முடியாமல் நாடு கடந்துதான் இன்னொரு நாட்டில் இயங்குகிறது. சீனாவில் இருந்து விடுதலை பெறத் துடிக்கும் திபெத்தியர்களும் நாடு கடந்த அரசு ஒன்றை அமைத்துப் போராடி வருகின்றார்கள். திபெத்தியர்களின் நாடு கடந்த அரசுக்கு இந்தியா முழுமையான ஆதரவை வழங்கி தமது நாட்டில் அதனை இயங்குவதற்கும் அனுமதித்துள்ளது. சீனாவில் இருந்து திபெத் பிரிந்தால் அது சீனாவுடனான எல்லைப் பிரச்சனைகளுக்கு நிரந்தரமான முற்றுப்புள்ளியை வைத்துவிடும் என்ற இந்தியாவின் பூகோள அரசியல் அவாவின் வெளிப்பாடுதான் அந்த ஆதரவுக் காரணம்.

சரி இப்போது நீங்கள் எந்த நாடு கடந்த அரசைப் பற்றிக் கேட்டிருப்பீர்கள் என்பதைப் புரிந்துகொண்டு பதிலளிக்க வருகின்றேன். இலங்கைத் தீவு இரண்டு துண்டாகிவிடக்கூடாது என்பதில் மற்றைய நாடுகளை விடுவோம், இந்தியாவும் அமெரிக்காவும் எத்தனை உறுதியோடு இருக்கின்றன என்பதற்கு ஆதரங்கள் தேவையில்லை. இலங்கையின் இறைமையை பாதிக்கப்படக்கூடாது என்பதில் இலங்கையர்களைவிட இவ்விரு நாடுகளும் மிகவும் உறுதியாக இருக்கின்றன, செயற்படுகின்றன. இந்த இறைமைக்கு ஆபத்து வந்துவிடுவோம் என்று அஞ்சித்தான் தமிழீழ விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டும் என்பதில் இவ்விரு நாடுகளும் கச்சை கட்டிக் களம் இறங்கின.

விடுதலைப் புலிகளை அழித்துவிட்டதாக சிறீலங்கா கூறியதன் பின்னரும், வேறு எந்த வழியிலும் இலங்கையின் இறையாண்மைக்கு ஆபத்து வந்துவிடாமல் தடுப்பதில் இவ்விரு நாடுகளும் இப்போதும் உறுதியாகச் செயற்படுகின்றன. இதற்கு ஒரு சின்ன உதாரணத்தைக் கூறலாம். 2014ம் ஆண்டில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் ஒன்றுகூடி இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும், மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் எனக்கூறி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தன. 23 நாடுகள் அதற்கு ஆதரவாக வாக்களித்தன. 12 நாடுகள் எதிராக வாக்களித்தன. இந்தியா இந்த வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. ஏன் வாக்களிக்கவில்லை என்பதற்கு இந்தியா கொடுத்த விளக்கம், இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கு ஊறுவிளைவிக்கும் வகையில் அத்தீர்மானம் அமைந்திருந்ததால் அதனை ஆதரிக்க முடியவில்லை என்பதுதான். அதாவது இலங்கையின் இறையாண்மையை பாதிக்கும் வகையில் அந்தத் தீர்மானம் இருந்ததால்தான் இந்தியா வாக்களிக்கவில்லை.

தமிழீழம் என்றொரு நாடு அமைந்துவிடக்கூடாது என்று உறுதியாக இருக்கும் அமெரிக்காவில், இலங்கையின் இறையாண்மையைப் பாதிக்கும் வகையில், நாடுகடந்த அரசின் பிரதமரே சுதந்திரமாக இருந்து இயங்குகின்றார். அறிக்கைவிடுகின்றார். அந்நாடு அதற்கு எதிராக இதுவரை சின்ன தொரு நடவடிக்கையை எடுத்ததாகவும் ஆதாரமில்லை.

இலங்கையின் இறையாண்மைக்கு ஆபத்து விளைவிக்கும் எவரும் இந்தியாவில் அனுமதிக்கப்படுவதில்லை. ஏன் ஊறுவிளைக்கக்கூடியவர்கள் என்று சந்தேகப்படுபவர்கள் கூட இந்தியாவின் தடுப்பு முகாம்களில் இப்போதும் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள். உண்ணாவிரதமிருந்து போராடியும் அவர்களுக்கு இன்னமும் விடுதலை கிடைக்கவில்லை. ஆனால், நாடு கடந்த அரசு அங்கு சுதந்திரமாக இயங்குகின்றது, கூட்டங்களை நடத்துகின்றது. இது இலங்கையின் இறையாண்மைக்குப் பாதிப்பில்லையா..? இவர்களின் செயற்பாட்டிற்கு மட்டும் இந்தியா எவ்வாறு அனுமதிக்கின்றது..? ஏன் அனுமதிக்கின்றது..?

இவ்வாறான கேள்விகளும், சந்தேகங்களும்தான் நாடு கடந்த அரசின் செயற்பாடுகள் மீது வெறுப்பு ஏற்படக் காரணமாக இருக்கலாம். அல்லது பிரதமரும், அமைச்சர்களும் நிரந்தரமாகிப் போனதால் வந்த வெறுப்பாக இருக்குமோ யார் கண்டார்கள்..?

கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
இலத்திரனியல் முகவரி : eelamurazu@gmail.com
தபால் முகவரி : Media Centre, BP 40, 93141 Bondy pdc
குறுந்தகவலாக (கைபேசி SMS) : 00 33 7 81 80 81 16

ஓயாமல் தொடரும் விபத்து மரணங்கள்!

வடக்கில் எத்தனையோ போக்குவரத்து விதிமுறைகள் சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ள போதும் விபத்து மரணங்கள் ஓய்ந்தபாடில்லை. இது தொடர்பாக முன்னரும் பலதடவைகள் இப்பகுதியில் எழுதியிருந்தமை நினைவிருக்கலாம். ஆனால் இன்று தமிழர் தாயகப் பகுதிகளில் விபத்து மரணங்கள் மிகவும் உச்சம் பெற்றுள்ளன என்று சொல்லலாம்.

கடந்தவாரம் கூட ஆனைக்கோட்டையில் இடம் பெற்ற ஓர் இளம் யுவதியின் விபத்து மரணம் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந்தது எனலாம். அவர் விபத்து இடம்பெற்று வீதியில் கிடந்த துடி துடித்த போதும் அவரை மருத்துவமனைக்கு கொண்டுசெல்ல உடனடியாக எவரும் முன்வரவில்லை. விபத்தில் காயமடைந்த அவரது சகோதரனே முச்சக்கரவண்டியை ஏற்பாடுசெய்து மருத்துவமனைக்கு கொண்டுசென்றுள்ளார். காலதாமதங்களும் இவ்வாறான விபத்துமரணங்களுக்கு காரணமாகிவிடுகின்றன. இதுதொடர்பில் உரியதரப்பினர் கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகின்றது.

இதேவேளை, தொடருந்து விபத்து மரணங்களும் வடக்கில் தொடர்ச்சியா இடம்பெற்றுவருகின்றன. வடக்கிற்கான தொடருந்து சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 41 தொடருந்து விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதுடன் இதுவரை 35 உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் குறிப்பிடப்பட வேண்டிய விடயம் எங்களது ஊழியர்கள் கடமையில் உள்ள கடவைகளில் எந்த விபத்துக்களும் ஏற்படவில்லை. இந்தியாவில் தடைசெய்யப்பட்ட தொடருந்து கடவை சமிக்ஞை விளக்குகளே வடக்கில் பொருத்தப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவோம் என வடக்கு, கிழக்கு தொடருந்து கடவை காப்பாளர் சங்க தலைவர் றொகான் ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் கடந்தவாரம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தாண்டிக்குளம் தொடருந்து கடவையில் விபத்து ஏற்பட்டு ஒருவர் மரணமடைந்தமையை கண்டித்து அப்பகுதி மக்களால் தொடருந்தை மறித்து நடத்தப்பட்ட போராட்டத்தின் போது மக்கள் பிரதிநிதிகளும், காவல்துறையினரும் அங்கு கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது காவல்துறையினர் தொடருந்து திணைக்களத்திற்கு உரித்தான கடவைக்கு சென்று தொடருந்துக் கடவை காப்பாளர்கள் மீது குற்றச் சாட்டை சுமத்தியுள்ளனர். இதனை நாம் கண்டிக்கின்றோம்.

எம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கு எந்த நிலையிலான காவல்துறை அதிகாரியானாலும் தொடருந்துக் கடவை காப்பாளர்களிடம் பொதுவான மன்னிப்பை கோரவேண்டும்.

வடக்கிற்கான தொடருந்து சேவை இடம் பெற்றதன் பின்னர் 41 தொடருந்து விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இதில் 35 உயிரிழப்புகள் இடம் பெற்றுள்ளன.

இதில் குறிப்பிடப்பட வேண்டிய விடயம் எங்களது ஊழியர்கள் கடமையில் உள்ள கடவைகளில் எந்த விபத்துக்களும் ஏற்படவில்லை. இவ் விபத்துக்கள் காவல்துறையினரின் கவனயீனத்தால் ஏற்பட்ட விபத்துக்களும் தொடருந்து திணைக்களம் அவ்விடங்களில் இருந்து தமது ஊழியர்களை வெளியேற்றிய மையினாலுமே ஏற்பட்டுள்ளது.

அத்துடன் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வாவினால் சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டமையினாலும் ஏற்பட்ட விபத்துக்குக்கு தொடருந்து திணைக்களமும் காவல்துறை திணைக்களமும் முழுமையான பொறுப்பேற்க வேண்டும். காவல்துறை எம்மை அச்சுறுத்தும் வகையில் செயற்படுகின்றனர்.

இது தவிர, இந்தியாவில் இருந்து வருவிக்கப்பட்ட தான தானியங்கி சமிக்ஞைகள் இந்தியாவில் பாவனையில் இருந்து அகற்றப்பட்டவை. இந்த சமிக்ஞை விளக்குகள் அந்த நாட்டில் பயன்படுத்த தடை செய்யப்பட்டவை என்பதனை நாம் உறுதிப்படுத்துவோம்.

இந்த சமிக்ஞைகள் தொடர்ந்தும் இயங்குவதனால் மின்சார சபைக்கு பெரும் நட்டம் ஏற்படுவதுடன் அதில் உள்ள மின்குமிழ்கள் தொடர்ந்து பழுதடைவதால் அதனை இந்தியாவில் இருந்தே கொண்டுவர வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து வருவிக்கப்பட்டதான தானியங்கி சமிக்ஞைகள் இந்தியாவில் பாவனையில் இருந்து அகற்றப்பட்டவை. இந்த சமிக்ஞை விளக்குகள் அந்த நாட்டில் பயன்படுத்த தடை செய்யப்பட்டவை...

ஆகவே தொடருந்து திணைக்களம் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும். போக்குவரத்து அமைச்சர் எங்களை பழிவாங்கும் நோக்கத்துடன் அரசாங்கத்தில் இருந்து கொண்டு அரசாங்கத்தினையும் பழிவாங்கும் செயற்பாட்டை உடன் நிறுத்த வேண்டும்.

இந்த நாட்டின் பிரசைகளான தொடருந்துக் கடவை காப்பாளர்களை மனிதர்களாக மதித்து அவர்களது சேவைக்கான கௌரவத்தினை வழங்கி நிரந்தர நியமனத்தினை வழங்க முன்வர வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதான் இன்றைய வடக்கின் நிலை. திருடனாய்ப் பார்த்து விருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது. நாம் விழிப்புடன் இருப்பதன் மூலமே விபத்து மரணங்களைத் தடுக்கமுடியும்.

இது சிந்திக்கும் நேரமல்ல சிந்தித்து செயற்படும் நேரம்!

(சூறையாடல் தொடரும்)

051 தமிழர் சொத்துக்களை சூறையாடும் சிங்களம்

– கந்தரதன்

சிறீலங்காக் கடற்படைத் தளபதியாக இனப்படுகொலையில் முல்லிவாய்க்கால் செயற்பட்ட சில்வையா நியமனம்!

சிங்கள விசுவாசத்திற்கு கிடைத்த பரிசு

சிறீலங்கா இனப்படுகொலைக் கடற்படையின் புதிய கட்டளைத் தளபதியாக, கடற்படையின் கிழக்கு பிராந்திய கட்டளைத் தளபதி யார் அட்மிரல் ட்ரவிஸ் ஜெரமி லியாண்டுரு சின்னையா (Travis Jeremy Liyanduru Sinniah) நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்னர் பணியாற்றிய சிறீலங்காக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவின் பதவிக் காலம் 22ம் திகதியுடன் முடிவடைகின்றது. வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன 55 வயதை எட்டியதையடுத்து, கடந்த பெப்ரவரி 22ம் திகதி ஓய்வு பெறவிருந்தார். இதையடுத்து அவருக்கு ஜனாதிபதி மைத்திரிபால ஆறுமாத சேவை நீடிப்பை அப்போது வழங்கியிருந்தார். இந்த சேவை நீடிப்பு ஒகஸ்ட் 22ம் திகதி செவ்வாய்க்கிழமையுடன் முடிவடையவுள்ளது. இந்த நிலையில் மேலும் ஆறு மாதகால சேவை நீடிப்பை அவர் மைத்திரிபால சிறீசேனவிடம் கோரியிருந்தார்.

வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவுக்கு மீண்டும் ஆறு மாத கால சேவை நீடிப்பு அளிக்கப்பட்டால், றியர் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா மற்றும் சிறிமேவன் விஜேசிங்க ஆகியோர் சிறீலங்கா கடற்படைத் தளபதி பதவியைப் பெறும் வாய்ப்பை, இழக்க நேரிடும் என்ற நிலை இருந்தது. இந்நிலையில், வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவின் ஆறு மாத சேவை நீடிப்புக் கோரிக்கையை நிராகரித்துவிட்டு, அவருக்கு பாதுகாப்பு படைகளின் பிரதானியாக நியமிப்பாக வாக்குறுதி வழங்கிவிட்டு, றியர் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையாவிற்கு சிறீலங்கா கடற்படையின் புதிய கட்டளைத் தளபதி பதவியை மைத்திரிபால சிறீசேன வழங்கியிருக்கின்றார்.

இது றியர் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா, தமிழின அழிப்பில் சிங்களப் பேரினவாதத்திற்கு வழங்கிய ஒத்துழைப்பிற்கும், சிங்கள விசுவாசத்திற்கும் வழங்கப்பட்ட மிகப்பெரிய பரிசாகப் பார்க்கப்படுகின்றது.

1982ம் ஆண்டு, கடற்படையில் இணைந்துகொண்ட ட்ராவிஸ் சின்னையா, விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் என்ற போர்வையில் முன்னெடுக்கப்பட்ட தமிழின அழிப்பில் முன்னின்று செயற்பட்டவர். அகதியாக இந்தியாவிற்கு புலம்பெயர்ந்த தமிழர்களும், தமிழ் மற்றும் தமிழக மீனவர்கள் கடலிலேயே பலியாகவும் இவரது கட்டளைகள் முதன்மையான காரணமாக இருந்துள்ளன. அத்துடன், கடற்படையினரால் கடத்தப்பட்டு காணாமல்போனவர்களின் நடவடிக்கைகளிலும் இவரது செயற்பாடு முக்கியமாக இருந்துள்ளது. இதனால் அண்மையில் இவர் விசாரணைக்கும் அழைக்கப்பட்டார்.

ஆனால், மகிந்தவிற்கு ஆதரவான முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கர்ணகொட முன்னாள் கடற்படை ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் டி.கே.பி.தஸநாயக்க, லெப்டினன் கொமாண்டர் சுனித் ரணசிங்க மற்றும் லெப்டினன் கொமாண்டர் பண்டார ஆகியோரைத் தவிர வேறு எவருக்கும் திருமலை இரகசியப் படுகொலை முகாமில் நடந்தவை தெரியாது எனக்கூறி கடத்தப்பட்டு காணாமல்போனவர்களின் குற்றச்சாட்டுக்களில் இருந்து தன்னை இவர் விடுவித்துக்கொண்டார்.

அத்துடன், இறுதி இன அழிப்புப் போர் ஆரம்பமாகியபோது, விடுதலைப் புலிகளின் கப்பல்களை அமெரிக்கா காட்டிக்கொடுக்க, அவற்றை சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து தாக்கி அழிப்பதிலும் இவரது பணி அளப்பரியது எனக் கூறப்படுகின்றது. 2007 – 2008 காலப்பகுதியில், சாகர வலய (Sagara Balaya) என்ற நடவடிக்கையின் மூலம் விடுதலைப் புலிகளின் 10 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்ட தாக்குதல்களுக்கு றியர் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையாவே தலைமை தாங்கியிருந்தார். இந்த நடவடிக்கையே விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு முதன்மைக் காரணமாக அமைந்துள்ளதாக இவருக்கு ஏற்கனவே சிங்களம் புகழாரம் சூட்டியிருந்தது.

இவற்றைவிட 1987ம் ஆண்டு இந்தியக் கடற்படையினரால் கடல்புறா கப்பலுடன் கைது செய்யப்பட்ட லெப்.கேணல் புலேந்திரன், லெப்.கேணல் குமரப்பா ஆகியோர் சிறீலங்காக் கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த நடவடிக்கையிலும் இவர் முக்கிய அதிகாரியாக பணியாற்றியிருந்தார்.

மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் அரசியல் பழிவாங்கல் அச்சத்தினால் நாட்டை விட்டு வெளியேறிய இவர் மீண்டும் புதிய ஆட்சியில் நாடு திரும்பித் தனது பதவியைத் தக்கவைத்துக்கொண்டார். சிறீலங்காக் கடற்படையில் 35 ஆண்டுகள் பணியாற்றும் சிரேஷ்ட உறுப்பினரான இவர், 21வது கடற்படைத் தளபதியாக தற்போது நியமிக்கப்பட்டுள்ளார்.

'சிறீலங்காக் கடற்படையில் பல தசாப்தங்களாக விசுவாசத்தோடு சேவையாற்றியுள்ளார். இன்று இவர் கடற்படையின் புதிய தளபதியாக பதவியேற்றுள்ளார்.' என தனது டுவிட்டர் தளத்தில் சிறீலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறீசேன இவருக்குப் புகழாரம் சூட்டியுள்ளதில் இருந்தே இவரது சிங்கள விசுவாசத்தைப் புரிந்துகொள்ளமுடியும்.

ஆனால், மூன்று தசாப்த கால யுத்தத்திற்குப் பின்னர் முதன்முறையாக சிறீலங்காவின் முப்படைகளில் ஒன்றான கடற்படைக்கு தமிழர் ஒருவர் பிரதான தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாக சிங்கள, தமிழ் ஊடகங்கள் முக்கியப்படுத்தியுள்ளன. ஆனால், கண்டியில் பிறந்து சிங்கள மக்களுடனேயே வாழ்ந்து, டிருணி என்ற சிங்களப் பெண்ணையே திருமணம் செய்து, தனது இரு பிள்ளைகளுக்கும் (டாரன், டினக்ஷி) இவர் சிங்களப் பெயர்களையே சூட்டியிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழீழத் தேசியத் தலைவரை இழிவுபடுத்துமோ 'ஒக்கடு மிகிலடு'?

தமிழின உணர்வாளர்களால் உருவாக்கப்பட்ட 'காற்றுக்கென்ன வேலி' போன்ற விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில படங்களைத் தவிர, ஈழ விடுதலைப் போராட்டத்தை இழிவுபடுத்தும் படங்களும், படங்களுக்கு இடையிலான காட்சிகளும் இந்தியாவில் இருந்து அதிகளவில் வெளியாகியிருக்கின்றன.

வாழும் காலத்தில் தமது கண்முன்னே, தமது தேசத்திற்கு மிக அருகில் நடந்த ஒரு விடுதலைப் போராட்டத்தை சரியான கோணத்தில் பார்த்து இந்தியத் திரைப்படவியலாளர்கள் எவரும் படம் எடுத்ததாகத் தெரியவில்லை. கற்பனை உலகில் வாழ்ந்துகொண்டு, ஈழத் தமிழர்களின் போராட்டத்தினை மையப்படுத்தி அவர்கள் எடுக்கும் படங்கள் விடுதலைப் புலிகளின் உன்னதமான தியாகங்களையும், வீரத்தையும், உலகமே வியந்து பார்த்த அவர்களின் வியத்தகு அறவியல், தாக்குதல்

தாடியுடன் சீருடையில் தலைவர்!

கத்தியுடன் கைச்சண்டையில் தலைவர்!

தில்லை) திரைப்படம் உண்மைக் கதை என்றும், இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போரை மையமாக வைத்து வெளிவர இருப்பதாகவும் செய்திகள் பரபரப்பாக கிளப்பிவிடப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல அத்திரைப்படத்தில் மஞ்சு மனோஜ் தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வேடமேற்று நடிக்கவிருப்பதாகவும் கூறப்பட்டு சில காட்சிகளின் நிழற்படங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தக் காட்சிப் படங்களே தமிழீழ விடுதலைப் போராட்டத்தை குறிப்பாக தமிழீழத் தேசியத் தலைவரைக் கொச்சைப்படுத்தும் ஒரு திரைப்படமாகவே இதுவும் இருக்கப் போகின்றது என்பதை புரிந்துகொள்ளப் போதுமானதாக இருக்கின்றது. அதனையும் மீறி வசனங்களில் ஈழவிடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தி இப்படம் வெளி

இதற்கு எதற்கு விளக்கம்?

நாட்ட வளர்ச்சியையும் மற்றும் ஈழத் தமிழ் மக்களையும் கொச்சைப்படுத்தும், சிறுபிள்ளைத் தனமாக்கும் படங்களாகவே அவை வெளிவந்திருக்கின்றன.

இந்தவேளையில், தெலுங்கில் தமிழீழத் தேசியத் தலைவரை மையப்படுத்தி ஒரு திரைப்படம் வெளியாக இருக்கின்றது. ஈழத் தமிழர்களின் பிரச்சனைகளை தெலுங்குத் திரைப்பட உலகம் என்றுமே வெளிக் காட்டியதில்லை. 2005ம் ஆண்டு ராஜ்மௌலி (பாகுபலி படத்தை இயக்கியவர்) இயக்கிய சத்ரபதி திரைப்படத்தில் இலங்கையிலிருந்து போரில் தப்பி வரும் அகதிப் பிரச்சனையை

தப்பியோடும் தலைவர்!

வருமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். ஆனால், 'ஆணிவேரையே' திரையிட அனுமதிக்காத இந்தியாவில், தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தி ஒரு திரைப்படம் வெளிவரும் என்று எதிர்பார்த்துக் காத்திருப்பதும் மடத்தனமே. ஆனால், பொய்க்கு உண்மை முலாம் பூசி வெளிக்கொண்டு வந்தாலும், உண்மைக்குப் புறம்பான வரலாற்றை மக்கள் புறந்தள்ளுவார்கள் என்பதே திரைப்பட வரலாறுகள் கூறும் உண்மை.

தலைவரின் கோபத்தை கண்களில் எவராவது பார்த்ததுண்டா..?

ஒரிடத்தில் தொட்டிருந்ததைத் தவிர அதற்குப் பின் இலங்கைப் பிரச்சனை குறித்த திரைப் படங்கள் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

ஈழத் தமிழர்களுக்கு ஏற்பட்ட அழிவுகளையும், அவர்கள் சந்தித்த போர் அவலங்களையும் இன்றுவரை பாதிவாக்காத தெலுங்கு தேச திரைப்படத்துறையினர், தற்போது தமிழீழத் தேசியத் தலைவரை மையப்படுத்தி ஒரு திரைப் படத்தை உருவாக்கி வருகின்றனர்.

நடிகர் மோகன் பாபுவின் மகன் மஞ்சு மனோஜ் நடிப்பில் உருவாகி வரும் ஒக்கடு மிகிலடு (தமிழில் - எவனும் மிஞ்சப்போவ

இந்தியத் தேசச் செய்திகள்

முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதா மரணம் குறித்து விசாரிக்க ஆணையம்

மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் மரணம் குறித்து விசாரித்து அறிக்கை அளிக்க விசாரணை ஆணையம் அமைக்கப்படும் என தமிழக முதலமைச்சர் எடப்பாடி கேபழனிச்சாமி அறிவித்துள்ளார். சென்னையில் உள்ள தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் அமைச்சர்களுடன் முதலமைச்சர் பழனிச்சாமி ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனைக்குப் பிறகு அமைச்சர்கள் திண்டுக்கல் சீனிவாசன், நிதியமைச்சர் ஜெயக்குமார், தங்கமணி ஆகியோருடன் முதலமைச்சர் பழனிச்சாமி செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது, கடந்த ஆண்டு டிசம்பர் 5ம் திகதியன்று முதல்வராக இருந்த ஜெயலலிதா காலமான நிலையில், அவரது மரணம் குறித்து விசாரணை தேவை என்று பல்வேறு தரப்பினரும் கோரியதை ஏற்று, அவரது மரணம் குறித்து விசாரித்து அறிக்கை அளிக்க ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்கப்படும் என்று எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்தார்.

மேலும், ஜெயலலிதா வசித்து வந்த போயஸ் கார்டனில் உள்ள வேதா நிலையம், ஜெயலலிதாவின் சிறப்புகளை விளக்கும் வகையில் நினைவிடமாக்கப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு திறக்கப்படும் என்றும் முதலமைச்சர் பழனிச்சாமி கூறினார். எந்த ஓய்வுபெற்ற நீதிபதியின் தலைமையில் இந்த விசாரணை ஆணையம் அமைக்கப்படும்? அதற்கான காலக்கெடு என்ன? போன்ற கேள்விகளுக்கு, விரைவில் அது பற்றி அறிவிக்கப்படும் என்று கூறிய முதலமைச்சர் மேலதிக கேள்விகளுக்குப் பதிலளிக்கவில்லை.

இந்திய எல்லையில் பாகிஸ்தானின் 400 அடி உயரக் கொடிக்கம்பம்!

பாகிஸ்தானில் 70வது சுதந்திர தின விழா கொண்டாட்டத்தை முன்னிட்டு இந்திய எல்லையில் 400 அடி உயர கொடிக்கம்பத்தில் மிகப்பெரிய பாகிஸ்தான் தேசியக் கொடி பறக்கவிடப்பட்டது. சுதந்திர தின விழா கொண்டாட்டத்தை முன்னிட்டு இந்தியா – பாகிஸ்தான் இடையேயான அட்டாரி–வாகா எல்லை அருகே 400 அடி உயர கொடிக்கம்பத்தில் அந்நாட்டு தேசியக் கொடி பறக்கவிடப்பட்டுள்ளது. நள்ளிரவு 12 மணியளவில் பாகிஸ்தான் இராணுவத் தளபதி கிமார் ஜாவீத் பாஜ்வா இந்த தேசியக்கொடியை ஏற்றி வைத்தார். தெற்காசியாவில் பறக்கவிடப்பட்டுள்ள மிக உயரமான கொடிக்கம்பம் இதுவாகும். உலகில் 8வது உயரமான கொடிக்கம்பம் இது வாகும்.

அப்போது அங்கு கூடி இருந்தவர்களிடையே பேசிய இராணுவ தளபதி பாஜ்வா, கடந்த 77 ஆண்டுகளுக்கு முன்னர் இதே லாகூர் நகரில்தான் முஸ்லிம்களுக்கென்று தனியாக பாகிஸ்தான் என்ற ஒருநாடு தேவை என்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டது என்று குறிப்பிட்டார். அரசியல மைப்பு சட்டத்தின் படியும், அதன் விதிகளின் படியும் இன்று பாகிஸ்தான் வளர்ச்சிப் பாதையை நோக்கி முன்னேறி வருவதாகவும் தெரிவித்த அவர், நமது நாட்டுக்காக இராணுவத்தினர் அளவில்லாத தியாகத்தை அர்ப்பணித்துள்ளனர். எதிரிகளின் குண்டுகள் வேண்டுமானால் தீர்ந்துப் போகலாம். ஆனால், எங்கள் நாட்டு வீரர்களின் மார்புகள் தீர்ந்துப் போகாது. பாகிஸ்தானை பலவீனப்படுத்த முயலும் அனைத்து சக்திகளையும் நமது அரசும் இராணுவமும் முறியடிக்கும் என்றார்.

மின்சாரத்தை உணவாக சாப்பிடும் மனிதன்

உத்தரப்பிரதேச மாநிலத்தின் முசாபர் நகரை சேர்ந்தவர் நரேஷ்குமார் (42) இவரை மின்சார மனிதன் என அப்பகுதி மக்கள் அழைக்கிறார்கள். காரணம், நரேஷ்குமாரின் உடலில் மின்சாரம் பாய்ந்தால் அவருக்கு ஆபத்து எதுவும் ஏற்படுவதில்லை. இதோடு, பசி எடுத்தால் மின்குமிழை எரிய விட்டு அதன் வயர்களை தனது வாயில் பயமில்லாமல் வைத்து கொள்கிறார். இப்படி நரேஷ்குமார் 30 நிமிடங்கள் செய்தால் அவரின் பசி அடங்கி விடுகிறதாம். ஒரு முறை ஏதேச்சையாக மின்சார வயரை தொட்டுள்ளார். ஆனால் மின்சாரம் அவர் மீது பாயவில்லை. இதிலிருந்து தான் தனக்கு அபூர்வசக்தி உள்ளது என நரேஷ் நம்ப தொடங்கியுள்ளார். இதுகுறித்து நரேஷ்குமார் கூறுகையில், மின்சாரத்தில் இயங்கும் எல்லா வகையான பொருட்களையும் நான் வெறும் கையால் தொடுவேன். என் மீது மின்சாரம் பாயாது. வீட்டில் உணவில்லாத போது மின்சார வயர்களை வாயில் வைத்து கொண்டால் பசி அடங்கி விடும் என கூறியுள்ளார்.

இந்தியக் கொடியை ஏற்றிய குரங்குகள்!

இந்தியாவின் 71வது சுதந்திர தினவிழா கடந்த 15ம் திகதி கொண்டாடப்பட்டது. சுதந்திர தினவிழாவில் கொடி ஏற்று பவர்கள் கொடியை மாற்றி ஏற்றியும், முறையாக மரியாதை செலுத்தாமலும், செல்பேசி பேசியப்படி கொடியை ஏற்றியும் விமர்சனத்திற்கு உள்ளாவார்கள். இந்த சுதந்திர தினவிழாவில் இரு பாடசாலைகளில் குரங்குகள் இந்தியாவின் தேசியக் கொடியை ஏற்றிவைத்துள்ளன.

ராஜஸ்தான் மாநிலம் புஷ்காரில் சுதந்திர தினவிழா அன்று காலையில் பாடசாலையில் கொடி ஏற்ற தேவையான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டது. ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் சுதந்திர தின விழாவில் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்த அணிவித்து நின்றபோது, கொடியை சிறாப்பு விருந்தினருக்கு பதிலாக அப்பகுதியை சேர்ந்த குரங்கு ஒன்று ஏற்றிவைத்தது. குரங்குகள் கொடியை ஏற்றியதும், மலர்கள் பொழிந்தது. மாணவர்கள் மரியாதை செலுத்தினர். இதுதொடர்பான காணொளிப் பதிவுகள் சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

இதேபோன்று அரியானா மாநிலம் அம்பாலாவில் உள்ள பாடசாலையிலும் குரங்கு ஒன்று தேசியக் கொடியை ஏற்றி வைத்துள்ளது. இதுதொடர்பான காணொளியும் பரவி வருகிறது.

40 ஆண்டு தடைக்குப் பின் இந்தியாவிற்கு அமெரிக்க எண்ணெய்!

40 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக அமெரிக்க மசகு எண்ணெய் ஏற்றிய சரக்குக் கப்பல்கள் அடுத்த மாதம் இந்தியா வருகின்றன. சுமார் 10 கோடி டொலர் மதிப்பிலான மசகு எண்ணெய் பரல்களை ஏற்றிய சரக்குக் கப்பல்கள் அமெரிக்காவின் பல்வேறு துறைமுகங்களில் இருந்து இந்தியாவின் ஒடிஸா மாநிலத்தில் உள்ள பாரதீப் துறைமுகம் நோக்கி புறப்பட்டுள்ளன. இந்த மாதம் 6 முதல் 14ம் திகதி வரை அமெரிக்கா–விலிருந்து புறப்பட்ட அந்தக் கப்பல்கள், அடுத்த (செப்டம்பர்) மாத இறுதியில் இந்தியா வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவுக்கு மசகு எண்ணெய் ஏற்றுமதி செய்வதற்கு சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்கா தடை விதித்தது. எனினும், இந்தியா – அமெரிக்கா இடையிலான உறவு அண்மைக் காலமாக வலுவடைந்து வரும் நிலையில், இந்தியாவுக்கான மசகு எண்ணெய் ஏற்றுமதி தடையை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அப்போதைய அமெரிக்க அதிபர் ஒபாமா நீக்கினார்.

அதையடுத்து, பிரதமர் நரேந்திர மோடி கடந்த யூன் மாதம் 26ம் திகதி அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பைச் சந்தித்துப் பேசியபோது, எரிசக்தித் துறையில் இருநாட்டு ஒத்துழைப்பை மேம்படுத்த ஒப்புக் கொள்ளப்பட்டது. அதையடுத்து, இந்தியன் ஒயில், பாரத் பெட்ரோலியம் உள்ளிட்ட நிறுவனங்கள் அமெரிக்காவிடமிருந்து மசகு எண்ணெய் வாங்க முன்வந்தன. இதன்மூலம், உலகின் முன்றாவது மிகப் பெரிய எண்ணெய் இறக்குமதி நாடான இந்தியா, அமெரிக்காவிடமிருந்து எண்ணெய் கொள்முதல் செய்யும் தென் கொரியா, ஜப்பான், சீனா ஆகிய மூன்று நாடுகளுடன் இணைந்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் கூறுகையில், எரிசக்தித் துறையில் இந்தியாவின் நம்பத்தகுந்த நீண்டகால கூட்டாளியாக அமெரிக்கா இருக்க வேண்டும் என்று அதிபர் டொனால்ட் டிரம்ப் உறுதிபூண்டுள்ளார் என்று தெரிவித்தார். அமெரிக்காவிலிருந்து கப்பலில் கொண்டு வருவதற்கான அதிக சரக்குக் கட்டணத்தைச் சேர்த்தாலும், அதிக எரிதிறன் கொண்ட அந்த மசகு எண்ணெய்களை வாங்குவது பிற நாடுகளிடமிருந்து வாங்குவதைவிட அதிக செலவு பிடிக்காது என்று எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

கன்னட மொழி தெரியாவிட்டால் 6 மாதங்களில் வேலை பறிபோகும்

6 மாதங்களில் கன்னட மொழியை கற்கவேண்டும். இல்லையெனில் வேலையை இழப்பீர்கள் என வங்கி ஊழியர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. கன்னட மேம்பாட்டு ஆணையம் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், தனியார் மற்றும் கிராமிய வங்கிகள் தலைவர்களுக்கு கடிதம் அனுப்பி உள்ளது. அதில் வங்கி ஊழியர்களுக்கு கன்னட மொழியானது கட்டாயம் என்பதை உறுதி செய்யுங்கள் என கேட்டுக் கொள்ளப்பட்டு உள்ளது. இன்னும் 6 மாதங்களில் கன்னட மொழியை கற்கவில்லை என்றால் அவர்கள் வேலையை இழக்க வாய்ப்பு உள்ளது.

இதுதொடர்பாக கன்னட மேம்பாட்டு ஆணைய தலைவர் எஸ்ஜி சித்தராமையா அளித்து உள்ள பேட்டியில், கன்னட மொழியை கற்றுக் கொள்ள நாங்கள் 6 மாத காலம் அவகாசம் வழங்கி உள்ளோம். 6 மாதங்கள் கழித்தும் கன்னட மொழி தெரியாத ஊழியர்களை உடனடியாக வேலையை விட்டு நீக்கவும் வங்கிகளின் பிராந்திய தலைமைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என கூறியுள்ளார்.

மாநிலத்தில் பெரும்பாலான மக்களுக்கு கன்னட மொழி மட்டுமே தெரியும். அவர்களை பற்றிதான் நாங்கள் நினைக்கிறோம். பிராந்திய மொழிக்கு வங்கிகள் மரியாதை கொடுக்கவில்லை என்றால், பிற்கால மோதலுக்கு வழிவகை செய்யும் என்பதை மறுக்க முடியாது என்பது உண்மை. கன்னட மொழியை ஊழியர்கள் உடனடியாக கற்க வேண்டும் என்பதை வங்கிகள் உறுதிசெய்ய வேண்டும், எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ராஜீவ் கொலை வெடிகுண்டு தயாரிப்பு சதிதிட்ட விசாரணை ராஜீவ் காந்தி கொலை

வழக்கில் வெடிகுண்டு தயாரிப்பு சதிதிட்டம் விசாரணை தொடர்பாக மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதற்கு வெடிகுண்டு தயாரிப்புக்கு பின்னால் உள்ள சதிதிட்ட அம்சங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணை தொடர்பாக அறிக்கையை தெரிவிக்க மத்திய அரசுக்கு இந்த உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த அம்சங்கள் தொடர்பான மறுவிசாரணை மற்றும் மேற்கொள்ளப்படும் விசாரணையின் முடிவானது என்ன? விசாரணை முடிவை எங்களிடம் தெரிவியுங்கள். எங்களுக்கு அதுதான் வேண்டும், என ரஞ்சன் கோகாய் தலைமையிலான உச்ச நீதிமன்றம்? மத்திய அரசுக்கு உத்தரவிட்டு உள்ளது.

பிரெஞ்சு தேசச் செய்திகள்

போதைப்பொருள் உட்கொண்டு பறந்த விமானி நீதிமன்றத்தில் தண்டனை!!

EasyJet விமானசேவையின் விமானி ஒருவர், அடுத்த நாள் காலையில் அவரிற்கான பறப்பு இருக்கும் நிலையில், முதல் நாள் இரவு Ecstasy எனும் போதைப்பொருளை உட்கொண்டிருந்துள்ளார். 49 வயதுடைய இந்த விமானி, விமானத்தில் பறந்த அனைத்துப் பயணிகளின் உயிரையும் ஆபத்திற்குள்ளாக்கியமைக்கான குற்றத்திற்காக, கிரித்தை (Créteil - Val-de-Marne) நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டுள்ளார்.

இவரிற்கு எட்டுமாதங்கள் ஒத்தி வைக்கப்பட்ட தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கும் மேலாக, இவர் விமானியாகப் பணிபுரியும் உரிமம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இனிமேல் எப்பொழுதும், இவர் விமானியாக முடியாது.

கடந்த 26ம் ஆம் திகதி இவர் கைது செய்யப்பட்டிருந்தார். ஒரு போதைப்பொருள் விநியோகக் கும்பல் ஒன்று கைது செய்யப்பட்ட நிலையில், அவர்களின் வாடிக்கையாளர் பட்டியலில் இந்த விமானியும் இருந்துள்ளார். அதன் தொடர்ச்சியாக, இவரது பறப்பின்

பின்னர் பரிசோதனை செய்தபோது, இவரது இரத்தத்தில் போதைப் பொருள் இருந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

அகதிகளிற்கு உதவியவிற்குச் சிறைத்தண்டனை வெகுண்டெழும் சர்வதேச அமைப்புக்கள்!

அகதிகளிற்கு உதவியதற்காக விவசாயியான Cédric Herrouவிற்கு, நான்கு மாதங்கள் ஒத்திவைக்கப்பட்ட தண்டனையை, Aix-en-Provence இன் மேல் முறையீட்டு நீதிமன்றம் வழங்கி உறுதி செய்துள்ளது. இவர் 2016 ஆம் ஆண்டில், இத்தாலி–பிரான்ஸ் எல்லையினூடாக 200 அகதிகளை வருவதற்கு உதவி செய்ததோடு, அவர்களிற்குத் தங்குமிட வசதிகளையும் தானே செய்துள்ளார். இந்தக் குற்றத்திற்றாகவே இவரிற்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இவர் ஆட்கடத்தற்காரனும் இல்லை, குற்றவாளியும் இல்லை, என இந்தத் தீர்ப்பை எதிர்த்து நிற்கும் பல பிரெஞ்சு மற்றும் சர்வதேச நிறுவனங்கள் தங்கள் எதிர்ப்பை வெளிப் படுத்தி உள்ளன. இவர் அகதிகளிற்கான உதவிகளைச் செய்து, அவர்களும் கௌரவமான மனிதர்களாக வாழ்வதற்கு உதவி உள்ளார். இந்த உதவிக்கு மாற்றீடாக, பணமோ அல்லது வேறு எதனையுமோ, இவர் பெற்றுக்கொள்ளவில்லை. அகதிகளிற்கு உதவிசெய்யும் நோக்கத்தில் மட்டுமே உதவி உள்ளார். இவர் மீதான தண்டனை, மனிதாபிமானச் செயற்பாடுகளிற்கு எதிரான தண்டனை, என சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International), எல்லைகளற்ற மருத்துவர்கள் அமைப்பு (Médecins sans frontières), உலக மருத்துவர்கள் அமைப்பு (Médecins du monde), சிமாத் (Cimade), மற்றும் Secours catholique ஆகியவை தங்களது கடும் எதிர்ப்பினைப் பதிவு செய்துள்ளன.

பிரான்சில் வேகமாக பரவி வரும் சிக்கன்குனியா!

முதல் தடவையாக பிரான்ஸ் சிக்கன்குனியா தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாக அதிர்ச்சி தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. Var மாவட்டத்தில் இரண்டாவது நபர் இந்த தாக்குதலில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாம் நபர் வசிக்கும் அதே பகுதியில் தான் இரண்டாம் நபரும் அடையாளம் காணப் பட்டுள்ளார் எனவும், வேகமாக பரவக்கூடிய நோய் என்பதால் அப்பகுதி உள்ள அனைத்து பகுதிகளிலும் நோய் பரவாமல் தடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் அறிய முடிகிறது.

பிரான்சில் அடையாளம் காணப்பட்டுள்ள அளவில் பெரிய நுளம்புகளினாலேயே (moustique tigre) இந்த சிக்கன்குனியா நோய் பரவுவதாகவும், இந்த நுளம்புகளை அடியோடு அழிக்க அரசு தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்ரோனை பின்தொடரும் புகைப்படக்காரர்கள்! – வழக்கு – ஒன்றிணைந்த ஊடகவியலாளர்கள் சங்கம்!

ஜனாதிபதியினை இரகசியமாக பின் தொடர்ந்து புகைப்படங்கள் எடுத்து வெளியிட்டு வரும் புகைப்படக்கலைஞர்கள் மீது வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப் படுள்ளது. ஜனாதிபதியாக பொறுப்பேற்ற நூறு நாட்கள் ஆன நிலையில் இம்மானுவல் மக்ரோன் மற்றும் அவரது மனைவி முதன்முறையாக விடுமுறைக்காக மார்செய் நகருக்குச் சென்றுள்ளனர். முதலில் இந்த தகவல் ரகசியாக இருந்தது. ஆனால் பின்னர் மார்செய் நகரில் விடுமுறையைக் கழிப்பதாக தெரிவிக்கப்பட்டு பல புகைப்படங்களும் வெளியானது. மக்ரோன் வெளியில் செல்லும் அனைத்து நேரங்களில் எல்லாம் புகைப் படக்கலைஞர் ஒருவர் தவறாமல் பின் தொடர்வதாகவும், உந்துருளி போன்ற வாகனங் களில் பின்னால் சென்று புகைப்படங்கள் எடுப்பதாகவும், ஒருதடவை எச்சரிக்கப்பட் டதாகவும் அறிய முடிகிறது.

அதைத் தொடர்ந்து குறித்த ஒரு புகைப்படக்கலைஞர் மீது காவல்துறையினரிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளதாகவும், இம்மானுவல் மக்ரோன் இந்த புகாரை அளித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தவிர, குறித்த புகைக்படக்கலைஞர் உடனடியாக கைதுசெய் யப்பட்டு 6 மணிநேரங்களுக்கு மேலாக விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்ரோன் பதிவு செய்திருந்த வழக்கில் 'துன்புறுத்தல்' என குறிப்பிட்டிருந்தார். அதற்கு பதிலளித்த SNJ-CGT சங்க நிர்வாகிகள், உண்மையில் இது புகைப்படக்கலைஞருக்கு மிக சவாலான விடயம். ஜனாதிபதிய பொது இடங்களில் பார்ப்பதோ, புகைப்பட எடுப்பதோ அத்தனை எளிதல்ல. இதில் துன்புறுத்தல் என்று எது வும் இல்லை. மக்ரோன் பதிவு செய்த வழக்கு பொருத்தமற்றது. இதனை மக்ரோன் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும், என குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், ஊடகவியலாளர் சங்கம் தெரிவிக்கும் போது, புகைப்படக்கலைஞர் கைது செய்யப்பட்டு சில மணிநேரங்களுக்குள்ளாக, ஜனாதிபதி உதைப்பந்தாட வீரர்கள் உள் ளிட்ட பல புகைப்படங்களுக்கு முகம் கொடுத்துள்ளார் என்பதையும் அவர்கள் மறக்காமல் பதிவு செய்தனர்.

ஸ்பெயின் குளியலறைக்குள் ஒளித்து வைக்கப்பட்ட காணொளிச் செல்பேசி சிக்கிய பிரெஞ்சு இளம்பெண்கள்!

பா–து–கலேயினைச் சேர்ந்த இரண்டு இளம்பெண்கள் கடந்த 25ம் திகதி, Airbnp ஊடாக ஸ்பெயினில் ஒரு வீட்டில் தங்குவ தற்காகப் பதிவு செய்திருந்தனர். அங்கிருந்த குளியலறைக்குள் இவர்கள் குளித்து முடித்துவிட்டு வெளியே வரும்போதுதான், அங்கு ஒரு செல்பேசி காணொளிப்பதிவு செய்தபடி ஒளித்து வைக் கப்பட்டிருந்ததைக் கண்டுள்ளனர்.

20 மற்றும் 21 வயதுடைய இவர்கள் இருவரும் ஸ்பெயினில் Airbnp ஊடாக வாடகைக்கு எடுத்த வீட்டின் உரிமையாளர் தனது மனைவி மகனுடன் அங்கு வசித்து வருகின்றார். இவர்கள் தங்கியி ருந்த கடைசி நாளே இந்தச் செல்பேசியைக் கண்டெடுத்துள்ளனர். அதுவரை அது தனது ஒளிப்பதிவை மேற்கொண்டுள்ளது. அடிக்கடி அது மாற்றியும் வைக்கப்பட்டிருக்கலாம். கடைசியாக இந்தச் செல்பேசியை இவர்கள் எடுத்தபோது தொடர்ச்சியாக 40 நிமி

டங்கள் அது ஒளிப்பதிவைச் செய்திருந்தது. சமயோசிதமாக, சாட்சியமாக, இந்தச் செல்பேசியை இந்த இளம்பெண்கள் கைப்பற் றியமையால், காவற்துறையினர் வீட்டின் உரிமையாளரைக் கைது செய்துள்ளனர்.

146679 ஈழத்தமிழர்களுக்கு என்ன நடந்தது?

தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி தாயகத்தில் நடைபெறும் நீதிக்கான போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக அனைத்துலக காணாமல் போனோர் தினத்தை முன்னிட்டு நடைபெறும்

கவனயீர்ப்பு நிகழ்வு

Journée Internationale des Personnes Disparues

146 679 civils tamouls de l'Eelam ont été portés disparus en mai 2009 et le sont toujours.

30.08.2017

அனைத்துலக காணாமல் போனோர் தினம்

மாலை 15:00 மணி

பிரான்சு பாராளுமன்றத்துக்கு அருகாமையில்

மெட்ரோ:invalides (ligne 8 - 13 RER: C)

மேலதிக தொடர்புகளுக்கு :
CCT-France தமிழர் ஒருங்கிணைப்புக்குழு - 01 48 16 04 21 : மக்கள் பேரவை - 06 52 72 5867 :
தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு - 06 62 84 6606

பிரான்சில் வானத்தில் இருந்து விழ்ந்த பாரிய எரிநட்சத்திரம்!!

கடந்த 4ம் திகதி (வெள்ளிக்கிழமை) இரவு 23h00 மணியளவில், வானத்திலி ருந்து பாரிய தீப்பிழம்புடன் பெரும் எரிநட்சத்திரம் வீழ்ந்துள்ளது. போர்தோ மற்றும் மார்செய்யின் மேலான வானத்தில் இருந்து இது வீழ்ந்ததாதைப் பலரும் அவதா னித்துள்ளனர்.

எரிகற்கள் தொர்பான ஆய்வு நிறுவன மான International Meteor Organization, மற்றும் பிரான்சின் தேசிய விஞ்ஞான ஆராய்ச்சி மையமான CNRS (Centre national de la recherche scientifique) இன் உப பிரிவான பிரான்சின் விண்வெளி வானியற்பியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவ னத்தின் இயக்குநரகமும் (Institut d'astrophysique spatiale et directeur de recherches), இது விண்ணிலிருந்து வீழ்ந்த பெரும் எரிநட்சத்திரம் என உறுதிப்படுத்தி உள்ளது. பெரும் ஒளியுடன் அதிவீச்ச வேக த்தில் இது பூமியை நோக்கி வந்து வீழ்ந் துள்ளது. இதற்கான மேலதிக ஆராய்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பிரித்தானியாவில் இந்து – யூத பெண்களிடையே அர்ச்சகர் மந்திரம் ஓத முதல் மதக் கலப்பு ஓரினத் திருமணம்

பிரித்தானியாவில் இந்து மற்றும் யூத மதத்தைச் சேர்ந்த பெண்கள் இருவர் முதல் முறையாக மதக்கலப்பு ஓரினச்சேர்க்கைத் திருமணத்தைச் செய்து கொண்டனர். இதுகுறித்து ஊடகத் தகவல்கள் தெரிவிப்பதாவது: அமெரிக்காவில் உள்ள டெக்ஸாஸ் மாநிலத்தை சேர்ந்தவர்கள் கலாவதி மிஸ்திரி (48) மற்றும் மிரியம் ஜெபர்ஸன். இந்து மற்றும் யூத மத பெண்களான இவர்கள் 20 ஆண்டுகளுக்கு முன்பாகவே அமெரிக்காவில் பயிற்சியின்போது சந்தித்து நண்பர் ஆனவர்கள். இவர்கள் கடந்த வாரம் இலண்டனில் திருமணம் செய்து கொண்டனர்.

பாரம்பரியமான இந்து முறைப்படி, ஜோடிகள் இருவரும் சிவப்பு மற்றும் வெள்ளை நிறப்புடவைகள்

அணிந்து , மணமகள் நெத்திசுட்டி சூடி, மாலைகள் மாற்றி உள்ளூர் அர்சகர் உதவியுடன் அவர்கள் திருமணம் செய்து கொண்டனர். இதுகுறித்து கலாவதி மிஸ்திரி கூறியதாவது: எங்களுக்குள்ள தொடர்பை நீண்டகாலம் இரகசியமாக வைத்திருந்தோம். ஆசியாவை பூர்வீகமாகக் கொண்ட ஓரினச் சேர்க்கை பெண்ணான எனக்கு இதனை வெளிப்படுத்துவதில் தயக்கமாகத்தான் இருந்தது. இருப்பினும் எங்களுக்கிடையிலான உறவை தெரிந்து கொண்டவுடன் குடும்பத்தினரும், நண்பர்களும் தங்களது ஆதரவைத் தெரிவித்தனர்.

எங்களைப் போன்ற ஓரினச் சேர்க்கை ஜோடிகள் மதம் மற்றும் கலாசாரத்தைப் பெரிதாகப் பார்ப்பதில்லை. உண்மையான அன்பு ஒன்றுதான் எங்களின் பிணைப்பாக உள்ளது என்றார் அவர்.

இதுகுறித்து ஜெபர்ஸன் கூறுகையில், என்னுடைய சொந்த ஊரான டெக்ஸாஸில் உள்ள சான் அன்டனியோவில் யூத முறைப்படி எங்களது திருமணம் இந்த ஆண்டு தொடக்கத்திலேயே நடந்து முடிந்து விட்டது. தற்போது, சம்பிரதாயத்துக்காக இந்து முறையில் நடைபெறும் இந்த திருமணம் உண்மையில் எனக்கு மிகவும் பிடித்து விட்டது என்றார். இந்த முதல் மத கலப்பு ஓரினச்சேர்க்கை ஜோடி, திருமணத்துக்கு பிறகு அமெரிக்கா திரும்பி தங்களது மண வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் தொடங்க உள்ளனர்.

பேசும் படம்



வர்த்தகம் முலதனம்

ஜெகன்

டிரம்பின் புதிய மிரட்டலுக்கு சீனா செச்சரிக்கை!

வடகொரியா உட்பட பல பிரச்சினைகளில் சீனாவை தங்கள் பக்கம் திருப்பமுடியாது என்பதைப் புரிந்துகொண்ட அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், புதிய உத்தியை கையிலெடுத்தார். ஆனால் அதனை முளையிலேயே கிள்ளியெறிய முனைந்திருக்கின்றது சீனா.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் 17 நாள் விடுமுறையில் சென்றிருந்த நிலையில், சீனாவுடனான வர்த்தகத்தில் நீண்ட நாட்களாக தீர்க்கப்படாமல் இருக்கும் காப்புரிமை பற்றிய விவகாரத்தில் முடிவு காண விசாரணை ஒன்றை மேற்கொள்ள ஆணை பிறப்பித்தார். சீனா தனது காப்புரிமை விதிகளை மீறுவதால் அமெரிக்க வர்த்தகமும், வேலை வாய்ப்பும் பாதிக்கப்படுவதாக குற்றம்சாட்டி வருகிறது. இந்நிலையில் இது குறித்து விசாரிக்க அமெரிக்க வர்த்தக அதிகாரி ரொபர்ட் லித்தீசருக்கு டிரம்ப் உத்தரவிட்டார்.

அமெரிக்க நிறுவனங்கள் தங்களது தொழில்நுட்பங்களை சீன நிறுவனங்களுடன் பகிர்ந்து கொள்ளும்படி நிர்ப்பந்திப்பதாக சீனாவின் மீது நீண்டகாலமாக குற்றஞ் சாட்டப்படுகிறது.

ஆனால், தங்கள் மீதான தொழில்நுட்பத் திருட்டு குற்றச்சாட்டு குறித்து அமெரிக்கா

விசாரணை மேற்கொண்டால் வர்த்தகப் போர் மூளும் என்று சீனா அரசு ஊடகம் எச்சரித்திருக்கிறது. சீன வர்த்தகத் துறை அமைச்சகத்தின் அதிகாரபூர்வ ஊடகமான தி சீனா டெய்லி இது தொடர்பாக வெளியிட்டுள்ள தலையங்கத்தில் தெரிவித்திருப்பது, அமெரிக்க தொழில்நுட்பத்தை சீனா திருடியதா என்பது குறித்து விசாரணை மேற்கொள்வது தொடர்பாக அமெரிக்க அரசு ஆலோசித்து வருவதாகத் தகவல் வெளியாகியிருக்கிறது. அப்படியொரு விசாரணை மேற்கொள்ளப்படுமானால் இரு நாட்டு உறவுகளில் மேலும் இறுக்கம் ஏற்படும். அநாவசியமான பதற்றம் உருவாகும். அதுபோன்ற விசாரணையால் இரு நாடுகளிடையே வர்த்தகப் போர் மூளும் அபாயம் உள்ளது.

அவசர முடிவு எடுக்காமல் அமெரிக்கா தீர ஆலோசித்து இந்த விவகாரத்தில் முடிவெடுக்க வேண்டும் என்று சீன வர்த்தக அமைச்சகத்தின் அதிகாரபூர்வ நாளிதழ் எச்சரித்திருக்கிறது. அமெரிக்காவில் 1975ம் ஆண்டு இயற்றப்பட்ட வர்த்தக சட்டம் அந்த நாட்டில் உருவான அனைத்து தொழில்நுட்பங்கள், அறிவுசார் சொத்துகளையும் பாதுகாக்கிறது. முறையான முன் அனுமதியின்றி அமெரிக்க தொழில்நுட்பங்களையோ, அறிவுசார் சொத்துகளையோ வேறொரு நாட்டின் நிறுவனம் பயன்படுத்தினால் அந்த வெளிநாட்டு நிறுவனத்தின் மீதும், அந்த நாட்டின் பிற பொருட்களின் இறக்குமதிக்கு எதிராகவும் கடும் நடவடிக்கைகள் எடுக்க அந்த சட்டம் வகை செய்கிறது.

இந்நிலையில், அமெரிக்க தொழில்நுட்பத்தை சீனா களவாடியதா என்பது குறித்தான விசாரணையை மேற்கொள்ள அமெரிக்க வர்த்தகத் துறைக்கு உத்தரவிட்டதாக வெளியான தகவல்கள் வட கொரியா விடயத்தில் சீனாவின் உதவி தேவைப்படும் நேரத்தில் பதற்றத்தை உண்டாக்கியுள்ளதாக கூறப்படுகிறது.

முன்னதாக, சீனாவின் வர்த்தக நடவடிக்கைகளை டிரம்ப் தனது தேர்தல் பிரச்சாரங்களில் கடிந்து கொண்டிருந்தார் என்பது தெரிந்ததே. அதிலும் சீனா தனது நாணயத்தை செயற்கையாக உயர்த்தியிருப்பதாக அவர் குற்றஞ்சாட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது. இருந்தாலும் நேரடியாக நடவடிக்கை எதையும் அவர் சீனாவிற்கு எதிராக இதுவரை மேற்கொள்ளவில்லை.

இதேவேளை, இந்த விசாரணை ஒரு வருட காலம் நடைபெறும் என்றும் அதற்குள் பேச்சுவார்த்தை மூலம் இப்பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிட முடியும் என்றும் சில அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர். சீனாவிடம் வர்த்தகத் தடைகளைக் காட்டி பேச்சுவார்த்தையை நடத்த இயலாது என்றும் மறைமுக ஒப்பந்தம் மூலமே அதை சாதிக்க முடியும் என்றும் சில நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்கிடையே, அமெரிக்கா பல ஆண்டுகளாக பயன்படுத்தாத வர்த்தக சட்டப் பிரிவான 301 ஐயும் டிரம்ப் பயன்படுத்த நினைத்ததாகவும் கூறப்படுகிறது. இப்பிரிவின் மூலம் அதிபர் தன்னிச்சையாக வர்த்தக கட்டுப்பாடுகளையும், வரிகளையும் விதிக்க முடியும். அந்நிய நாடுகள் நியாயமற்ற முறையிலான வர்த்தக நடைமுறைகளைக் கொண்டிருந்தால் அமெரிக்க தொழில்களை காப்பாற்ற இப்பிரிவின் மூலம் அதிபர் நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் கூறப்படுகின்றது. அந்தளவு நிலைக்கு டிரம்ப் செல்வாரா என்பது தெரியவில்லை.

ஒரு கதை

எங்கள் வேலை!

ஓர் ஊரில் ஒரு செல்வந்தன் இருந்தான். அவனிடம் வெளியில் சென்று வர ஒரு பல்லக்கு இருந்தது. பல்லக்கு தூக்க சில ஆட்களையும் வேலைக்கு வைத்திருந்தான்.

அந்த செல்வந்தன் ஒரு விலையுயர்ந்த நாயையும் வளர்த்து வந்தான். அதுவும் அவனிடம் அன்பையும், நன்றியுடனும் பழகியது. சில சமயம் அது பல்லக்கில் செல்வந்தன் செல்லும்போது கூடவே செல்லும். அவனும் அதனிடம் அன்பு பாராட்டி வளர்த்து வந்தான்.

ஒரு நாள் திடீரென்று அந்த நாய் காணாமல் போய் விட்டது! வீடு, தோட்டம் எங்கும் தேடினான். அந்த நாய் கிடைக்கவே இல்லை. செல்வந்தன் பல்லக்குத் தூக்கும் ஆட்களைக் கூப்பிட்டு, "நேற்று நான் வெளியில் செல்லும்போது ஒருவேளை நாய் கூடவே வந்திருக்கும்..., அதை ஊரெங்கும் சுற்றித் தேடிப்பாருங்கள்." என்றான்.

ஆனால் பல்லக்குத் தூக்கும் ஆட்களோ, "பல்லக்குத் தூக்குவது மட்டும்தான் எங்களது வேலை. நாயைத் தேடுவது அல்ல. அதற்கு வேறு ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்" என்றனர். செல்வந்தன் உடனே பல்லக்கில் ஏறி அமர்ந்து, "சரி நீங்கள் பல்லக்கே தூக்குங்கள். நான் நாயைத் தேடுகிறேன்" என்றான்.

செல்வந்தனைச் சுமந்துகொண்டு ஊரெங்கும் அலைந்தனர் அந்த ஆட்கள். நாய் கிடைத்த பாடில்லை! அப்போது அவர்கள், "சுமப் பதைவிட சுற்றுவதே மேல்" என்று உணர்ந்து கொண்டனர்.

- எஸ்.திருமலை

இரு விதை

லெப்.கேணல் தயாசீலன் / பாவா
செல்வராசா ஜெகதீஸ்வர்
விநாயகபுரம் மட்டக்களப்பு
மண்ணில் 25.09.1969

லெப்.கேணல் யோகா
நாகலிங்கம் ஜீவராசா
வெல்லாவெளி மட்டக்களப்பு
மண்ணில் 13.06.1966

தமிழீழ விடுதலைக்காக தீரமுடன் போராடிய இவ்விரு தளபதிகளும் 20.08.2004 அன்று மட்டக்களப்பில் சிறீலங்கா இராணுவத்துடன் இணைந்து இயங்கிய தேசவிரோதிகளுடனான மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்கள்.

ஒரு குறள்

அறத்துப்பால் – நடுவு நிலைமை

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

ஒரு பக்கம் சாய்ந்து விடாமல் நாணயமான தராசு முள் போல இருந்து நியாயம் கூறுவதுதான் உண்மையான நடுவுநிலைமை என்பதற்கு அழகாகும்.

ஒரு மருத்துவம்

நெஞ்செரிச்சலுக்கு என்ன செய்யலாம்..?

நெஞ்செரிச்சல் என்பது தற்போது சாதாரண விடயமாகி விட்டது. சரியான வேளையில் சாப்பிடாததும் முறையற்ற உணவும் தான் நெஞ்செரிச்சல் ஏற்பட காரணம். சாப்பிடும் உணவை செரிக்க வைப்பதற்காக வயிற்றில் அமிலம் சுரக்கிறது. அப்படி சரியான உணவை எடுத்துக்கொள்ளாத போது இரைப்பையில் சுரக்கும் அமிலம் அதிகமாக சுரக்கத் தொடங்கும். அப்போது தேங்கி இருக்கும் அமிலமானது வயிற் றெரிச்சலை தோற்றுவிக்கும்.

இந்த நிலையில் இறுக்கமான உடை அணிந்து இருந்தாலோ அல்லது அதிக காரம் மிகுந்த உணவை சாப்பிடும்போதோ அந்த அமிலமானது உணவுக் குழாய் வழியாக மேலே சென்று, நெஞ்சில் எரிச்சலை ஏற்படுத்துகிறது. இதை ஒருசில உணவுகள் மூலம் சரிசெய்ய முடியும். இதுதவிர சரியான நேரத்தில் சாப்பிடுவது, குறைந்தது 8 மணிநேரம் தூங்குவது, தினமும் உடற்பயிற்சி மேற்கொள்வது போன்றவற்றை பின்பற்றுவதால் சரி செய்யலாம்.

நெஞ்செரிச்சலை சில பழங்கள், காய்கறிகள் சாப்பிடுவதன் மூலம் குறைக்கலாம். கல்சியம் அதிகம் உள்ள உணவுகளும் நெஞ்செரிச் சலை சரிசெய்யும். அப்பிளில் கார்போ ஹைட்ரேட் அதிகம் உள்ளது. எனவே வயிற்றில் அல்லது நெஞ்சில் எரிச்சல் ஏற்படும் போது, அப்பிளை சாப்பிட்டால், எரிச்சலைத் தடுக்கலாம்.

தினமும் போதுமான தண்ணீர் குடிக்க வேண்டும். இதனால் எரிச்சலை ஏற்படுத்தும் அமிலமானது கரைந்து நீர்த்துப் போய்விடும்.

தொடர்ச்சி 22ஆம் பக்கம்

ஒரு பொன்மொழி

பொறுமை கசக்கும், அதன் மூலம் கிடைக்கும் பலன் இனிக்கும்.

- ஓஸோ

ஒரு பழமொழி

அதிர்ஷ்டம் செய்தவர்க்குத்தான் பிறக்கும் முதல் குழந்தை பெண்ணாக இருக்கும்.

- போர்த்துக்கல்

ஒரு தகவல்

கரையான் புற்று ஒரு அதிசயம் !

கரையான்கள் கட்டுகின்ற புற்று பூமியில் நம்மால் பார்க்கக் கூடிய அதிசயங்களில் ஒன்றுதான். நாம் வசிக்கின்ற வீடுகளை விட மிகவும் உறுதியான முறையில் நேர்த்தியான கட்டட பொறியியல் வல்லநர்களைக் கொண்டு கட்டப்பட்டவை கரையான் புற்றுக்கள். 750 ஆண்டுகளைத் தாண்டியும் புயல், மழை வெள்ளப்பெருக்குகளுக்கும் மத்தியில் இவை வலுவாக இருக்கும் என்பதற்கு ரொடீஷ்யா எனும் இடத்தில் உள்ள பழமையான கரையான் புற்று சாட்சியமாக இருக்கின்றது. கரையான் புற்றுக்குள்ளும் பலவிதமான வசதிகள் உள்ளன. முதலாவது, குளிர்மையான வசதி கொண்ட அறைகள். வெளியே எவ்வளவு வெப்பம் இருந்தாலும் உள்ளே 30 பாகை வெப்பத்தை தாண்டாத வகையில் உள்ளன. எடுத்துக்காட்டாக ஆபிரிக்கக் காடுகளில் மதியம் 40 பாகை செல்சியஸ் வெப்பம் இருக்கும். இரவில் வெறும் ஒரு பாகை செல்சியஸ் கடும் குளிர் இருக்கும். எனினும் அங்குள்ள கரையான் புற்றின் உள்ளே சீராக சுமார் 30 பாகை செல்சியஸ் வெப்பநிலை உள்ளது.

தொடர்ச்சி 22ஆம் பக்கம்

ஒரு வரலாறு

யார் செய்தாலும் தவறுதான்!

அமெரிக்காவின் மிகப் பெரிய வாகனத் தயாரிப்பு நிறுவனமான கிரைஸ்லர் கோர்ப்பரேசன் (chrysler corporation) ஒரு கட்டத்தில் பெரும் நட்டத்தில் இயங்கிக்கொண்டிருந்தது. இயகாக்கோ என்பவர் அதன் தலைமை நிர்வாகியாக பொறுப்பேற்று அந்நிறுவனத்தை இலாபகரமாக்கினார்.

ஒருமுறை பங்குதாரர் கூட்டத்திற்கு அவர் எட்டு நிமிடங்கள் தாமதமாக வந்தார். மன்னிப்பும் கேட்டுவிட்டு,

"நான் வரும்போது பங்குதாரர் கூட்டத்திற்கு எவ்வளவு செலவாகும் என்பதைக் கணக்கிட்டுச் சொல்லச் சொன்னேன். ஒரு நிமிடத்திற்கு 250 டொலர்கள் செலவிடுவதாக சொன்னார்கள். இன்றைய தினம் நான் எட்டு நிமிடம் தாமதித்ததால் நிர்வாகத்திற்கு 2000 டொலர்கள் நட்டம். அதை என் ஊதியத்தில் இருந்து தந்துவிடுவேன். என்னால் நிறுவனம் நட்டம் அமைவதை அனுமதிக்கமாட்டேன். அதுபோல இனி தாமதமாக யார் வந்தாலும் இதே நடைமுறை பின்பற்றப்படும்..." என்று அறிவித்து விட்டார்.

CHRYSLER CORPORATION

ஒரு பழமொழியும் விளக்கமும்

அரசனை நம்பிப் புருசனைக் கைவிட்டாளாம்

'அரசை நம்பி புருசனைக் கைவிட்டாளாம்' என்பதுதான் காலப்போக்கில் மருவி 'அரசனை நம்பி புருசனைக் கைவிட்டாளாம்' என்றாகிவிட்டது. அரச மரத்தைச் சுற்றிவந்தால் குழந்தைப் பாக்கியம் ஏற்படும் என்று யாரோ கூறக்கேட்ட ஒருத்தி, கணவனுடன் சேராமல், அரசமரத்தை மட்டுமே சுற்றி வந்தாளாம். உண்மை என்னவென்றால் அரசமரமும், வேம்பும் இணைந்த மரத்தினைச் சுற்றிவர அந்த மரமிருக்கும் இடங்களில் வீசும் காற்றானது கருப்பையில் உள்ள நச்சுக் கிருமிகளை அழிக்கும் தன்மை வாய்ந்தது என்பதை கண்டறிந்திருந்தனர். அந்த நாட்களில் அதற்கு விஞ்ஞான விளக்கம் கொடுத்து அந்த மரங்களை சுற்றிவருமாறு சொன்னால் புரிந்துகொள்ளமாட்டார்கள். ஆனால், அந்த மரங்கள் இருக்கும் இடத்தில் ஒரு கடவுளின் சிலையை வைத்துவிட்டு சுற்றிவாருங்கள் என்றால் ஏனென்னு மறுபேச்சில்லாமல் சுற்றிவந்துவிடுவார்கள். இதனை அறிந்தே முன்னோர்கள் கடவுள் சிலையை இந்த மரங்கள் இருக்கும் இடங்களில் வைத்தனர். குழந்தைப் பாக்கியமற்ற பெண்கள் கும்பிடுவதற்கு இதுவே முக்கிய காரணம் ஆகும். இதனால்தான் புத்தரையும் கொண்டுபோய் அரச மரத்துக்கு கீழே வைத்திருப்பார்களோ..?

பிரான்சில் செஞ்சோலை மாணவிகள் மற்றும் வீரத்தமிழிச்சி செங்கொடி நினைவு வணக்க நிகழ்வு!

14.08.2006 அன்று சிறீலங்கா பேரினவாத அரசின் மிலேச்சத்தனமான விமானக்குண்டுவீச்சினால் படுகொலை செய்யப்பட்ட செஞ்சோலை மாணவிகளின் 11 ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு மற்றும் 27.08.2011 அன்று பேரறிவாளன், முருகன் மற்றும் சாந்தன் ஆகிய மூவருக்கும் வழங்கப்பட்ட தூக்குத் தண்டனையை ரத்துசெய்யக்கோரி காஞ்சிபுரம் தாலுகா அலுவலகம் முன்பு தன்னைத் தீயிற்கு ஆகுதியாக்கிய வீரத்தமிழிச்சி தோழர் செங்கொடி அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு வணக்கமும் பிரான்சு பாரிசு Republique பகுதியில் இடம்பெற்றது.

பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு தமிழ் பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த 15.08.2017 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 15.00 மணியளவில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஈகைச்சுடரினை 07.03.2009 அன்று முகமாலையில் நடந்த நேரடிச் சமரில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வினிதரனின் சகோதரன் ஏற்றிவைத்து மலர்வணக்கம் செலுத்தினார். அகவணக்கத்தைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் சுடர் ஏற்றி மலர்வணக்கம் செலுத்தினர்.

தமிழ்ப் பெண்கள் அமைப்பு உறுப்பினர் திருமதி ஜினேஸ் அவர்களின் பேச்சு, வில்லிய ஸுபெல் தமிழ்ச் சோலை திருமதி கங்காதரன் மலர்விழி அவர்களின் கவிதை, தமிழ் இளையோர் அமைப்பு உறுப்பினர் செல்வன் விவியன் சுபாஸ்கரன அவர்களின் பிரெஞ்சு மொழியிலான பேச்சு, செல்வி திலீப்குமார் திசானிகா அவர்களின் கரோக்கி பாடல், பாரிசு சோதியா கலைக்கல்லூரி மாணவன் செல்வன் ராஜ்குமார் இளங்கதிர் அவர்களின் தனிநடிப்பு, பிரான்சு தமிழீழ மக்கள் பேரவை பொறுப்பாளர் திரு.திருச்சோதி அவர்களின் உரை, செல்வி ஸ்ரீரங்கன் கரினி அவர்களின் நடனம், செல்விகள் திலீப்குமார், தானுகா கோகுலதாஸ் சூரியா ஆகியோரின் நடனம் (செஞ்சோலை நினைவுப்பாடல்) போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து சிறப்பு உரையினை பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக் குழு பரப்புரை பொறுப்பாளர் திரு.சத்தியதாசன் அவர்கள் ஆற்றியிருந்தார்.

இந்நிகழ்வுகளை வேற்று இனத்தவர்களும் ஆர்வத்துடன் கேட்டு, கண்டு, கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நிறைவாக நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும் பாடல் ஒலித்ததைத் தொடர்ந்து தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் எனும் தாரகமந்திரத்துடன் நிகழ்வுகள் நிறைவுகண்டன.

பிரான்சு லாக்கூர்நொவ்
அருள்மிகு சிறி சித்திவிநாயகர் ஆலய தேர்த்திருவிழா!

பிரான்சு லாக்கூர்நொவ் பகுதியில் அமைந்துள்ள சிறி சித்திவிநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா கடந்த (13.08.2017) ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகிய குறித்த தேர்த் திருவிழா முதல் முறையாக வீதியுலா வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தேர்த்திருவிழாவில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர். பிரெஞ்சு காவல்துறையினர் பாதுகாப்புவழங்கியதுடன், தொண்டர்களும் தமது பணிகளைச் செய்தமை சிறப்பாக இருந்தது.

பொதுமக்களுக்கு குடிநீர், குளிர்பானங்கள், உணவு என்பன தாராளமாக வழங்கப்பட்டது. பொதுமக்கள் காவடிகள் எடுத்தல், தீச்சட்டி எடுத்தல் போன்ற நேரத்திக்கடன்களை செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உடனுக்குடன் தமிழ்த்தேசிய, மற்றும் சர்வதேசச் செய்திகளுடன்
சங்கதி24
www.sankathi24.com

பயங்கரவாதிகளின் முதல் இலக்கு ஐரோப்பா

- ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை -

ஐரோப்பாவிலும் உலகின் பிற இடங்களிலும் பயங்கரவாதத் தாக்குதல்கள் நிகழ்த்த இஸ்லாமிய தேச பயங்கரவாத இயக்கம் (ஐஎஸ்ஐஎஸ்) நிதி அளித்து வருகிறது என்று ஐ.நா. அமைத்த நிபுணர்கள் குழு நடத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. பயங்கரவாதிகளின் முதல் இலக்கு ஐரோப்பா என்றும் அல்-ஹைடா தொடர்ந்து செயல்பட்டு வருவதாகவும் அந்த நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு பயங்கரவாதக் குழுக்களுக்கு எதிராக ஐ.நா. பாதுகாப்பு சபை தடை விதித்துள்ளது. அந்தத் தடை உத்தரவுகள் எவ்வாறு செயற்பட்டு வருகின்றன என்று கண்காணிக்க அமைக்கப்பட நிபுணர்கள் குழு தனது ஆய்வறிக்கையை அளித்துள்ளது.

ஐ.நா. பாதுகாப்பு சபையிடம் சமர்ப்பித்த அந்த அறிக்கையில் தெரிவித்திருப்பது: இஸ்லாமிய தேசம், அல்-ஹைடா ஆகிய பயங்கரவாதக் குழுக்களிடையே இப்போதும் கடும் போட்டி நிலவுகிறது. அதே சமயத்தில் அந்தக் குழுக்களில் உள்ள பயங்கரவாதிகள் அவ்வப்போது இரு குழுக்களுக்கும் மாறி மாறி சண்டையிட்டு வருகின்றனர். சில இடங்களில் தேவைக்கு ஏற்றாற்போல இரு குழுக்களும் ஒத்துழைப்பு அளித்து வருவதும் நடைபெறுகிறது.

தென் கிழக்கு ஆசியாவில் பயங்கரவாத அச்சுறுத்தல் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. பிலிப்பைன்சின் மாராவி நகரில் இஸ்லாமிய தேசக் குழுவுடன் தொடர்புடைய பிலிப்பைன்ஸ் பயங்கரவாதிகள் அந்த நாட்டின் இராணுவத்தினருடன் மோதி வருவது இதற்கு சாட்சி. தென் கிழக்கு ஆசியாவில் அமுத்தமாகக் காலூன்ற இஸ்லாமிய தேச பயங்கரவாத இயக்கம் முயற்சி செய்து வருகிறது.

ஈராக், சிரியாவில் இராணுவத்தினரின் கடுமையான தாக்குதலை எதிர்கொண்டு வரும் பயங்கரவாதிகள், அங்கு உள்ளூர் தளபதிகளின் திட்டப்படி சண்டையிட்டு வருகின்றனர். ஈராக், சிரியாவில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். பயங்கரவாதிகள் ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது.

உலகெங்கும் உள்ள உறுப்பினர்களுக்கும் ஆதரவுக் குழுக்களுக்கும் ஐ.எஸ். தொடர்ந்து நிதி வழங்கி வருகிறது. ஆதரவுக் குழுக்கள் இல்லாத இடங்களிலும் ஐ.எஸ். நிதி வழங்கி வருகிறது. ஐரோப்பாதான் பயங்கரவாதிகளின் முக்கிய இலக்காக இருந்து வருகிறது.

அல்-ஹைடா தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. பின்லேடனின் மகன் ஹம்ஸா பின்லேடன், யேமனில் உள்ள அல்-ஹைடா முகாம்களில் பயிற்சி பெற பயங்கரவாதிகளுக்கு அழைப்பு விடுத்தது கவனிக்கத்தக்கது.

ஈராக், சிரியாவில் சண்டையிட்ட பிறகு சொந்த நாடுகளுக்குத் திரும்பும் வெளிநாட்டு பயங்கரவாதிகளை மூன்று விதமாகப் பிரிக்கலாம்.

1. **பயங்கரவாதத்தில் நம்பிக்கை இழந்துவிட்டவர்கள்.**
2. **தீவிரம் குறையாமல் சொந்த நாடுகளில் பயங்கரவாதத் தாக்குதல் நிகழ்த்த திட்டமிடுபவர்கள்.**
3. **ஐ.எஸ். உடன் இல்லாவிட்டாலும் வேறு குழுவுடன் இணைந்து பயங்கரவாதச் செயல்கள் புரியத் தயாராக இருப்பவர்கள்.**

இவ்வாறு மூன்று வகையாக அவர்களைப் பிரிக்கலாம் என்று ஐ.நா. அமைத்த நிபுணர்கள் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சியரா லியோன் நிலச்சரிவில் 400 பேர் பலி

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்று சியாராலியோனில் கடந்த 14ம் திகதி அதிகாலையில் ஏற்பட்ட திடீர் நிலச்சரிவில் மலையடிவாரத்தில் வசித்த 400க்கும் மேற்பட்டவர்கள் பலியாகினர். 600 பேர் வரை காணாமல் போயுள்ளனர். 2000ற்கும் மேற்பட்ட வீடுகள் மண்ணில்

புதைந்துள்ளன. இதனால் மேலும் பலர் உயிரிழந்தும் காணாமலும் போயிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. இந்நிலையில், காணாமல்போனவர்களை மீட்பதற்கு சர்வதேச நாடுகளின் உதவியை அந்நாட்டு அதிபர் பட்மா கமாரா கோரியுள்ளார். பல்லாயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்து உணவின்றி தவித்து வருவதால், மீட்பு மற்றும் நிவாரணப்பணிகளுக்காக சர்வதேச நாடுகள் உதவிட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். அத்துடன், அப்பகுதியின் ஒட்டுமொத்த சமூகமும் அழிந்து விட்டது என மிகுந்த வேதனையுடன் கூறியுள்ளார்.

மண்சரிவு ஏற்பட்ட ரிஜெண்ட் என்ற பகுதி மலையடிவாரத்தில் அமைந்துள்ளது. பலர் மலையிலும் வீடுகளை கட்டியுள்ளனர். இரவு முழுவதும் மலைப்பகுதியில் கடும் மழை கொட்டியது. இதனால் உருவான வெள்ளப்பெருக்கு திடீரென மலையின் கீழ் இறங்கி உள்ளது. அதிகாலையில் ஒரே நேரத்தில் அடித்து வந்த பெரும் வெள்ளப்பெருக்கு, மலையில் கட்டியிருந்த மற்றும் அடிவாரத்தில் இருந்த வீடுகளை அடித்து கொண்டு சென்றது. இதில் வீடுகளில் தூங்கிக் கொண்டிருந்த 400க்கும் மேற்பட்டவர்கள் பலியாகினர். இதுவரை மண்ணில் இருந்து மீட்கப்பட்ட 200 பேரின் சடலங்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. மண்ணில் புதைந்தவர்கள் இன்னும் ஏராளமானவர்கள் இருக்கலாம் என்பதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று செஞ்சிலுவை சங்கம் தெரிவித்துள்ளது. அங்குள்ள ஐ.நா. குழுவினர் ஒன்றுகூடி, நிவாரணப்பணிகளில் உதவி வருவதாக ஐ.நா. சபை கூறியுள்ளது.

கரும் வெள்ளத்தால் நேபாளத்தில் 115 பேர் பலி

நேபாளத்தில் ஏற்பட்ட கடுமையான மழை வெள்ளப் பெருக்குக் காரணமாக, கடந்த வாரத்துக்குள், குறைந்தது 115 பேர் பலியாகியுள்ளனர் என, அந்நாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். மீட்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் நிலையில், உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. கடுமையான வெள்ளமும் அதன் காரணமாக ஏற்படும் மண்சரிவுகளும், மக்களைப் பெரிதும் பாதித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிவாரணப் பணியாளர்களின் தகவலின்படி, நாட்டின் 75 மாவட்டங்களில் 26 மாவட்டங்கள், வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளன அல்லது மண்சரிவின் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிடப்படுகிறது. தங்களுடைய முக்கியமான ஆவணங்களையும் சொத்துகளையும் சுமந்தபடி, நெஞ்சு அளவுக்குக் காணப்படும் வெள்ள நீரில், மக்கள் நடந்து செல்வதை, தொலைக்காட்சியில் வெளியிடப்பட்ட காட்சிகள் காட்டின.

இந்த நிலைமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த, நேபாள காவல்துறைப் பேச்சாளர் புஷ்கர் கார்க்கி, வெள்ளத்தில் சிக்கியுள்ளவர்களைக் காப்பாற்றவும் நிவாரணப் பணிகளிலும், நாங்கள் இப்போது கவனஞ் செலுத்துவோம். சாப்பிடுவதற்கும் அணிவதற்கும் மக்க

80,000 பேர் பங்கேற்ற மரதன்

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற City to Surf மரதன் ஓட்டத்தில் 80,000 பேர் கலந்துகொண்டனர். பல்வேறு தொண்டு நிறுவனங்கள் ஒன்றிணைந்து ஆண்டுதோறும் மிகதூர மரதன் ஓட்டப் போட்டிகளை நடத்தி வருகின்றனர். இந்தாண்டு சிட்னியில் நடைபெற்ற மரதனில் 80,000 பேர் பங்கேற்று ஓடினர். பங்கேற்றவர்களில் பலர் விதவிதமான வேடங்களில் தங்களை அலங்கரித்துக்கொண்டு போட்டியில் பங்கேற்றனர். போட்டி இலக்கான 14 கிலோ மீற்றர் தூரத்தை 42 நிமிடங்கள் 16 வினாடிகளில் கடந்து ஹாரி சிமஸ் வெற்றி பெற்றார். பெண்கள் பிரிவில் சீலியா என்பவர் 48 நிமிடங்களில் இலக்கினை கடந்து முதலிடம்பிடித்தார். 10 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் சிட்டி டு சர்ஃப் மரதன் ஓட்டத்தின் மூலம் வகுலான பணம் முழுவதும் தொண்டு நிறுவனங்களுக்கு அளிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. 2007ம் ஆண்டு 2000 பேருடன் தொடங்கிய இந்த மரதன் ஓட்டத்தில் தற்போது 80 ஆயிரம் பேர் பங்கேற்பது குறிப்பிடத்தக்கது.

ஜப்பான் - அமெரிக்கா போர் ஒத்திகை

பசிபிக் பகுதியில் அமெரிக்காவுக்கும், வட கொரியாவுக்கும் இடையே கடும் போர் பதற்றம் நிலவி வரும் சூழலில், பசிபிக் கடலையொட்டி அமைந்துள்ள ஹோக்கைடோ தீவில் அமெரிக்காவும், ஜப்பானும் கூட்டு இராணுவ ஒத்திகையில் ஈடுபட்டன. ஜப்பானுக்குச் சொந்தமான அந்தத் தீவில், ஜப்பான் மற்றும் அமெரிக்கக் கவச வாகனங்கள் குண்டுகள் வீசி பயிற்சியில் ஈடுபட்டன. 1,300 அமெரிக்கப் படையினரும், 2,000 ஜப்பானியப் படையினரும் பங்கேற்கும் இந்தப் போர் ஒத்திகை, ஹோக்கைடோ தீவில் முதல் முறையாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

100 எரிமலைகள் கண்டுபிடிப்பு!

அண்டார்டிகா பனிப்பிரதேசத்தில் 100 எரிமலைகள் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். எடின்பர்க் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்ததாவது: அண்டார்டிகா பனிப்படலத்துக்கு கீழே இரண்டு கிலோ மீற்றர் ஆழத்தில் 100 எரிமலைகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இவை அனைத்தும் பனியால் ஆன தடிமனான அடுக்குகளால் பத்திரமாக மூடப்பட்டுள்ளன. புதிதாக கண்டறியப்பட்ட எரிமலைகள் 100 மீற்றர் முதல் 3,850 மீற்றர் வரை உயரம் கொண்டவையாக உள்ளன. அண்டார்டிகாராஸ் பனித் தடுப்பு பகுதியில் தென்படத் தொடங்கும் இந்த எரிமலைகள் 3,500 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள அண்டார்டிகா தீபகற்ப பகுதி வரை நீண்டுள்ளன. இந்த பகுதியில் மேலும் பல எரிமலைகள் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தோனேசியாவில் சீன கடவுளின் சிலை

இந்தோனேசியாவின் துபான் நகரில் ஒரு கோவில் வளாகத்தில் சீனக் கடவுளின் 100 அடி உயரச் சிலை நிறுவப்பட்டுள்ள தற்கு அப்பகுதி முஸ்லிம்கள் எதிர்ப்புத்

தெரிவித்துள்ளனர். இந்தோனேசியாவின் கிழக்கு ஜாவா மாநிலத்தில் துபான் நகரில் சீனர்களின் கோவில் ஒன்றுள்ளது. இந்தக் கோவிலில் ஏற்கனவே இருக்கும் கடவுளர் சிலைகள் போக, புதிதாக 100 அடி உயரத்தில் குவான் யு என்கிற கடவுளின் சிலை உருவாக்கப்பட்டுள்ளது. டிரகோன், பாம்பு ஆகியவற்றுடன் வாள், அரிவாள் ஆகிய ஆயுதங்களையும் ஏந்தியபடி அமைக்கப்பட்டுள்ள இந்த மிகப்பெரிய சிலைக்கு அப்பகுதி முஸ்லிம்களும் தேசியவாதிகளும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இதனால் சிலை நிறுவப்பட்டுள்ள கோவிலைச் சுற்றிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான முஸ்லிம்கள் வாழும்

20

நாடு இந்தோனேசியா ஆகும். மதச்சார்பற்ற நாடான இந்தோனேசியாவில் அனைத்து மதத்தினருக்கும் வழிபாட்டு உரிமைகள் வழங்கப்பட்டிருந்தாலும் அண்மைக்காலமாக ஒரு சில மதத்தினர் இடையே மோதல்கள் நிகழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

சாப்போவை விடித்தவருக்கு இடமாற்றம்

மெக்சிக்கோவின் மிகப்பெரிய போதைப்பொருள் கடத்தல் மன்னனாகக் கருதப்படும் எல் சாப்போ குஸ்மானை, கடந்தாண்டு கைதுசெய்த காவல்துறை அதிகாரி, இடமாற்றமொன்றைப் பெற்றுக் கொண்டு ஐக்கிய அமெரிக்காவின் வாஷிங்டன் டி.சியில் அமைந்துள்ள, மெக்சிக்கோவுக்கான ஐ.அமெரிக்கத் தூதரகத்துக்குப் பணியாற்றச் சென்றுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. அவரது இடமாற்றம், பதவியுயர்வு என முன்னர் தெரிவிக்கப்பட்ட போதிலும், அவரதும் அவரது குடும்பத்தினரும் பாதுகாப்புக் கருதியே, இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பத்தாயிரம் முட்டைகளால் பொரியல்

பெல்ஜியம் ஆண்டு விழாவில், பத்தாயிரம் முட்டைகளைக் கொண்டு மிகப் பெரிய முட்டைப் பொரியல் (ஓம்லேட்)

செய்து பசிர்ந்துண்டுள்ளனர். பெல்ஜியம் நாட்டில் ஆண்டுதோறும் வசந்த காலத்தில் ஆண்டு விழா கொண்டாடப்படும். இந்த விழாவில் மக்கள் வித்தியாசமாக ஏதாவது செய்து, மகிழ்ச்சியாக வசந்த காலத்தை கொண்டாடுவார்கள். இந்த ஆண்டு பெல்ஜியத்தில் உள்ள மாம்மேடி கிராமத்தில் உள்ள மக்கள் வித்தியாசமான முயற்சியில் ஈடுபட்டனர். மிகப்பெரிய முட்டைப் பொரியல் செய்து அதனை அனைவருக்கும் பசிர்ந்து வழங்க முடிவு செய்தனர். இதைத் தொடர்ந்து 10ற்கும் மேற்பட்ட சமையல்காரர்கள் மற்றும் மக்களில் சிலர் இணைந்து அதற்கு உதவி புரிந்தனர். அவர்கள் மிகப் பெரிய பாத்திரத்தில் 10 ஆயிரம் முட்டையை உடைத்து ஊற்றினர். அதில் வெங்காயம் மற்றும் இறைச்சியைக் கலந்து முட்டைப் பொரியல் செய்தனர். அந்த மிகப்பெரிய முட்டைப் பொரியலை விழாவில் பங்கு பெற்ற அனைவருக்கும் கொடுத்து மகிழ்ந்தனர்.

கோழி வேட்டையில் படையினர்

போதைப் பொருள் வேட்டையில் ஈடுபட்டுள்ள பிலிப்பைன்ஸ் இராணுவத்தினர் தற்போது கோழி வேட்டையில் இறங்கியுள்ளனர். அந்நாட்டில், பறவைக் காய்ச்சல் பரவி வருகிறது. இந்த நோய் பரவுவதை தடுக்கும் விதத்தில் அங்கு 6 இலட்சம் கோழிகளை கொன்று அழிக்கும் பணியில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

குவைத் கடலில் பரவும் மசகு எண்ணெய்

குவைத்தின் தெற்குக் கடலோரப் பகுதியில் மர்மமான முறையில் கசிந்து பரவி வரும் மசகு எண்ணெய், தற்போது 131 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் பரவியுள்ளதாக அமெரிக்காவைச் சேர்ந்த தன்னார்வ நிறுவனம் தெரிவித்துள்ளது.

21

இடம் எதுவுமில்லை. ஆகவே, உண்ணுவதற்காக அவர்களுக்கு ஏதாவது வழங்கி, உயிர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று தெரிவித்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள நேபாளத்திற்கு சீனா ஒரு மில்லியன் டொலர் நிதி உதவி வழங்குவதாக அறிவித்துள்ளது. இருதரப்பு உறவுகளை மேம்படுத்தும் வகையில் நடந்த இருநாட்டு துணைப் பிரதமர்களின் கூட்டுப் பேச்சுவார்த்தையில் இது அறிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதிகளின் குற்றங்களை விசாரிக்க சர்வதேச உதவியை நாடியுள்ள ஈராக்!

ஐஎஸ் இயக்கத்தின் ஆளுகையின் போது நிகழ்த்தப்பட்ட குற்றங்களை விசாரிக்க ஈராக் சர்வதேச உதவியை நாடியுள்ளது.?விரைவில் பிரித்தானியா ஐநா. பாதுகாப்பு சபையில் இதற்கான தீர்மானத்தை தாக்கல் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரித்தானியாவின் மனித உரிமை வழக்கறிஞர் அமல் க்ளூனியும், யசீதி இனப் பெண்ணும் ஐஎஸ் இயக்கத்தால் பாதிக்கப்பட்டவருமான நதியா முராத்தும் ஐ.நா. விசாரணையை ஈராக் நடத்த அனுமதிக்குமாறு கோருகின்றனர். பிரித்தானியா, ஈராக் அரசு இதற்கு முறையான வேண்டுகோள் கடிதம் கொடுக்க வேண்டுமென்று கோரியதை அடுத்து ஈராக் அரசு கடிதம் அளித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐஎஸ் இயக்கத்தின் குற்றங்களை விசாரிக்க சர்வதேச சமூகத்தின் உதவியை கோருகிறோம் என்று கடிதத்தில் வெளியுறவு அமைச்சர் இப்ரஹீம் ஜாஃபரி கூறியுள்ளார்.

இத்தீர்மானம் எப்போது வாக்கெடுப்பிற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரியவில்லை. ஐஎஸ் இயக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்கள் நீதி கேட்கிறார்கள் என்றார் க்ளூனி. கடந்த ஆண்டு யூன் மாதத்தில் ஐ.நா. நிபுணர்கள் ஐஎஸ் இயக்கம் இனப்படுகொலைகள் நிகழ்த்தி வருவதாக கூறியது. ஐஎஸ் கொலையாளிகளை ஈராக் நீதிமன்றங்களின் முன்னால் நிறுத்துவது முக்கியம் என்று ஈராக் அரசு ஐ.நா. விற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியுள்ளது.

போதைப் பொருள் பிலிப்பின்சில் 32 பேர் சுட்டுக்கொலை

பிலிப்பின்சில் போதை மருந்து கடத்தலில் ஈடுபட்ட குற்றவாளிகள் 32 பேரை காவல்துறையினர் ஒரே நாளில் அதிரடியாக சுட்டுக்கொன்றனர். இதுகுறித்து அதிகாரிகள் தெரிவித்ததாவது: பிலிப்பின்சின் வடக்கில் உள்ள புலாகேன் மாகாணத்தில் போதை மருந்து கடத்தல் தொடர்பாக காவல்துறையினர் திங்கள்கிழமை (14ம் திகதி) தீவிர தேடுதல் வேட்டை நடத்தினர். இதில், போதை மருந்து கடத்தல் குற்றவாளிகள் 32 பேர் அதிரடியாக சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும், 109 பேர் கைது செய்யப்பட்டனர். காவல்துறையினர் கைது நடவடிக்கைக்கு எதிராக கடத்தல்காரர்கள் ஆயுதங்களை பயன்படுத்த முற்பட்ட போது இந்த சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்பட்டுள்ளது.

பிலிப்பின்ஸ் அதிபராக பொறுப்பேற்ற றோட்ரிகோ டுடேர்தே போதை மருந்துக்கு எதிரான போரை கடந்த ஆண்டு யூலையில் அறிவித்த பிறகு ஒரே நாளில் போதை மருந்து குற்றவாளிகள் அதிக எண்ணிக்கையில் சுட்டுக் கொல்லப்பட்டது இதுவே முதல் முறை.

போதை மருந்து கடத்தலுக்கு எதிரான நடவடிக்கைகளின் போது காவல்துறையினர் நிகழ்த்திய துப்பாக்கிச் சூட்டில் இதுவரையில் 3,264 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும், போதை மருந்து கடத்தல் கும்பல்களுக்கிடையேயான மோதல்களில் 2000ற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

போதை மருந்து கடத்தல் குற்றங்களில் ஈடுபடுபவர்களை காவல்துறையினர் விசாரணை ஏதுமின்றி கண்மூடித்தனமாக சுட்டுத் தள்ளுவதாக மனித உரிமை ஆர்வலர்கள் கடும் குற்றம் சாட்டுகின்றனர். எனவே, இதுகுறித்து சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என அவர்கள் அரசை வலியுறுத்தி வருகின்றனர்.

சாதனை படைத்த ஒபாமாவின் பதிவு

அமெரிக்காவில் கடந்த சனிக்கிழமை (12ம் திகதி) நிகழ்த்தப்பட்ட இனவெறித் தாக்குதல் குறித்து அந்த நாட்டின் முன்னாள் அதிபர் ஒபாமா வெளியிட்டுள்ள சுட்டுரை (டுவிட்டர்) பதிவு, இதுவரை இல்லாத அதிக எண்ணிக்கையில் விருப்பங்களை (லைக்ஸ்) பெற்று சாதனை படைத்துள்ளது. எனினும், அந்தச் சம்பவத்துக்கு இனவாதிகள் மட்டுமன்றி நடுநிலைவாதிகளும் காரணம் என்ற அதிபர் டிரம்ப்பின் கருத்துக்கு எதிர்ப்பு வலுத்து வருகிறது.

அமெரிக்காவில் வெள்ளை இனத்தவர்களின் உரிமையை வலியுறுத்தி, வர்ஜீனியா மாகாணம், சார்லட்ஸ்வில் நகரில் இந்த மாதம் 11 மற்றும் 12ம் திகதிகளில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்துவதாக இனவாத அமைப்புகள் அறிவித்திருந்தன. எனினும், அந்த ஆர்ப்பாட்டத்துக்கு வர்ஜீனியா மாகாண அரசு தடை விதித்தோடு, சார்லட்ஸ்வில் நகரில் அவசர நிலையையும் அறிவித்தது. அந்தப் போராட்டங்களுக்கு எதிராக நடுநிலைவாதிகளும் எதிர்ப்பு ஊர்வலங்களை நடத்தினர்.

இதனால், இனவாதிகளுக்கும், நடுநிலைவாதிகளுக்கும் ஆங்காங்கே கைகலப்பு ஏற்பட்டு பலர் காயமடைந்தனர். இந்தச் சூழலில், எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இனவாதி ஒருவர் கடந்த 12ம் திகதி காரை வேகமாக ஓட்டி வந்து மோதச் செய்தார். இதில் ஒரு பெண் உயிரிழந்தார், பலர் காயமடைந்தனர்.

இந்தச் சூழலில், முன்னாள் அதிபர் ஒபாமா தனது சுட்டுரைப் பக்கத்தில் தெரிவித்துள்ளதாவது: **'பிறக்கும் போதே யாரும் நிறம், இனம், மதத்தின் அடிப்படையில் பிறரை வெறுப்பதில்லை. வெறுப்பு என்பது ஒருவருக்குக் கற்றுத் தரப்படுகிறது. வெறுப்பைக் கற்றுத் தர முடிந்தால், அன்பையும் எளிதில் கற்றுத் தர முடியும்'** என்று தனது பதிவுகளில் ஒபாமா குறிப்பிட்டுள்ளார். அந்தப் பதிவுடன், ஜன்னல் வழியாக பல்வேறு இனங்களையும் சேர்ந்த சில குழந்தைகளுடன் ஒபாமா உரையாடும் படமும் இணைக்கப்பட்டுள்ளது. ஒபாமாவின் அந்த முதல் பதிவு, 35 இலட்சத்துக்கும் மேற்பட்டோரது விருப்பத்தைப் பெற்றுள்ளது. சுட்டுரை வலைதளத்தில் இவ்வளவு அதிக எண்ணிக்கையிலான விருப்பங்களைப் பெற்றுள்ளது ஒபாமாவின் இந்தப் பதிவுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து டுவிட்டர் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: முன்னாள் அதிபர் ஒபாமாவின் சுட்டுரைப் பதிவு, இதுவரை இல்லாத அதிக எண்ணிக்கையில் விருப்பங்களைப் பெற்றுள்ளது. அந்தப் பதிவு உலக சாதனை படைத்தது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.நா. அமைதிப்படை தலைமையகம் மீது தாக்குதல் பலம்பெறுகின்றனரா பயங்கரவாதிகள்?

மாலியில் ஐ.நா. அமைதிப்படை தலைமையகத்தின் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல்களில் 9 பேர் உயிரிழந்துள்ளனர். மாலியின் டிம்பக்து நகரில் அமைந்துள்ள ஐ.நா. அமைதிப்படை தலைமையகத்தின் மீது தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். முன்னதாக டோவன்சா பகுதியில் உள்ள ஐ.நா அலுவலகம் மீதும் அவர்கள் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இந்த இருவேறு தாக்குதல்களில் 8 ஐ.நா. அமைதிப் படையினர் உள்ளிட்ட 9 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் காயமடைந்துள்ளனர். இதுபற்றி ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையில், தீவிரவாதிகளின் தாக்குதல் மிகவும் கண்டனத்திற்கு உரியது. இந்த தாக்குதல்களில் ஈடுபட்டவர்களை கண்டறிந்து அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். இதற்கென நாம் அனைவரும் ஒன்றிணைந்து நம்முடைய சக்தி அனைத்தையும் ஒன்றிணைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, இந்த தாக்குதலை அடுத்து ஹெலிகாப்டர்கள் மூலம் கொடுக்கப்பட்ட பதிலடியில் 8 தீவிரவாதிகள் உயிரிழந்தனர் என்று அமைதிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

சிரியா அதிபர் மீது போர்க்குற்றம் போதுமான ஆதாரம் உள்ளதாக ஐ.நா. தெரிவிப்பு

சிரியா அதிபர் பஷார் அல்-ஆசாத் மீது போர்க் குற்றம் சுமத்துவதற்குப் போதுமான ஆதாரம் உள்ளதாக ஐ.நா. சார்பில் அமைத்த விசாரணைக் குழுவில் இடம்பெற்ற உறுப்பினர் தெரிவித்திருக்கிறார். ஐ.நா. சிரியா விசாரணை ஆணையம் என்று அறியப்படும் விசாரணை அமைப்பு 5 ஆண்டுகளுக்கு முன்பு சிரியா உள்நாட்டுப் போர் குறித்து



விசாரிக்க அமைக்கப்பட்டது. அதில் இடம்பெற்றவர் சுவிட்ஸர்லாந்தைச் சேர்ந்த கார்லா டெல்போன்டி. அந்த ஆணையம் நடத்திய ஆய்வுகளிலிருந்து சிரியாவில் போர்க்குற்றம் நடைபெற்றுள்ளது என்பது உறுதியாகத் தெரிகிறது என்று சுவிஸ் ஊடகத்துக்கு அளித்த பேட்டியில் அவர் தெரிவித்தார். போர்க்குற்றம் தொடர்பாக சிறப்பு நீதிமன்றம் அமைத்து விசாரணை நடத்த வேண்டுமானால் அதற்கான அடிப்படைத் தகவல்கள் தற்போது உள்ளன. ஆனால் ஐ.நா. பாதுகாப்புக் குழுதான் இறுதி முடிவு எடுக்க வேண்டும்? என்றார் அவர்.

சிரியாவில் அதிபர் அல்-ஆசாதுக்கு எதிராக 2011ம் ஆண்டு ஆயுதக் கிளர்ச்சி தொடங்கியது. இஸ்லாமிய அடிப்படைவாதிகள் அந்தக் கிளர்ச்சியில் இணைந்தனர். உள்நாட்டுப் போரில் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக இரசாயனத் தாக்குதல் நடத்தியதாக அல்-ஆசாத் மீது குற்றம் சாட்டப்பட்டது. உள்நாட்டுப் போரில் 4 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பலியாகினர். இலட்சக்கணக்கானோர் நாட்டைவிட்டு வெளியேறி ஐரோப்பாவில் தஞ்சம் புகுந்தனர். சிரியா அதிபர் அல்-ஆசாதை பதவியிலிருந்து நீக்குவதை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு, இஸ்லாமிய அடிப்படைவாதிகள் உள்ளிட்ட கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்கா உதவி வந்தது. இந்நிலையில், ஐ.எஸ். பயங்கரவாதிகள் அழிப்பில் கவனம் திரும்பியதுடன், கிளர்ச்சியாளர்களுக்கு அளித்து வந்த உதவியை அமெரிக்கா மறு பரிசீலனை செய்து வருகிறது. இப்போது ரஷ்யா முன்னிலையில் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

குழந்தை திருமணங்கள் சிரியர்களிடம் அதிகரிப்பு

போர்ச் சூழல் காரணமாக பெரும்பாலான சிரியா நாட்டைச் சேர்ந்தவர்களின் குடும்பங்கள், தங்கள் நிதிச்சுமையைக் குறைக்க குழந்தை திருமணங்கள் செய்வதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஜோர்டானில் வசித்து வரும் சிரியா நாட்டைச் சேர்ந்த குடும்பத்தினரே இதுபோன்ற திருமணங்களை ஊக்குவிப்பதாக தகவல்

வெளியாகியுள்ளது. பெண்கள் வெளிநாடுகளில் நிறைய பாதிப்புகளை எதிர்கொள்ளவேண்டி வரும் என்பதால் அவர்களது கௌரவத்தை பாதுகாக்கும் ஒரு வழியாகவும் இத்திருமணம் பார்க்கப்படுகிறது.

ஜோர்டானில் இப்படி நடத்திவைக்கப்படும் குழந்தை திருமணங்கள் தொடர்பான புள்ளிவிவரங்கள் முதல் முறையாக நீண்ட சந்தேகத்திற்கிடமான அளவில் அதிகரித்துள்ளது. ஜோர்டானில் சமீபத்தில் எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 9.5 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர். இதில் 2.9 மில்லியன் மக்கள் வெளிநாட்டவர்கள். அதிலும் 1.2 மில்லியன் மக்கள் சிரியர்கள்.

2015ம் ஆண்டில் மட்டும் 13லிருந்து 17க்கு இடைப்பட்ட வயதில் ஜோர்டானில் வசித்துவரும் அனைத்து சிரியாப் பெண்களில் கிட்டத்தட்ட 44 சதவீதம் பேர் திருமணம் செய்து கொண்டதாக ஆய்வு தெரிவிக்கிறது. 2010 இல் இது 33 சதவீதமாக இருந்தது. இளம்பருவத் திருமணம் வறுமையில் கொண்டுபோய்விடும். பெரும்பாலான சிரியாப் பெண்கள் கல்வியை இழக்கவும் காரணமாகிவிடும். இது அகதிகளுக்கும் அவர்களை ஏற்றுக்கொண்டுள்ள ஒரு நாட்டுக்கும் ஏற்பட்டுள்ள ஒரு மோசமான போக்கு என்று பல ஆண்டுகளாக நாட்டைவிட்டு வெளியே வாழ விரும்பும் சிரியர்களோடு ஐ.நா. அதிகாரிகள் மற்றும் ஜோர்டானிய அதிகாரிகள் விளக்கம் தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகம் முழுவதும் 16 நாடுகளில் ஐநா அமைதிப்படை செயல்பட்டு வருகிறது. இதில் மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில், பெருமளவிலான படையினர் நிலைகொண்டுள்ளனர். இந்நாட்டிலுள்ள அமைதிப் படையினரே அதிக ஆபத்துக்களையும் இழப்புக்களையும் சந்தித்து வருகின்றனர். இதில் ஏராளமான படையினர் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

இதுஇவ்வாறிருக்க, மாலிக்கு அருகிலுள்ள பர்கினோ ஃபாசோ நாட்டில் நடந்த தாக்குதலில் 18 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இரு உந்துருளிகளில் வந்த பயங்கரவாதிகள் உணவு விடுதியில் வெளியில் இருந்து உணவருந்திக் கொண்டிருந்தவர்கள் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலிலேயே இவர்கள் உயிரிழந்தனர். விரைந்து வந்த சிறப்பு அதிரடிப்படையினர் உந்துருளியில் வந்த இருவரையும் சுட்டுக்கொன்றனர். கொல்லப்பட்டவர்களில் ஒருவர் பிரான்ஸ் நாட்டை சேர்ந்தவர்.

ஐ.எஸ். தீவிரவாதிகளாக இவர்கள் இருக்கக் கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது. தாக்குதலை தொடர்ந்து அப்பகுதியில் பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டனர். முன்னதாக கடந்த 2016-ம் ஆண்டு ஜனவரி மாதம் இதே போன்று உணவு விடுதி ஒன்றில் நடத்தப்பட்ட தாக்குதலில் 30 பேர் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பர்கினோ ஃபாசோ நாட்டில் ஐ.எஸ்., அல்-ஹைதா உட்பட பல்வேறு பயங்கரவாத குழுக்கள் இயங்கி வருகின்றன. இந்த குழுக்கள் அயல் நாடான மாலி அருகே வடமேற்கு எல்லையில் செயல்படுகின்றன. இவர்கள் பர்கினோ ஃபாசோவில் தாக்குதல் நடத்திவிட்டு மாலிக்கு தப்பி சென்று விடுவது வழக்கம்.

இதேவேளை, சஹாரா பாலைவன பிரதேசத்தில் தீவிரவாதிகள் பரவலாக பலம் பெற்று வருவதையே காட்டுவதாக வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சுவிசில் பணம் பதுக்குபவர்களுக்கு வருகிறது ஆபத்து!

சுவிஸ் நாட்டு வங்கிகளில் கறுப்பு பணத்தை பதுக்கும் நபர்கள் பற்றிய தகவலை உடனடியாக அந்நாடுகளுக்கு வழங்கும் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் வகையில், அது தொடர்பான அரசாணையை சுவிச்சர்லாந்து அரசு அண்மையில் வெளியிட்டுள்ளது. இதன் மூலம், அந்நாட்டில் இனிமேல் சட்ட விரோதமாக கறுப்பு பணத்தை போடும் வெளிநாட்டவர்கள் தங்கள் நாட்டு அரசிடம் சிக்குவார்கள்.

உலகளவில் பல்வேறு நாடுகளை சேர்ந்த பண முதலைகள், சட்ட விரோதமாக சம்பாதிக்கும் கறுப்புப் பணத்தை சுவிஸ் நாட்டு வங்கிகளில் பதுக்கி வருகின்றனர். அந்த நாட்டு சட்டம் அவர்களுக்கு பாதுகாப்பு அரணாக இருப்பதே அதற்கு காரணம். தனது நாட்டு வங்கிகளில் பணத்தை முதலீடு செய்பவர்கள் பற்றிய தகவலை சம்பந்தப்பட்ட நாடுகளுடன் சுவிஸ் பகிர்ந்து கொள்வது கிடையாது. தற்போது, சர்வதேச நாடுகள் மற்றும் உலக அமைப்புகளின் நிர்ப்பந்தம் காரணமாக, இந்த விதி முறையை அந்த நாடு தளர்த்தியுள்ளது.

கறுப்புப் பணம் போட்டுள்ள நபர்கள் பற்றிய தகவல்களை சுவிஸ் அரசிடம் இருந்து பெறுவதற்கு பல்வேறு நாடுகளும் பல ஆண்டுகளாக பெரும் முயற்சி மேற்கொண்டு வருகிறன. பல்வேறு நாடுகளின் கோரிக்கையை தொடர்ந்து, இரகசிய தகவல் பாதுகாப்பு விடயத்தில் விதிமுறைகளை மாற்றிக்கொள்ள சுவிஸ் அரசு சம்மதித்தது. அதன்படி, சுவிஸ் வங்கியில் கறுப்பு பணம் பதுக்கு வோரின் தகவல்களை 40 நாடுகளுடன் தாமாக பகிர்ந்து கொள்ளும் வகையில், தானியங்கி தகவல் பரிமாற்ற வசதி'யை சுவிஸ் அரசு கடந்த யூன் மாதம் அறிவித்தது.

இதைத்தொடர்ந்து, நிதிச்சேவை கணக்கு தொடர்பான விபரத்தை தானியங்கி தகவல் பரிமாற்றம் மூலம் மேற்கொள்ள உள்ளதாக சுவிஸ் நாட்டு அரசிதழில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, சுவிஸ் வங்கியில்

குறிப்பிட்ட 40 நாடுகளில் உள்ள யாரும் பணம் முதலீடு செய்தால் வங்கியில் இருந்து உடனடியாக அந்தந்த நாடுகளுக்கு தகவல் தானாகவே சென்று விடும். இந்த புதிய வசதி 2018ம் ஆண்டு தொடங்கப்பட உள்ளது. எனினும், முதல்கட்ட தகவல் 2019ம் ஆண்டு இந்நாடுகளுக்கு கிடைக்கும். இது எப்போது செயல்படுத்தப்படும் என்ற திகதி விவரம் விரைவில் அளிக்கப்பட உள்ளது. தானியங்கி தகவல் பரிமாற்ற வசதியின் மூலம், சந்தேகத்துக்குரிய கறுப்பு பண விவரங்கள் சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு சட்ட வரம்புகளுக்கு உட்பட்டு உடனடியாக அளிக்கப்பட உள்ளது. இந்த தகவல் பரிமாற்றம் மிக இரகசியமாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வங்கித் தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கு வகை செய்யும் ஒப்பந்தத்துக்கு அந்நாட்டைச் சேர்ந்த முக்கிய எதிர்க்கட்சி எதிர்ப்பு தெரிவித்துள்ளது. சுவிட்சர்லாந்து நாட்டின் முக்கிய எதிர்க்கட்சியான சுவிஸ் மக்கள் கட்சி இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்ட அறிக்கையில், சுவிட்சர்லாந்து நாட்டில் வங்கிக் கணக்கு வைத்திருக்கும் வெளிநாட்டினரின் விவரங்களை சம்பந்தப்பட்ட நாடுகளுடன் பகிர்வது என்பது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும். இது, மற்ற நாடுகளில் வசிக்கும் சுவிட்சர்லாந்து நாட்டினருக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, வங்கி விவரங்கள் பகிர்வு ஒப்பந்தத்தை இடைநிறுத்த வேண்டும் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

'ஸ்கை டு ரூத்' என்ற அந்த நிறுவனம், செயற்கைக்கோள் படங்களின் உதவியுடன் ஆய்வு செய்து வெளியிட்டுள்ள அறிக்கையில், சுமார் 34,000 பரல் மசகு எண்ணெய் கடலில் கலந்திருக்கலாம் என்று தெரிவித்துள்ளது. உலகின் 6வது மிகப் பெரிய எண்ணெய் வளத்தைக் கொண்டுள்ள குவைத், தனது கடலோரப் பகுதியில் மசகு எண்ணெய் கசிவதாகவும், எண்ணெய்க் கப்பல் ஒன்றிலிருந்து அந்தக் கசிவு ஏற்பட்டிருக்கலாம் என்றும் தெரிவித்தது.

காஸா எல்லையில் 60 கி.மீ. சுரங்க அரண்!

காஸாவுடனான எல்லையையொட்டி, பூமிக்கு அடியில் 60 கிலோ மீற்றர் நீள சுரங்க அரண் சுவற்றை அமைக்கும் பணியை இஸ்ரேல் தொடங்கியுள்ளது. சுரங்கப் பாதை வழியாக எல்லை தாண்டி ஊடுருவ முயல்பவர்களைக் கண்டறிய உதவும் சாதனங்கள் உள்ளிட்ட அதிநவீன கருவிகள் இந்த அரணில் பொருத்தப்பட்டிருக்கும். காசாவில் இருந்து இனிச் சுரங்கம் தோண்டி வந்தால் இந்த அரணுக்குள்தான் அவர்கள் நுழையவேண்டும்.

3 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற காஸா போரின்போது, சுரங்கப் பாதை வழியாக ஹமாஸ் பலமுறை இஸ்ரேலுக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்தியிருந்தது. இது இஸ்ரேல் மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியிருந்தது. இதனால், எதிர்காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகளைத் தடுக்கும் விதமாகவே இந்த சுரங்க அரண் அமைக்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

10 வயது சிறுமி எட்டு மாதக் கர்ப்பம்!

அர்ஜெண்டினாவில் 10 வயது சிறுமி ஒருவர் கர்ப்பமடைந்ததால், அச்சிறுமியின் பெற்றோர் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர். அர்ஜெண்டினாவைச் சேர்ந்த 10 வயது சிறுமி ஒருவர் தனக்கு வயிற்று வலி ஏற்படுவதாக பெற்றோரிடம் கூறியுள்ளார். இதனால் பெற்றோர் அச்சிறுமியை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

சிறுமியை பரிசோதனை செய்த மருத்துவர்கள், அதிர்ச்சியடைந்துள்ளனர். ஏனெனில் சிறுமி எட்டு மாத கர்ப்பமாக இருந்துள்ளார். ஆனால், கர்ப்பமாக இருப்பதை அந்த சிறுமி உணரவில்லை. அர்ஜெண்டினாவில் கருகலைப்பு செய்வது சட்டப்படி குற்றமாகும். பாலியல் துன்புறுத்தலால் கர்ப்பமடைந்தவர்களின் உயிருக்கு

பாதிப்பு ஏதும் இல்லையெனில் கருகலைப்புக்கு அனுமதி வழங்கப்படும். சிறுமியோ தற்போது 8 மாத கர்ப்பம் என்பதால் மருத்துவர்கள் கருக்கலைப்பு செய்ய முடியாது என தெரிவித்துள்ளனர். மேலும் சிறுமி இந்த நிலைமைக்கு வருவதற்கு காரணம் 23 வயதுடைய அவரது உறவினர் ஒருவர் தான் எனவும் அவரை காவல்துறையினர் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரபாகர...

உறுதி, விடாமுயற்சி, இனத்தின் மனோவலிமையை எப்போதும் உச்சத்தில் கொண்டுபோக முயற்சித்தல், தேடல், மானுடத்தின் மீதான கருணை, நிலைமைகளை மிகத் துல்லியமாக கணித்தல், எல்லோருக்குள்ளும் உறங்கி கிடக்கும் திறமைகளை வெளிக் கொண்டு வருதல், எந்த நிலையிலும் சோர்வுக்கு ஆட்படாமல் இருத்தல், எல்லோருடைய கருத்துகளையும் கவனமாக செவி மடுக்கும் பண்பு, இருக்கின்ற வளங்களை வைத்து சிகரங்களை உருவாக்கும் அபார முயற்சி, இப்படி இன்னும் ஆயிரமாயிரம் பண்புகளை எழுதலாம் அத்தனையும் சேர்ந்ததுதான் பிரபாகரம்.

முதன் முதலில் இந்த பிரபாகரம் என்ற சொல்லை நான் கேட்டது ஒரு ஐரோப்பியரின் வாயில் இருந்தே. சுவீடன் நாட்டு உப்சலா பல்கலைகழக பேராசிரிய ரான பீற்றர் சால்க் அவர்கள் 90களின் நடுப்பகுதியில் டென்மார்க் கோ்னிங் தமிழர் டெனிஸ் நட்புறவு சங்க கூட்டத்தில் சிறப்புரை ஆற்ற வந்திருந்தார். அப்போது அவர் தேசியத்தலைவரை பல தடவைகள் சந்தித்து அவர் பற்றிய நிறைய ஆச்சர்யங்களுடன் இருந்தார். பேராசிரியர் பீற்றர் சால்க் தமிழ் கதைக்கவும் கூடியவர் ஓரளவுக்கு. அதிலும் சிலப்பதிகாரம் பற்றிய பாடல்கள் தெரியும் அவருக்கு. அப்போதுதான் அவர் பிரபாகரம் என்ற வார்த்தையை சொல்லி அதன் தத்துவ பின்புலம் வெளிப்படுத்தப்பட வேண்டிய அவசியம் பற்றியும் சொன்னார்.

அதன் பிறகு 2009 க்கு பிறகு அதே வார்த்தையை வாஞ்னொலியாக தாசியஸ் அவர்கள் சொல்லி பிரபாகரம் என்ற தலைப்பில் கவிதை செய்தார். இப்படியாக வந்ததே இந்த பிரபாகரம். ஆனால் தலைவரின் முழுமையை சொல்ல இந்த வார்த்தை ஓரளவுக்குத்தான் தகுந்தாகநினைக்கிறேன். அதனால் இந்த தொடருக்கும் பிரபாகரம் என்பதே தலைப்பு.

பிரபாகரம் என்பதன் முக்கியமான பண்பே அதனது தேடல்தான். அவர் இந்த போராட்ட களத்தினில் 72ல் இறங்கும்போது எந்தவித வழிகாட்டும் படகையோ திசைகாட்டி எதுவுமே அவர் முன்னால் இருந்திருக்கவில்லை. அதிலும் 1973ல் அவரை தேடி அவர் வீட்டுக்கு சிங்களதேச காவல்துறை வந்து அவர் முழுமையாக வீட்டைவிட்டு வெளியேறிய நாளில் மனிதர் மற்றும் அவர்களது மாறுபடும் குணாம்சங்கள், குரூரங்கள் என்று எதுவுமே அறிந்திராத ஒருவராகவே அவர் தலைமறைவுப் போராளியாகிறார். அவரது துணையாக அவருடன் கூட இருந்தது அதுவரை அவர் தனது தேடலில் வாசித்து இருந்த உலக வரலாற்று புத்தகங்களும், இதிகாசங்களும், மானுட விடுதலைக்கான போராளிகளின் சரித்திரங்களுமே.

தமிழர்கள் தொடர்ந்து வஞ்சிக்கப்படுகிறார்கள், ஒடுஒட தாக்கப்படுகிறார்கள், உரிமைகள் பறிக்கப்பட்டு அவமானப்படுத்தப்படுகிறார்கள். இதற்கு ஒரு தீர்வாக தாயக கோட்பாட்டை அவர் முன்வைத்து ஓர் ஆயுதப் போராட்ட அமைப்பை உருவாக்குகிறார் என்றால் அதுவரை அவர் தேடிய, அவர் காதுகளால் கேள்விப்பட்ட அனுபவ அறிவை வைத்தே.

ஆனால் அவருக்கு ஒரு விடயம் மிகத்தெளிவாக விளங்குகிறது. மனிதன் இறுதிவரை தேடலுடன் இருந்தே ஆக வேண்டும். உயிர்வாழ்தலுக்கான போராட்டத்துக்கு அது தேவையோ இல்லையோ சுதந்திர மனிதனாக வாழ விரும்பும் ஒரு அமைப்பை நடாத்தும் ஒருவர் ஒவ்வொரு கணமும் தேடலுடன் இருந்தே ஆக வேணும் என்பதே அவரது முதலாவது பாடம்.

அவரை சந்தித்திருந்த தமிழக நிரைப்பட இயக்குநர் மகேந்திரன் மிகவும் மெய்சிலிர்ப்புடன் பதிந்த ஒருவிடயம், உலக விடயங்கள் முதல் கலை சம்பந்த மான புதிய உலக முயற்சிகள் வரை தலைவர் மிகவும் துல்லியமாக அறிந்து வைத்திருக்கும் விதம் பற்றியும் அதனை உகந்த நேரங்களில் உரையாடலில் வெளிப் படுத்தும் விதமும் விடயமும் இயக்குநர் மகேந்திரனை வியப்புக்கு உள்ளாக்கி இருந்தது. இதனை போலவே அவரை சந்தித்த ஒவ்வொருவருடனும் அவரவர் சார்ந்த துறைகள் பற்றி அவர்களுக்கே இல்லாத நுண் அறிவும் தெளிவான பார்வையும் தலைவருக்கு இருந்ததை அனைவரும் மிகுந்த வியப்புடனே பதிகிறார்கள்.

இங்கேதான் அவரது மிக முக்கியமான குண இயல்பான தேடல் என்பதன் வீரியம் தெரிகிறது. தனது போராட்டத்துக்கான மிக முக்கியமான கருவியாக அவர் முடிவு செய்தது தேடலையே.

தேடல் என்பது வெறுமனே புத்தக வாசிப்பு மட்டுமே என்று இருக்காமல் துறை சார் அறிவுகளை தேடி தேடி பெற்றுக்கொண்டு அதனை விடுதலைப் போராட்டத்தினுள்ளும் உள்வாங்கினார்.

உதாரணத்துக்கு ஒரு சம்பவம். 86ம் ஆண்டின் ஒரு பொழுதில் தலைவர் திடீரென நெல்லியடிப் பகுதியில் முக்கியமாக நின்றிருந்த போராளிகளிடம் தனது விருப்பம் ஒன்றை தெரிவிக்கிறார். வதிரி இரும்பு மதவடி பகுதியில் அப்போது வசித்து வந்த பேராசிரியர் துரைராஜா அவர்களை சந்திக்க வேணும் என்பதே அவரது விருப்பம். அப்போது நின்றிருந்த சில போராளிகள் தாம் போய் பேராசிரியர் துரைராஜாவை அழைத்து வருவதாக சொன்னபோது தலைவர் அவர்களை கண்டித்துவிட்டு, தானே நேரில் அவரது வீட்டுக்கு போய் சந்திக்க விரும்புவதாக சொல்லச் சொன்னார்.

இங்கேதான் அவரது மிக முக்கியமான குண இயல்பான தேடல் என்பதன் வீரியம் தெரிகிறது. தனது போராட்டத்துக்கான மிக முக்கியமான கருவியாக அவர் முடிவு செய்தது தேடலையே....

போராளிகள் போய் சொல்லிய சில நிமிடங்களில் தலைவரின் வாகனம் அவர்களது வீட்டு வாசலில் நின்றதாம். தலைவரே தமது வீடு தேடி வந்திருந்தது பேராசிரியர் துரைராஜாவுக்கும் அவரது மனைவிக்கும் மகிழ்வாகவும் வியப்பாகவும் இருந்தது. பல மணித்தியாலங்கள் அந்த வீட்டில் இருந்து நிறைய கதைத்தார் தலைவர்.

அதன் பின்பான காலங்களில் பேராசிரியர் துரை ராஜா யாழ் பல்கலைகழகம் மாற்றலாகி வந்தவுடன் தேசிய விடுதலையின் மிக முக்கியமான பல பணிக ளில் தன்னை ஈடுபடுத்தியதை வரலாறு சந்தித்திருக் கிறது. பின் நாட்களில் ஏற்பட்ட கட்டமைப்பு வளர்ச்சிக்கு அந்த நாட்களில் பேராசிரியர் துரைராஜா எழுதிய முன்னுரை மிக முக்கியமானது..

இதனை போலவே காத்தவராஜர் கூத்தில் பிரபலமான ஒரு அண்ணாவியார் ஒருவரை சந்திக்கும் தருணத்தில் அவருடன் அண்ணாவியார் வீட்டுக்கு போக சந்தர்ப்பம் கிடைத்தது 83ல். அப்போது பெரிதாக வளர்ந்திராத காலம். வளருவோம் என்ற நம்பிக்கைகூட பெரிதாக இருந்திருக்கவில்லை. ஆனாலும் இரவு முழுதும் அந்த அண்ணாவியாருடன் தலைவர் எனைக்காமல் கூத்து கலையின் நுணுக்கங்கள் குறித்தும் மேடை அமைப்பு குறித்தும் கதைத்து கொண்டே இருந்தார்.

இந்த இனத்தின் தொன்மை வரலாறு கலைகள் குறித்தும் உலகத்தின் அத்தனை மாற்றம் குறித்தும் அவரது தேடல் நீண்டபடியே இருந்தது.

அதனால்தான் வெறும் ஒற்றை கைத்துப்பாக்கியுடன் ஆரம்பித்த ஒரு போராட்டத்தை விமானப் படை, கடற்படை உள்ள ஒரு விடுதலை பெருஞ் சேனையாக மாற்றவும் உலகம் முழுதும் தமிழர்களின் அரசியல் எழுச்சியாக ஒரு கோட்பாட்டை வரையவும் முடிந்தது அவரால்.

அதுவே பிரபாகரமாக இன்றும் தொடர்கிறது. இனியும் தொடரும். தமிழ் உள்ளவரை, தமிழ் இனம் உள்ளவரை, மானுடத்தில் சுதந்திர உணர்வு உள்ள வரை பிரபாகரம் காலம் காலமாக நீளும்.

யாழில் குற்றங்களில் ஈடுபடு...

காவல்துறையினருடன் சந்திப்பில் ஆராயப்பட்ட விடயங்களின் நடைமுறை முன்னேற்றங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இச் சந்திப்பினை தொடர்ந்து பத்திரிகையாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்ட விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த மாதங்களில் இளைஞர் குழுக்களால் மேற்கொள்ளப்பட் சமூக விரோத குற்றச் செயல்கள் தொடர்பாக இக் சந்திப்பில் ஆராயப்பட்டது குறிப்பாக கடந்த ஒரு மாத காலத்தில் இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை கைது செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகளை அடுத்து ஆவா குழுவினை சேர்ந்த பலர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுகளின் அடிப்படையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை தெரியவருகின்றது.

கடந்த முறை காவல்துறையினருடன் மேற்கொண்ட சந்திப்பில் குற்றச் செயல்களை தடுக்க நடவடிக்கை எடுக்கப்ட வேண்டும் என கூறப்பட்டிருந்த நிலையில் அந் நடவடிக்கையில் தற்போது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

குற்றச் செயல்களில் ஈடுபடுவர்களுடன் தொடர்புட்ட மற்றும் இங்குள்ளவர்களுக்கு நிதி வழங்குகின்ற நபர் ஒருவர் தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளது. இது தொடர்பாக சர்வதேச காவல்துறையினருக்கு தகவல் வழங்கவுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்திருந்தனர். அத்துடன் குறித்த நபரை கைது செய்வது மற்றும் மேற்கொண்டு எடுக்கப்ட வேண்டியவை நடவடிக்கைகள் தொடர்பில் காவல்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர் என்றார்.

சிங்கள மயமாகும் கீழக்குப்...

எனினும் பல்கலைக்கழக வளாகத்தில் நிலைகொண்டுள்ள சிறீலங்காக் காவல்துறையினர் இவர்களின் நடவடிக்கையைத் தடுப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என கல்வி சாரா ஊழியர்களின் சங்க உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இவ்வாறான நடவடிக்கையில் தமிழ் மாணவர்கள் ஈடுபட்டிருந்தால் பல மாணவர்கள் தாக்கப்பட்டிருப்பார்கள். அத்துடன் பலர் கைது செய்யப்பட்டிருப்பார்கள். சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் சிங்கள மாணவர்கள் என்பதனால் சம்பவ இடத்திற்கே காவல்துறையினர் வரவில்லை எனவும் சங்க ஊழியர்கள் பேசிக் கொள்வதை அவதானிக்க முடிந்தது.

கலைப்பீடம் தவிர ஏனைய பீடங்களுக்கு அதிகளவான சிங்கள மாணவர்களை தெரிவாகி வருகின்றனர். அதுமாத்திரமல்ல, இவ்வாறு வரும் மாணவர்கள் பல்வேறு அரசியல் கட்சிகள், இராணுவ மற்றும் காவல்துறை புலனாய்வுப் பிரிவினருடன் நெருக்கமானவர்கள். இவர்களினால் பல தடவைகள் பல்கலைக்கழக நிர்வாகத்துடன் மோதல்களிலும் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பாக எவ்விதமான நடவடிக்கை எடுக்க வில்லை. பல்கலைக்கழகத்தினுள் காவல்துறையினர் முகாமிட்டிருப்பதை கண்டித்தும் அவற்றை அகற்றக் கோரியும் பல தடவைகள் தமிழ் மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் எனினும் பயனளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னரும் உபவேந்தரின் அலுவலகத்தை முற்றுகையிட்ட சிங்கள மாணவர்கள் அங்கு உணவு சமைத்து சாப்பிட்டதுடன், அவர்களின் உடுப்புக்களையும் சலவை செய்து வெயிலில் காயப் போட்டனர். இது தொடர்பாக காவல்துறையினரோ அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினரோ எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எதுஎவ்வாறாக அமைந்தாலும், ஆட்சிக்கு வரும் கொழும்பு அரசாங்கங்கள் கிழக்கில் நிலைபெற்றுள்ள வந்தாறுமூலை பல்கலைக்கழகம், திருகோணமலை வளாகம், சுவாமி விபுலாந்த இசைநடனக் கல்லூரி ஆகியவற்றில் சிங்களத்தின் ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருப்பதுதான் இங்கு முக்கியமான விடயமாக வுள்ளது. இவற்றுக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எனத் தெரிவிக்கும் கூட்டமைப்பினரும் கூட எவ்விதமான எதிர்ப்புக்களையும் தெரிவிக்காது அவர்களுடன் சேர்ந்து ஊதுகுழலாகவுள்ளனர் என்பதுதான் மனவேதனையைத் தருகிறது.

நெஞ்சொிச்சலுக்கு என்ன....

அதுமட்டுமின்றி, தண்ணீர் குடிப்பதன் மூலம் உடலின் செயல்பாடுகள் அனைத்தும் சீராக இருக்கும். லிகோபக்டர் பைலோரியா எனும் கிருமி, எரிச்சலை ஏற்படுத்தும் அமிலத்தை அதிகம் சுரக்க வைக்கிறது. எனவே கற்றாழையில் வரும் பானத்தைக் குடித்து வந்தால், அந்தக் கிருமி அழிக்கப்பட்டு, நெஞ்சொிச்சல் தடைபடும். வாழைப்பழத்தில் ஆன்டாசிட்கள் உள்ளன. எனவே தினமும் வாழைப்பழத்தை சாப்பிட்டு வந்தால் நல்லது. கால்சியம் உடலில் அதிகம் இருந்தால், எரிச்சலை உண்டாக்கும் அமிலம் சுரப்பதை தடுக்கும். எனவே கல்சியம் உற்பத்திக்கு உதவும் பால் சாப்பிடுவது நல்லது. இப்படி சில உணவுகள் மூலமும் நெஞ்சொிச்சலை குணப்படுத்தலாம்.

கரையான் புற்று ஒரு...

இந்த சீரான வெப்பநிலையில்தான் அவற்றின் உணவான குறிப்பிட்ட வகை பூஞ்சைகளைக் கரையான்களால் உருவாக்கிக்கொள்ள முடியும். அதற்காகவே இந்த வெப்பநிலையைப் பேணுமாறு வீட்டைக் கட்டுகின்றன. சில தாவரங்களைக் கொண்டு, கரையான்கள் இந்த வசதியை அந்த அறைகளுக்குள் ஏற்படுத்தியிருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். உள்ளே எண்ணற்ற தளங்களும், ஆயிரக் கணக்கான அறைகளும், ராஜா, ராணிக்கென சகல வசதிகளும் நிறைந்த பிரத்தியேக அறையும் உள்ளன. இவையெல்லாம் கட்டமைப்பில் மிக நேர்த்தியாகவும் இருக்கும். உள்ளே நடைபாதைகளும், சந்திப்பிற்கு வசதியான மண்டபங்களும் கட்டடக்கலை நுணுக்கத்துடன் அமைக்கப்பட்டிருக்கும். உலக கட்டடக்கலைத் தொழில்நுட்பவியலாளர்களைக்கூட வியப்பில் ஆழ்த்தும் இந்தக் கரையான் புற்றுக்கள் என்றால் அது மிகையில்லை.

RAMI COIFFURE

உங்கள் எண்ணம் போல் சிகை அலங்காரம் செய்து கொள்ள

Drancy RER தொடருந்து நிலையத்திற்கு அருகாமையில்

11-13 RUE MORIN, 93700 DRANCY

Port: 06 27 93 63 44

பாரீஸ் அறிவாலயம்

Paris Arivalayam

7, rue Perdonnet, 75010 Paris

Metro : La chapelle Tel: 01 44 72 03 34

இலங்கை இந்திய புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்கள், மேலும் நவீன தேடலுக்கான அனைத்து வெளியீடுகள் பாடசாலை அலுவலகத் தேவைக்கான உபகரணங்கள், சுயமுன்னேற்ற நூல்கள் அனைத்தும் ஒரே இடத்தில் வாங்கிட இன்றே செல்ல வேண்டிய இடம்.

Aubervilliers Quatre chemins ல் ஒரு தமிழ்க்கடை

Anna Marché

அனைத்து மளிகைப்பொருட்களுக்கும்...

மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்

V.I.P Sarl 4 rue Ernest Prévost, 93300 Aubervillers. Tél. : 07 52 94 50 65

J.K.S ALIMENTATION GENERALE

SPÉCIALITÉ AFRO - ASIATIQUE

Ria Sigue WESTERN UNION WU MoneyGram

இலங்கை இந்திய மளிகைப் பொருட்களை உங்கள் Le Bourget இல் மலிவாகவும் தரமாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளுங்கள்

52, avenue Jean Jaures 93350 Le Bourget

RER B : Le Bourget

Tel: 01 48 51 71 41

09 66 97 71 41

jks.alimentation@gmail.com

தினமும்: 9h00 - 21h00

DEVI Textiles & Tailors

சாரி பிளவுஸ் 30 நிமிடங்களில் தைத்துத் தரப்படும்

ஆண் பெண் இருபாலாருக்கும் அனைத்து விதமான ஆடைகளும் மற்றும் உங்கள் வசதிக்கு அமைவான தோல்பைகளும் உங்கள் எண்ணத்திற்கேற்ப வடிவமைத்துக் கொடுக்கப்படும்.

29, Bld de la Chapelle, 75010 Paris

Tél: 09 51 01 85 59 - Suresh: 07 81 29 86 50

M°: La Chapelle (ligne 2)

Port : 06 13 06 20 29

Tél : 01 39 80 85 23

Ragawa Tailor

அனைத்து விதமான ஆடைகளும் உங்கள் வசதிக்கேற்ப வடிவமைத்துக் கொடுக்கப்படும்.

01 40 35 14 77

190 Rue Fbg St. Denis 75010 Paris

M°: Gare du Nord (நடந்து செல்லலாம்)

பரிஸ் லா சப்பலில்

AMBAAL STORE

பல் பொருள் அங்காடி

Tél: 01 42 05 41 85

192, rue du Fbg.st.Denis 75010 Paris

VICHNESH SHOP

அனைத்து வகையான மளிகைப் பொருட்கள் மற்றும் அனைத்து நாடுகளுக்கான தொலை பேசி அட்டைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்

8 Esplanade de l europe 95100 Argenteuil

Tel: 01 39 81 35 60

பாலன்ஸ் சலூன்

தமிழர்களால் நடத்தப்படும் ஆண்கள் அழகு நிலையம்

29 rue Philippe de Girard, 75010 Paris. M° La Chapelle

Tél: 06 63 01 75 80

Neuilly sur marne, Meaux, Torcy, Lagny

வாழ் மக்களின் வசதிக்கேற்ப Chelles மாநகரிலே

EURO SAGEN

மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள் மற்றும் கடலுணவு வகைகள்

Ria MoneyGram. money transfer WESTERN UNION MONEY TRANSFER

Import & Export

62 av du Maréchal Foch, 77500 Chelles

Tél: 0160202947 | Port: 0667204000

தரமான கடலுணவு வகைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

Ocean Indien

30 € ரோவுக்கு மேல் பொருட்கள் வாங்கினால் 5% சிறப்புக்கழிவு

195, Rue du fbg St,Denis, 75010 Paris - FRANCE

Tél - 01 42 09 31 50 Fax - 01 42 09 31 60

பிரெஞ்சு அரசினால்

அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்!

திரு.சகாதேவன்

SAGADEVAN PIERRE

எமது மொழிபெயர்ப்புக்கள் அனைத்து அரசு நிறுவனங்களிலும் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும். எம்மிடம் நேரடியாக வருபவர்களுக்கு சலுகையளிக்கப்படும்.

தொடர்பு கொள்ள

சகாதேவன் மொழிபெயர்ப்பு நிலையம்

(Leader Price கடைக்கு அருகாமையில்)

26, rue Philippe de Girard,75010 Paris

Tél: 01 46 07 50 23 Mobile: 06 81 34 41 06

E.mail: saga_de_van@yahoo.fr

S.P.Raju Jewellery

பழைய நகைகளுக்கு புதிய நகைகள் மாற்றுக்கிடைக்கும்!!!!

199 rue du Fbg St Denis, 75010 Paris

Tél: 01 58 20 17 33

13 rue cail, 75010 Paris

Tél: 01 46 07 43 42

சுவர்ண மஹால்

SWARNA MAHAL

பழைய நகைகளைக் கொடுத்து அதற்கு பெறுமதியான புதிய நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்!

ஒட்ர் நகைகள் எதுவாயினும் ஒரு கிழமைக் தவணையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்!!

www.swarnamahal-france.com

122 Av Paul Vaillant Couturier 93120 La Courneuve

Tél - 01 48 36 40 75 Port - 06 50 17 51 91 / 06 21 23 87 25

Email: swarnamahal93120@gmail.com

Mohan
Jewellery Mart

பழைய நகைகளைக் கொடுத்து
புதிய நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்

VISA Aurore

3/4 Fois sans Frais
(Piéce d'identité + Rib + C.B)

201,rue du fg. St. Denis 75010 Paris
Tel: 01 42 05 65 26 Fax: 09 50 31 01 82
Mo: La Chapelle / Gare du Nord

ஈழமுரசு®

உடலுக்குடன்
இணையத்திலும்...

www.eelamurazu.com

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
ஈழமுரசில் வெளியிட வேண்டுமா?

விளம்பரங்கள்,
அறிவித்தல்கள்,
துயர்பகிர்வுகள்,
சட்டரீதியான அறிவித்தல்கள்,
விற்பனை, வாடகை சிறு அறிவித்தல்கள்

சகல பொதுச்சங்கங்கள் மற்றும்
தமிழ்ச்சங்கங்களின்
நிகழ்வுகளின் அறிவித்தல்கள்
இலவசம்*

பிரான்சில் நடக்கும் துயர்பகிர்வுகளின் அறிவித்தல்கள் இலவசம்
*நிபந்தனைக்குட்பட்டது

mediacentre
BP 40
93141 Bondy PDC,
France
Port: 00 33 781 808 116
Email: centredemedia@gmail.com

செல்லில் - உங்கள் அபிமான பேபியின்
புதிய உதயம்

அபி சலூன்

கொடரந்து நிலையத்தில் இருந்து 2 நிமிட நடை தூரம்

11 avenue Maréchal Foch
77500 Chelles
07 82 31 73 94
07 51 28 81 34

கபறினா இறைச்சிக்கடை

தினமும் உடன் இறைச்சி
வகைகளையும்,
விசேடமாக
ஆட்டிறைச்சிப் பங்கையும்
பெற்றுக்கொள்ள...

BOUCHERIE GABARINA

62, Rue Louis Blanc
75010 Paris
Mo : La Chapelle Ou Gare du Nord
Tel : 01 40 34 05 35
Fax : 01 40 34 09 76

207, rue fbg st Denis
75010 Paris
Tel : 01 46 07 46 35
Fax : 01 46 07 41 30

ஒரே தடவையில் தீர்த்துக் கொள்ளுங்கள்!

உணவகங்கள் – கடைகள் – தொழிற்சாலைகள் போன்றவற்றில்

DIAPHANECONCEPT
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
N° de certificat 10KX50000-4107

- எலிகள் - சுண்டெலிகள்
- கரப்பான் பூச்சிகள்
- தொல்லைகொடுக்கும் பூச்சிகள்

Tél.: 01 60 07 34 29

அனைத்திற்கும் சிறந்தவல்லுனர்கள் மூலம்
ஒரே தடவையில்
பயன்பெற்றிட நாடுங்கள்

14 Rue Charles V,
75004 Paris.

சுதா / விமல் : 06 34 18 80 04